**தமிழ்நாடு அரசின் மாண்புமிகு நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாக ராஜன் அவர்கள், 2021–2022 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு–செலவுத் திட்டத்தை, 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 13 ஆம் நாள் சட்டமன்றப் பேரவை முன் வைத்து ஆற்றும் உரை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!**

2021–22 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளை இந்தப் பேரவையில் முன்வைக்கும் பெருமைமிகு இத்தருணத்தில் காலத்தை வென்று நிற்கும் அய்யன் திருவள்ளுவரின் குறளை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

*“இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த*
*வகுத்தலும் வல்லது அரசு”*

*(குறள் 385)*

முறையாக நிதி ஆதாரங்களை வகுத்து, அரசாங்கக் கருவூலத்திற்கான வருவாயைப் பெருக்கி, அதைப் பாதுகாத்துத் திட்டமிட்டுச் செலவிடுவதுதான் திறமையான நல்லாட்சிக்கு இலக்கணமாகும்

2) தமிழ்நாட்டின் நிதியமைச்சராக எனது முதல் வரவு செலவுத் திட்டத்தை இந்த அவையில் முன்வைப்பதை நான் பெரும்பேறாகக் கருதுகிறேன். இந்த நல்வாய்ப்பினை அளித்த மாண்புமிகு முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

3) ஆளுநர் உரையின் மீதான பதிலுரையின்போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், முன்னோர்களுக்கு மரியாதை செலுத்தும் வழக்கம் நமது பண்பாடு என்று குறிப்பிட்டிருந்தார். அவரைப் பின்பற்றி நானும் எனது முன்னோர்களுக்கு வணங்கி எனது உரையைத் தொடங்குகிறேன்.

4) திராவிட சித்தாந்தத்தைப் பின்பற்றுபவர்கள் அனைவரும் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் வழித்தோன்றல்கள். மக்களுக்கு ஆற்றும் சேவை, சுயமரியாதையையும் கண்ணியத்தையும் பேணி வருவதன் முக்கியத்துவம், மாநிலங்களின் உரிமைகளையும் மாநில சுயாட்சியையும் நிலைநிறுத்துவது, இவை எல்லாவற்றிற்கும் மேலாக தூய மற்றும் வெளிப்படையான நிருவாகத்தை வழங்குவது ஆகியவற்றை அவர்கள் நம் உணர்வில் ஊட்டி வளர்ந்து வந்துள்ளனர்.

5) இது, மதராஸ் சட்டமன்ற மேலவையின் நூறாவது ஆண்டாகும். பேரறிஞர் அண்ணா கூறியது போல், 1921– ஆம் ஆண்டில், மதராஸ் மாகாணத்தின், முதல் ஆட்சியில் இருந்த நீதிக் கட்சியின் வழித் தோன்றலாக இந்த அரசு வந்துள்ளது. சமூக நீதி, பாலின சமத்துவம், இட ஒதுக்கீடு மூலம் அனைவருக்கும் வாய்ப்புகள் மற்றும் கல்வியின் வாயிலாக முன்னேற்றத்தை, தமிழ்நாட்டு சமுதாயத்திலும், அரசியலிலும் கொண்டு வந்ததில் திராவிட இயக்கத்திற்கு முன்னோடியாக நீதிக்கட்சி திகழ்ந்தது. இத்தகைய மகத்தான பாரம்பரியத்தை பற்றி நாங்கள் பெருமைப்படுகிறோம்.

6) மாண்புமிகு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையின் கீழ், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி, திறன்மிகு, வெளிப்படையான நிருவாகத்தின் மூலம் சிறப்பாகச் செயல்படும் என்று பெரும் நம்பிக்கை வைத்து தமிழ்நாட்டு மக்கள்

வாக்களித்துள்ளனர். தமிழ்நாட்டின் மக்கள் நம்மீது வைத்துள்ள நம்பிக்கைக்கு ஏற்ப சேவையாற்றிட நாம் உறுதியாக உள்ளோம்.

7) **1957 ஆம் ஆண்டிலிருந்து முத்தமிழறிஞர் கலைஞர் அலங்கரித்த இந்த அவையில், இங்கு வைக்கப்பட்டுள்ள முத்தமிழறிஞரின் திருவுருவப்படம் நம்மை வழிநடத்திக் கொண்டிருப்பதாகவும் நான் உணர்கிறேன்.** மாநில சுயாட்சியின் வெற்றி வீரரான முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு எண்ணற்ற சமூக பாதுகாப்புத் திட்டங்களை தீட்டித் தந்துள்ளார். அவருடைய நிருவாகத்திறனும் உயர்தகுதியும் அனைவரின் பாராட்டினைப் பெற்றவையாகும். நமது தலைவர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் அவர்கள், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வாழ்த்துகளைப் பெற்றுள்ளார்.

8) **மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலும் ஆலோசனைகளும் இந்த வரவு-செலவுத் திட்டத்தில் முத்திரை பதித்துள்ளன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தேர்தல் அறிக்கையில் பல்வேறு வாக்குறுதிகளைத் தந்துள்ளார்கள். இந்த வாக்குறுதிகளை நிறைவேற்ற இந்த அரசு கடமைப்பட்டுள்ளது. இந்த வாக்குறுதிகளின் அடிப்படையிலான, தலைநிமிரும் தொலைநோக்குத் திட்ட அறிக்கையில் உள்ள அம்சங்கள் இந்த வரவு செலவுத் திட்டத்தில் அரசுத் துறைகளால் செயல்படுத்தப்படும் திட்டங்களாக வடிவமைக்கப்பட்டுள்ளன.**

9) 2021–22 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகள், இந்த நிதியாண்டின் மீதமுள்ள ஆறு மாதங்களுக்கு மட்டுமே பொருந்தும். கோவிட் பெருந்தொற்றின் இரண்டாம் அலை கடந்த சில மாதங்களாக மிகப்பெரும் அளவில் தாக்கியது. இதனால் சுகாதாரம் மற்றும் பொருளாதாரத்தில் ஏற்பட்ட

விளைவுகள், ஏற்கெனவே கடுமையான நிதி நெருக்கடியில் இருந்த அரசை மேலும் பாதிப்பிற்கு உள்ளாக்கியுள்ளன. எனவே, அடுத்த ஆறு மாதங்களுக்குப் பின் தாக்கல் செய்யவுள்ள 2022–23 ஆம் ஆண்டிற்கான முழு வரவு செலவுத் திட்டத்திற்கு வலுவான அடித்தளம் அமைப்பதே, இந்த திருத்த வரவு செலவுத் திட்டத்தின் முதன்மை நோக்கமாகும்.

10) 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 9ஆம் நாளன்று வெளியிடப்பட்டு, அவை முன்னர் வைக்கப்பட்டுள்ள வெள்ளை அறிக்கை, முந்தைய அரசால் கடந்த 10 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட நிதி நிருவாகத் தவறுகள், அதிகரித்த பற்றாக்குறை, அதனால் ஏற்பட்ட பெருமளவு கடன் சுமையைப் பற்றி தெள்ளத் தெளிவாக விளக்குகிறது. **அரசின் இந்த சரிவை நிறுத்தி, நிதி நிலைமையை சீர்படுத்துவது மக்களுக்கு நாங்கள் அளித்த முக்கிய வாக்குறுதிகளில் ஒன்றாகும். ஒரே நேரத்திலோ அல்லது ஒரே ஆண்டிலோ செய்து முடிக்க இயலாத அளவிற்கு இப்பணி மிகக் கடினமாக உள்ளது. இதற்கு, குறைந்தபட்சம் இரண்டு - மூன்று ஆண்டுகள் வரையிலும் முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட வேண்டும்.**

11) **வெளிப்படைத்தன்மை, சமூக ஈடுபாடு, வல்லுநர்களிடமிருந்து கருத்துரைகள் பெறுதல் மற்றும் உறுதியான நடவடிக்கை ஆகிய நான்கு முக்கிய கூறுகளுடன் கூடிய இந்த அரசு செயல்படும் முறையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெளிவாக வகுத்துள்ளார்கள்.** கோவிட்–19 இரண்டாவது அலையை எதிர்நோக்குவதில் அரசின் நடவடிக்கைகள் இந்த அணுகுமுறையை தெளிவாக எடுத்துக்காட்டியது மட்டுமின்றி, உலக அளவில் அங்கீகரிக்கப்பட்ட முடிவுகள் அரசின் மதிப்பையும் அதிகரித்துள்ளன.

12) எந்தவொரு சிக்கலையும் சரிசெய்வதற்கான முதல்படி அதை அடையாளம் கண்டு அதன் ஆழத்தினைப் புரிந்துகொள்வதாகும். நாம் எதிர்கொள்ளும் சிக்கல்களின் தன்மையையும் ஆழத்தையும் இந்த அரசு புரிந்துகொண்டுள்ளது. உறுதியான, நிலையான அர்ப்பணிப்புடன் சிக்கல்களைத் தீர்க்க நமது அரசு கொண்ட உறுதியையும் இந்த வெள்ளை அறிக்கை காட்டுகிறது. **அதே சமயத்தில் தேர்தல் அறிக்கையில் அளிக்கப்பட்டுள்ள வாக்குறுதிகளுக்கு முன்னுரிமை அளித்து அவற்றை படிப்படியாக செயல்படுத்துவோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதவியேற்ற நாளிலேயே முக்கியத்துவம் வாய்ந்த ஐந்து தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கான உத்தரவுகளை பிறப்பித்தார்கள்.**

13) தமிழ்நாட்டு மக்கள் எங்கள் நோக்கத்தையும், துரிதமாகச் செயல்படும் திறனையும், நன்கு உணர்ந்துள்ளனர் என்பதில் எந்தவொரு ஐயமும் இல்லை. தனது வாக்குறுதிகளை நிறைவேற்றும் விதமாக, இந்த அரசு ஒவ்வொரு குடும்ப அட்டைதாரர்களுக்கும் 4000 ரூபாய் வழங்கியது. மக்களின் தேவையறிந்து, வாக்குறுதிகளில் குறிப்பிடப்படாத 14 அத்தியாவசிய பொருட்கள் கொண்ட தொகுப்பினை அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் இந்த அரசு வழங்கியது. இதன் மூலம் தனது வாக்குறுதிகளை நிறைவேற்றுவது மட்டுமல்லாமல் மக்களின் நலனை காக்க இன்னும் பல்வேறு திட்டங்களை இந்த அரசு செயல்படுத்தும் என்ற நம்பிக்கையை மக்களிடம் உருவாக்கியது.

14) **தேர்தல் அறிக்கையில் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளில் ஒன்று, தனியாக ஒரு வேளாண் நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்வதாகும். மாண்புமிகு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் முதல் வேளாண்மை நிதிநிலை அறிக்கையை நாளை**

**தாக்கல் செய்வார் என இந்த அவைக்கு தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.**

உங்கள் தொகுதியில் முதலமைச்சர்

15) இந்த அரசின் ஒரு முக்கிய அடையாளம், தன்னுடைய தேர்தல் அறிக்கையில் தெரிவித்த வாக்குறுதியான "உங்கள் தொகுதியில் முதலமைச்சர்" திட்டத்தை நடைமுறைப்படுத்துவதாகும். **இந்தத் திட்டத்தின் கீழ், மொத்தம் 4,57,645 மனுக்கள் பெறப்பட்டு ஆய்வு செய்யப்பட்டன. அனைத்து மனுக்களும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, உரிய சரிபார்த்தலுக்கு பின்னர் 2,29,216 குறைகளுக்கு நல்ல முறையில் தீர்வு காணப்பட்டுள்ளன என்பதை இந்த அவையில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் அளிக்கப்பட்ட அனைத்து குறைதீர் மனுக்களுக்கும் இந்த அரசு பதவியேற்ற நூறு நாட்களுக்குள் தீர்வு காணப்படும் என்ற உறுதிமொழி நிறைவேற்றப்பட்டுள்ளது. மனுக்களுக்கு விரைவாக தீர்வு காணப்பட வேண்டும் என்பதில் மட்டுமல்ல, மனநிறைவளிக்கும் வகையில் தீர்வு காணப்பட வேண்டும் என்பதிலும் குறிப்பாக கவனம் செலுத்தப்பட்டது. இந்த அரசு இனி வரும் காலங்களிலும் இதே முறையில் சிறப்பாக செயல்படும் என்பதற்கு இந்தச் சாதனை ஒரு சிறந்த அடையாளமாகும்.

ஒன்றிய – மாநில நிதி உறவுகள்

16) பல்வேறு தேசிய அளவிலான நிகழ்வுகளால் தமிழ்நாட்டின் நிதி நிலைமை பாதிக்கப்பட்டதை வெள்ளை அறிக்கை விவரித்தது. தற்போது நிறைவுற்ற 15 ஆவது நிதிக்குழு உட்பட, இந்தியாவின் அடுத்தடுத்த நிதி குழுக்களின் முறைகளும் முடிவுகளும்

இதில் அடங்கும். சரக்கு மற்றும் சேவை வரியுடனான கட்டமைப்பு, செயல்பாட்டு சிக்கல்கள், ஒன்றிய அரசின் அதிகரித்து வரும் மேல்வரி மற்றும் கூடுதல் கட்டணங்களின் பயன்பாடு அதாவது மத்திய வரிகளில் 10 சதவீதத்திலிருந்து 20 சதவீதம் வரை இரட்டிப்பாகியுள்ளது ஆகியவை மாநிலங்களுக்கு உரிய நிதியை திசைதிருப்பி விடுகின்றன. இவ்வாறு கடந்த சில ஆண்டுகளில் பல்வேறு வழிகளில் கூட்டாட்சி தத்துவத்திற்கு எதிராக செயல்பட்டதை வெள்ளை அறிக்கை குறிப்பிட்டுள்ளது.

17) **பெட்ரோல் மற்றும் டீசல் மீதான வரி விதிப்பு முறையில் ஒன்றிய அரசால் கூட்டாட்சி மனப்பான்மையை நீர்த்துப்போகுமாறு மாற்றங்கள் செய்யப்படுகின்றன. பெட்ரோல் மீதான ஒட்டுமொத்த ஒன்றிய வரி 2014ஆம் ஆண்டு மே மாதத்தில் லிட்டருக்கு 10.39 ரூபாயிலிருந்து இன்று 32.90 ரூபாயாக உயர்த்தப்பட்டது. அதேபோல், டீசல் மீதான வரி 2014 ஆம் ஆண்டு மே மாதத்தில் 3.57 ரூபாயிலிருந்து இன்று 31.80 ரூபாயாக உயர்த்தப்பட்டது.** ஒன்றிய அரசின் மேல்வரி மற்றும் கூடுதல் கட்டணம் அதிகரிக்கும் அதே வேளையில், அடிப்படை ஒன்றிய ஆயத்தீர்வை பெருமளவில் குறைக்கப்பட்டது. 2019–20ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது, 2020–21ஆம் ஆண்டில் பெட்ரோல் மற்றும் டீசலில் இருந்து ஒன்றிய அரசுக்கு வருவாய் 63 சதவீதம் அதிகரித்தாலும், மாநிலங்களுக்கான பங்கு கடுமையாக சரிந்தது. எனவே, பெட்ரோல் மற்றும் டீசலின் நுகர்வோர்களுக்கு நியாயமான நிவாரணம் வழங்க வேண்டிய பொறுப்பு ஒன்றிய அரசிடம் உள்ளது.

18) நிலைமையை மேலும் மோசமாக்கும் வகையில், **குறிப்பிட்ட நோக்கத்திற்காக ஒன்றிய அரசால் விதிக்கப்பட்ட மேல்வரிகள், முழுமையாக அக்குறிப்பிட்ட நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படவில்லை எனவும், குறிப்பிட்ட காலத்திற்கு விதிக்கப்படும் கூடுதல் வரிகள்**

**காலவரையின்றி தொடர்கின்றன எனவும் இந்தியக் கணக்குத் தணிக்கைத் துறைத் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.**

19) மேற்சொன்ன விவகாரங்களை முழுமையாக எதிர்கொள்வதற்கும், புதிய மற்றும் விரிவான அணுகுமுறை ஒன்றை முன்மொழிவதற்கும், **கூட்டாட்சி நிதி வடிவம் ஒன்றை உருவாக்குவதற்காக வருவாய் மற்றும் வரிவிதிப்பு (சரக்கு மற்றும் சேவை வரி உட்பட) தொடர்புடைய புகழ்பெற்ற சட்ட, பொருளாதார வல்லுநர்கள் கொண்ட ஆலோசனைக் குழுவை இந்த அரசு நிறுவும்.**

**தரவுகளை மையமாகக் கொண்டுள்ள ஆளுகை**

20) கோவிட்–19 பெருந்தொற்று நிர்வாக அமைப்புகளில் உள்ள பலவீனங்களை வெளிப்படுத்தியுள்ளதாகவும், எனவே, மனித வள மேலாண்மை, அடிப்படை தரவு அமைப்புகள், தணிக்கை, கண்காணிப்புச் செயற்பாடுகள் ஆகியன முழுமையாகச் சீர்செய்யப்படும் எனவும், ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டது. அதன்படி, **தரவுகளை மையமாகக் கொண்டுள்ள நிர்வாகச் சீர்திருத்தங்கள் தொடர்பான பின்வரும் முக்கிய முயற்சிகளைச் செயல்படுத்துவதற்கு** இந்த அரசு திட்டமிட்டுள்ளது.

- பயனாளர்கள் குறித்த போதிய அடிப்படை தரவு கிடைக்கப்பெறாத காரணத்தால், சமூக பொருளாதார நீதியை மேம்படுத்தும் அரசு நலத்திட்டங்களைத் திறம்படச் செயல்படுத்த இயலாத நிலை உள்ளது. **அனைத்து மக்கள் மற்றும் குடும்பங்களின் உண்மையான பொருளாதார நிலையை நன்கு அறிய, அனைத்து துறைகளிலுள்ள தரவுகளை ஒன்றிணைப்பதற்கான முயற்சி எடுக்கப்படும்.** இந்த அடிப்படை

முயற்சியின் மூலம் பல கோடி ரூபாய் மதிப்புள்ள பல்வேறு மானியங்கள் வழங்கப்படுவது மேம்படுத்தப்படும்.

- எதை அளவிட முடியாதோ, அதை மேம்படுத்த முடியாது. **எனவே, மாநிலத்திலுள்ள அனைத்து பொது சேவைகளிலும் மின்னணு அளவீட்டு முறைகள் அறிமுகப்படுத்தப்படும்.**

- **கொள்முதல் செய்யும் அனைத்து துறைகளிலும் மின்னணு கொள்முதல் முறை (e-procurement) கண்டிப்பாக பின்பற்றப்படும். அரசு கொள்முதல் முறைகளில் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துவதற்காக தமிழ்நாடு அரசிற்கென, தனி மின்னணு கொள்முதல் வலைத்தளம் ஒன்று உருவாக்கப்படும்.**

- **திறனையும் வெளிப்படைத்தன்மையும் மேம்படுத்துவதற்காக, திட்டமிடுதல், விலை விவர அட்டவணையை புதுப்பித்தல், செந்தர விலைப் பட்டியலை புதுப்பித்தல், திட்ட வடிவமைப்பு, பணிகளின் மதிப்பீடுகள், ஒப்பந்தப் புள்ளிகள், பணிகளை அளவிடுதல் மற்றும் பணிப் பட்டியல்களுக்கு பணம் செலுத்துதல் உள்ளிட்ட அனைத்து தொழில்நுட்ப துறைகளின் நடைமுறைகளும் முழுமையாக கணினிமயமாக்கப்படும்.**

அரசு சொத்துகள் மற்றும் இடர் மேலாண்மை

21) 2017 ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசின் சொந்த ‘‘தமிழ் நிலம்’’ தரவுதளத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளவாறு, 2.05 லட்சம் ஹெக்டேருக்கும் அதிகமான தமிழ்நாடு அரசின் நிலங்கள் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருந்தது தணிக்கையில்

கண்டறியப்பட்டுள்ளது. **பொது நிலங்கள் குறித்த சிறப்பான மேலாண்மைக்கு, மேம்படுத்தப்பட்ட அரசு நில மேலாண்மை அமைப்பு ஒன்று உருவாக்கப்படும். அதில் அனைத்து அரசு நிலங்கள்** தொடர்பான முழு விவரங்களும் உள்ளடங்கும். இதன் மூலம், அரசு சொத்துகள் சில சமயம் பயனற்ற வகையிலோ, தவறான வகையிலோ, வேறு நோக்கங்களுக்காகவோ பயன்படுத்தப்படுவதைத் தடுக்கும்.

22) நீதிமன்றங்களில், பெரும் மதிப்பிலான நிதிப் பொறுப்புகள் மற்றும் நிர்வாகத்தில் தாக்கங்களை ஏற்படுத்தக்கூடிய பல வழக்குகள் பல்லாண்டுகளாக நிலுவையில் உள்ளன. அத்தகைய வழக்குகளை இயன்ற அளவில் முனைப்புடன் திறமையாக கையாளுவதற்கும், பொறுப்புகள் அதிகரிப்பதை குறைப்பதற்கும், **வழக்கு இடர் மேலாண்மை அமைப்பு ஒன்று அமைக்கப்படும். அதன் மூலம், பொது நலன் திறம்படப் பாதுகாக்கப்படுவதையும், அரசுக்கு வளங்கள் உடனுக்குடன் கிடைப்பதையும் உறுதி செய்யும் வகையில், வரிவிதிப்பு, நில விவகாரங்கள், பணியாளர் விவகாரங்கள் மற்றும் கொள்முதல் பிரச்சினைகள் தொடர்பான அனைத்து முக்கிய வழக்குகளும் முனைப்புடன் கண்காணிக்கப்படும். இந்த வழக்கு மேலாண்மை அமைப்பு, ஓய்வுபெற்ற நீதிபதிகள் மற்றும் மூத்த சட்ட வல்லுநர்களைக் கொண்ட அனுபவமிக்க குழுவால் கண்காணிக்கப்படும்.**

23) கருவூல அமைப்புகளின் கண்காணிப்புக்கு வெளியேயுள்ள வங்கிக் கணக்குகளுக்கு அரசு நிதிகள் அடிக்கடி மாற்றப்படுவதாகப் பல்வேறு தரவுகள் சுட்டிக்காட்டுகின்றன. இந்த அரசு பதவியேற்ற பின், அத்தகைய நிதிகளை கண்டறிய இரட்டைக் கணக்கெடுப்பு முறை ஒன்று தொடங்கப்பட்டது. அரசு துறைகளிலும், நிறுவனங்களிலும், அத்தகைய கணக்குகள் உள்ள வங்கிகளிலும் இந்த நிதியை கண்டறிவதற்கான முதல்கட்ட ஆய்வில் கணிசமான

நிதி இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. மேற்கூறிய கணக்குகளை முழுமையாக சரி செய்யவும், அதில் பயன்படுத்த இயலாத நிதியையும், பயன்படுத்தப்படக்கூடிய நிதியையும் கண்டறிய, நிதித்துறையின் மூத்த அதிகாரியின் கீழ் ஒரு சிறப்பு பணிக்குழுவை இந்த அரசு அமைக்கும். மேலும், ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனித வள மேம்பாட்டுத் திட்டம் மற்றும் பொது நிதி மேலாண்மை அமைப்பின் மூலம் அனைத்து அரசு நிதியும் கருவூல அமைப்பின் கட்டுப்பாட்டில் வைக்கப்படும்.

**அதிக நம்பகத்தன்மை மற்றும் அதிகரிக்கப்பட்ட உற்பத்தித் திறன்**

24) பல ஆண்டுகளாக 2000 க்கும் மேற்பட்ட இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறை தலைவரின் தணிக்கைப் பத்திகள் நிலுவையில் உள்ளன. தணிக்கைப் பத்திகளின் எண்ணிக்கையை குறைக்க, அரசுப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் பயிற்சி மேம்படுத்தப்படும். தவறுகளை விரைவாக கண்டறிவதற்கும், தாமதமின்றி திருத்துவதற்கான நடவடிக்கை எடுப்பதற்கும் வலுவான உள் தணிக்கை முறை ஒன்றை அரசிற்குள் நடைமுறைப்படுத்துவது அவசியமாகும். **எனவே, அரசின் உட்தணிக்கை அமைப்பு முறையில் அடிப்படை சீர்திருத்தம் மேற்கொள்ளப்படும். அனைத்து அரசுத் துறைகளிலும் முகமைகளிலும் உள் தணிக்கை செயல்பாடுகளை திறம்பட மேற்கொள்வதற்காக அரசில் செயல்படும் அனைத்துத் தணிக்கைத் துறைகளும் நிதித் துறையின் கீழ் கொண்டு வரப்பட்டு ஒருங்கிணைக்கப்படும்.** தணிக்கைத் துறைகளின் திறன் மேம்படுத்தப்படும்.

**சட்டமன்றத்தின் பங்கினை வலுவூட்டுதல்**

25) பல்வேறு வழிகளில், நாடு முழுவதும், அரசியலமைப்பில் எதிர்நோக்கப்பட்ட சட்டமன்றங்களின் வலுவான பங்கு தற்போது

குறைந்துள்ள போக்கு காணப்படுகிறது. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் அடையாளமாகத் திகழ்ந்த முத்தமிழ் அறிஞர் கலைஞரின் வாரிசான, மாண்புமிகு முதலமைச்சர், நமது வரலாற்றுச் சிறப்புமிக்க சட்டமன்றத்தின் அதிகாரத்தையும் செயல்பாட்டையும் வலுப்படுத்த ஆர்வமாக உள்ளார். **சட்டமன்றத்தின் நூற்றாண்டை குறிக்கும் வகையில், வரலாற்று சிறப்புமிக்க இந்த மன்றத்தில் 1921 ஆம் ஆண்டிலிருந்து நடைபெற்ற நிகழ்வுகள் குறித்த ஆவணங்கள் அனைத்தும் கணினிமயமாக்கப்படும். பேரவையின் நிதிக்குழுக்களின் (மதிப்பீடு, பொதுக் கணக்கு, பொதுத்துறை நிறுவனங்கள்) செயல்பாட்டை வலுப்படுத்துவதற்காக, உரிய அலுவலர்களுடன் கணினிமயமாக்கப்பட்ட சிறப்புச் செயலகம் அமைக்கப்படும்.**

26) இந்த ஐந்து முயற்சிகளும் முக்கிய சீர்திருத்தங்களின் தொடக்கமே. இந்த அவையில் முன்வைக்கப்பட்ட வெள்ளை அறிக்கையில் உள்ள ஆய்வு முடிவுகளுடன், இவை நேரடியாகத் தொடர்புடையவை.

தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாடு

27) **சென்னையில் உள்ள செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்திற்குப் புத்துயிர் அளிக்கப்படும். 2010 முதல் வழங்கப்படாமலிருக்கும் கலைஞர் மு.கருணாநிதி செம்மொழித் தமிழ் விருது, இனி ஒவ்வோராண்டும் ஜூன் மாதம் 3-ம் நாள், 10 இலட்சம் ரூபாயுடன் வழங்கப்படும்.**

28) நிருவாகம் மக்களைச் சென்றடைய வேண்டும் என்றால், அரசு தனது பணிகளை மக்களின் மொழியில் செயல்படுத்த வேண்டும். இது தொடர்பாக, **தலைமைச் செயலகம் முதல் மாநிலத்தின்**

**அனைத்துத் துறை அலுவலகங்கள் வரையிலும், தமிழை ஆட்சி மொழியாகப் பயன்படுத்துவது வலுப்படுத்தப்படும்.** தமிழ் இணையக் கல்விக் கழகத்தால் உருவாக்கப்பட்ட ஒருங்குறி எழுத்துரு அனைத்து அரசுத் துறைகளிலும் பயன்படுத்தப்படுவது உறுதிசெய்யப்படும்.

29) 1974–ம் ஆண்டில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் அறிவிக்கப்பட்ட செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்டத்தின் கீழ், இதுவரை 31 தொகுதிகள் வெளியிடப்பட்டுள்ளன. மொழியின் தொடர் வளர்ச்சிக்கு ஏற்றவாறு, மேலும் ஏழு தொகுதிகள் கொண்டுவரப்படும். உலகப்புகழ் பெற்ற செவ்வியல் இலக்கியப் படைப்புகள் தமிழில் மொழிபெயர்க்கப்படும். அதைப் போலவே, **உலக அளவில் போற்றப்படும் தமிழ்ப் படைப்புகள் வெவ்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்படும். தமிழ்நாட்டின் உயர்கல்வி மாணவர்கள் பயன்பெறும் வகையில், பல்வேறு தொழில்நுட்ப புத்தகங்கள் தமிழில் வெளியிடப்படும்.**

30) கீழடி, ஆதிச்சநல்லூர், சிவகளை, கொற்கை, கொடுமணல், கங்கைகொண்டசோழபுரம், ஆகிய இடங்களில் நடைபெற்றுவரும் தொல்லியல் அகழாய்வுகள் தமிழ்நாட்டில் மட்டுமன்றி உலகத் தமிழர் இடையேயும் தமிழரின் தொன்மை மற்றும் பண்பாடு குறித்து மகத்தான உற்சாகத்தையும், தொல்லியல் குறித்த விழிப்புணர்வையும் ஊட்டியுள்ளன. **இந்த நிதியாண்டில் தமிழ்நாட்டில் தொல்லியல் ஆய்வுகளை அறிவியல் முறைப்படி மேற்கொள்ள, நாட்டில் வேறு எந்த மாநிலத்தை விடவும் அதிக அளவாக, 5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும். கீழடி, சிவகளை, கொடுமணல் ஆகிய பகுதிகளில் அகழாய்வு மேற்கொள்ளப்பட்ட இடங்கள் பாதுகாக்கப்பட்ட தொல்லியல் தளங்களாக அறிவிக்கப்படும்.** கீழடியில் ஏற்கனவே அகழ்வாய்வு மேற்கொண்ட போது வெளிப்பட்ட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த

கட்டட அமைப்புகள், உறைகிணறுகள் மற்றும் தொழிற் பகுதிகளை பொதுமக்களும், எதிர்காலத் தலைமுறையினரும் நேரடியாக கண்டு உணரும் வகையில் கீழடியில் திறந்தவெளி தொல்லியல் அருங்காட்சியகம் ஒன்று அமைக்கப்படும். **தேசிய கடல்சார் நிறுவனம், தேசிய கடல் தொழில்நுட்பவியல் நிறுவனம் மற்றும் இந்திய கடல்சார் பல்கலைக்கழகம் ஆகிய நிறுவனங்களோடு இணைந்து, முதற்கட்டமாக சங்ககால துறைமுகங்கள் அமைந்திருந்த கொற்கை மற்றும் அழகன்குளம் பகுதிகளில் ஆழ்கடல் ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்.**

31) தமிழ் வளர்ச்சித் துறைக்கு 80.26 கோடி ரூபாயும், தொல்லியல் துறைக்கு 29.43 கோடி ரூபாயும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியங்கள்

32) முத்தமிழறிஞர் கலைஞரின் தலைமையின் கீழ், சமூகப்பாதுகாப்புத் திட்டங்களை, குறிப்பாக முதியோர் ஓய்வூதியத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் தமிழ்நாடு முன்னணி மாநிலமாகத் திகழ்ந்தது. கடந்த 10 ஆண்டுகளில், சேர்த்தல் மற்றும் விலக்குதலில் எண்ணற்ற பிழைகளுடன் முதியோர் ஓய்வூதியத் திட்டம் உள்ளதையும், தகுதி வாய்ந்த பல நபர்கள் சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியங்கள் இன்றி அவதியுறுவதையும், நோபல் பரிசுபெற்ற எஸ்தர் டஃப்ளோ உள்ளிட்ட வல்லுநர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். 10 சதவீத முதியோர், தனிமையில் வசிப்பவர்கள் மற்றும் எளிதில் பாதிப்படையக்கூடியவர்கள். **முதியோர் ஓய்வூதியத் திட்டம் முழுமையாகச் சீரமைக்கப்பட்டு, அனைத்துத் தகுதிவாய்ந்த நபர்களும் விடுதலின்றிப் பயன்பெறுவதை இந்த அரசு உறுதி செய்யும். மாநிலத்திலுள்ள மக்களுக்கு சமூகப்பாதுகாப்பிற்கான வழிவகைகளை ஏற்படுத்துவதில் முன்னணி**

**நிலையை தமிழ்நாடு மீண்டும் பெறும் வகையில் இந்த அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளும். சமூகப்பாதுகாப்பு ஓய்வூதியங்களுக்கு 4807.56 கோடி ரூபாய் என உயர்த்தப்பட்டது.**

நில மேலாண்மை

33) அரசு புறம்போக்கு நிலங்களை, குறிப்பாக நீர்நிலைகளைப் பாதுகாப்பதைக் கவனத்திற்கொண்டு, **நிலம் தொடர்பான பிரச்சினைகளைக் குறைப்பதற்காக, துல்லியமான புவியிடங்காட்டி (D-GPS) மற்றும் ஏனைய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி மாநிலம் முழுவதிலும் நவீன நில ஆய்வை இந்த அரசு மேற்கொள்ளும்.** நத்தம் நிலவரித் திட்டம் மற்றும் நகர நிலவரித் திட்ட நடைமுறைகள் முடிவடையும் தருவாயில் உள்ளன. அது தொடர்பான பதிவுகள் விரைவில் இணையவழியில் கிடைப்பதற்குத் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

34) நிலம் கையகப்படுத்தும் நடைமுறைகள் எளிமையாக்கப்படுவதுடன், நில உரிமையாளர்களுக்கு உரிய காலத்தில் நியாயமான இழப்பீடு கிடைப்பதும் உறுதி செய்யப்படும். **இந்த நோக்கத்திற்காக, நில நிர்வாக ஆணையாளரின் தலைமையின் கீழ் தமிழ்நாடு சிறப்பு சமூகத் தாக்க மதிப்பீடு - மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வுப் பிரிவு ஒன்று உருவாக்கப்படும்.**

பேரிடர் மேலாண்மை

35) எந்த வகையான பேரிடர் சூழ்நிலையையும் சந்திப்பதற்கு மாநிலம் முழுமையான தயார் நிலையிலுள்ளதை உறுதிசெய்யும் வகையில், மீண்டெழும் திறனுடைய தமிழ்நாட்டைக் கட்டமைப்பதற்கு இந்த அரசு உறுதியாக உள்ளது. எதிர்பார்க்கப்படும் அனைத்து விதப்

பேரிடர்களையும் கண்டறிந்து, அவற்றின் விளைவுகளைக் குறைக்கக் கூடிய, ஓர் ஒருங்கிணைந்த அணுகுமுறை நடைமுறைப்படுத்தப்படும். வெள்ளப் பாதிப்புக்குள்ளாகும் 4,133 இடங்கள் கண்டறியப்பட்டு, உரிய நேரத்தில் தூர்வாருதல், வடிகால் அமைப்புகளைக் கட்டமைத்தல், தடுப்புச் சுவர்களைக் கட்டுதல் உள்ளிட்ட வெள்ளத்தடுப்பு செயல்பாடுகள் விரைவுபடுத்தப்படும்.

36) 2021–22 ஆம் ஆண்டிற்காக மாநிலப் பேரிடர் நிவாரணம் மற்றும் தணிப்பு நிதி மூலமாக பேரிடர் மேலாண்மைக்காக பதினைந்தாவது நிதிக்குழு பரிந்துரை செய்துள்ள 1,360 கோடி ரூபாய் நிதி போதுமானதாக இல்லை. 2021–22 ஆம் ஆண்டிற்காக, மாநிலப் பேரிடர் நிவாரண மற்றும் தணிப்பு நிதியிலிருந்து ஏற்கெனவே மொத்தம் 8,931.41 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. **மாநிலப் பேரிடர் நிவாரண மற்றும் தணிப்பு நிதியை அதிகரிக்கவும், தேசியப் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து தமிழ்நாட்டிற்கு கூடுதல் தொகையை விடுவிக்கவும் வேண்டுமென ஒன்றிய அரசை நாம் வலியுறுத்துவோம்.**

**காவல்துறை**

37) நாட்டின் மிகத் திறமையான மற்றும் சிறப்பான காவல் படைகளில் ஒன்றாகத் திகழும் வகையில், தமிழ்நாடு காவல்துறையின் தரத்தை மீட்டெடுப்பது இந்த அரசின் நோக்கம். மனிதவளம், வாகனங்கள், கருவிகள், ஆயுதங்கள், தளவாடங்கள், கட்டமைப்பு ஆகிய காவல்துறையின் தேவைகளை மாநில அரசு நிறைவு செய்யும். **காவல்துறையில் ஒப்பளிக்கப்பட்ட 1,33,198 பணியிடங்களில், மீதமுள்ள 14,317 காலிப் பணியிடங்களை நிரப்ப உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். பெரும் குற்றங்களில், குறிப்பாக பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள், இணையவழிக் குற்றங்கள்,**

**பொருளாதாரக் குற்றங்களுக்கு உரிய தண்டனைகள் பெற்றுத்தரும் வகையில் விரைவாக விசாரணைகள் மேற்கொள்வதில் சிறப்பு கவனம் செலுத்தப்படும்.** காவல்துறைக்கு மொத்தம் 8,930.29 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித்துறை**

38) தீ விபத்துகள் மற்றும் தடுக்கத்தக்க பல்வேறு விபத்துக்கள், கணிசமான அளவில் பொருளாதார மற்றும் மனித இழப்புகளை ஏற்படுத்துகின்றன. தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட தீ விபத்து பாதுகாப்பு செயலாக்க நடவடிக்கைகள் வாயிலாக, தீ விபத்துகளைத் தடுப்பதற்கு இந்த அரசு பாடுபடும். இந்த நோக்கத்திற்காக, **தற்போதுள்ள 1985 ஆம் ஆண்டு தீயணைப்புச் சேவைகள் சட்டம் முழுமையாக மாற்றியமைக்கப்படும்.** மீட்புப் படையினர் குறைவான நேரத்திற்குள் வந்து சேரும் வகையில், புதிய தீயணைப்பு நிலையங்களின் அமைவிடங்கள் அறிவியல்பூர்வமாக வரைபடங்களின் உதவியுடன் தேர்வு செய்யப்படும். மாதிரி பயிற்சிக் கருவிகள் மற்றும் சுய பாதுகாப்புச் சீருடைகள் போன்றவை போதிய அளவில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைக்கு வழங்கப்படும். இத்துறைக்கு 405.13 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**சாலைப் பாதுகாப்பு**

39) விபத்துகளற்ற தமிழ்நாடு என்னும் இலக்கை நோக்கிச் செல்வதில் இந்த அரசு உறுதியாக உள்ளது. சாலை விபத்துகளின் எண்ணிக்கையும் அதனால் ஏற்பட்டுள்ள இறப்புகளின் எண்ணிக்கை கணிசமான அளவில் குறைந்திருப்பினும், மொத்த எண்ணிக்கை இன்னும் மிக அதிகமாகவே உள்ளது. 2020 ஆம் ஆண்டில் கோவிட்

பெருந்தொற்றின் காரணமாக ஊரடங்கு நடைமுறையில் இருந்த போது, வாகனப் போக்குவரத்து கணிசமாகக் குறைந்த பின்னரும், ஏற்றுக்கொள்ள இயலாத அளவில், 45,489 விபத்துகள் மற்றும் 8,060 உயிரிழப்புகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. விபத்துகளின் எண்ணிக்கையைக் கணிசமான அளவில் குறைப்பதற்காக, நெடுஞ்சாலைகள், போக்குவரத்து, காவல், மருத்துவம் மற்றும் கல்வித் துறைகள் உள்ளிட்ட பல்வேறு துறைகளின் முயற்சிகளை ஒருங்கிணைத்து, **ஒருங்கிணைந்த சாலைப் பாதுகாப்பு இயக்கம் மாற்றியமைக்கப்படும். மேலும், போக்குவரத்து ஆணையரகம், போக்குவரத்து மற்றும் சாலைப் பாதுகாப்பு ஆணையரகம் எனப் பெயர் மாற்றம் செய்யப்படும்.** இத்திட்டத்தை செயல்படுத்த பல்வேறு துறைகளுக்கு 500 கோடி ரூபாய் வரை நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

நீதித்துறை நிர்வாகம்

40) பல்வேறு நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள வழக்குகளின் எண்ணிக்கை குறித்து அரசு கவனம் செலுத்தி வருகிறது. 'தாமதிக்கப்பட்ட நீதி மறுக்கப்பட்ட நீதியாகும்' என்று சட்டப் பழமொழி ஒன்று கூறுகிறது. உரிய நேரத்தில், வெளிப்படைத் தன்மையுடன், நீதி வழங்கும் அமைப்பு இருப்பது, பொருளாதார நடவடிக்கை மற்றும் வளர்ச்சியை மேம்படுத்துவதற்கு மிக முக்கியமானது. தற்போது, தமிழ்நாட்டில் செயல்படும் 1,280 நீதிமன்றங்களில் 1,099 நீதிமன்றங்கள் அரசுக்குச் சொந்தமான கட்டடங்களில் செயல்படுகின்றன. **அடுத்த ஐந்து ஆண்டுகளில், அனைத்து நீதிமன்றங்களுக்கும் போதிய கட்டடங்கள் இருப்பது உறுதி செய்யப்படும். உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்களில் உள்ள அனைத்துக் காலிப் பணியிடங்களையும் நிரப்புவதற்குத் தேவையான ஆதரவை இந்த அரசு வழங்குவதுடன், நீதிமன்றங்களின் சிறப்பான**

**செயல்பாட்டிற்கு, தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தைத் திறன்படப் பயன்படுத்துவதற்கும் உதவி புரியும்.** புதிய கட்டடங்கள் கட்டுமானத்திற்கு 351.87 கோடி ரூபாய் உட்பட, நீதித்துறை நிர்வாகத்திற்கென 1,713.30 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பொது விநியோகத் திட்டம்

41) அனைவருக்குமான பொது விநியோகத் திட்டம், தமிழ்நாட்டில் சமூகப் பாதுகாப்பு அமைப்பின் மிக முக்கிய அம்சங்களில் ஒன்றாக விளங்கி, பெரும் பாராட்டினைப் பெற்றுள்ளது. **இந்தத் திட்டத்தினைப் பயன்படுத்தி 2021 ஆம் ஆண்டு மே மற்றும் ஜூன் மாதங்களில் இரு தவணைகளாக, 2.1 கோடி அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கும் கொரோனா நிவாரண ரொக்க நிதியுதவியாக 4,000 ரூபாய், வழங்கப்பட்டுள்ளது மற்றும் கொரோனா பெருந்தொற்று இரண்டாம் அலை பரவலின் உச்சத்தில் மளிகைப் பொருட்களின் சிறப்புத் தொகுப்பு ஒன்றும் வழங்கப்பட்டது. ஒட்டுமொத்தமாக, 9,370.11 கோடி ரூபாய் செலவில், இந்த கோவிட் நிவாரண தொகுப்புகள் வழங்கப்பட்டன. இது, நாட்டிலேயே வழங்கப்பட்ட மிகப்பெரிய கோவிட் நிவாரணத் தொகுப்பாகும்.**

42) பொது விநியோகத் திட்டம் வலுப்படுத்தப்படுவதையும் தகுதிவாய்ந்த பயனாளிகளுக்கு மேம்படுத்தப்பட்ட சேவைகள் கிடைப்பதையும் உறுதிப்படுத்துவதற்கு இந்த அரசு தீர்மானித்துள்ளது. **தேவையுள்ள இடங்களில் புதிய நியாயவிலைக் கடைகளை ஏற்படுத்துவதற்கான வழிகாட்டு நெறிமுறைகளை மறுஆய்வு செய்வதற்கு குழு ஒன்று ஏற்படுத்தப்படும்.** சிறப்பு பொது விநியோகத் திட்டத்தின் கீழ், மானிய விலையில் பருப்பு வகைகள் மற்றும் சமையல் எண்ணெய்

வழங்குவது 2021–22 ஆம் நிதியாண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். உணவு மானியத்திற்கான ஒதுக்கீடு 8,437.57 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

நீர் வளங்கள்

43) **இந்த அரசு மாநிலத்தின் குறைந்த நீர் ஆதாரங்களை முறைப்படி பயன்படுத்தி அவற்றை பாதுகாப்பதற்கு அதிகமான முக்கியத்துவத்தை அளிக்கும் விதமாக நீர்வளங்களுக்கு தனியே ஒரு அமைச்சகத்தை உருவாக்கியுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நோக்கத்தைச் செயல்படுத்தும் விதமாக, அடுத்த 10 ஆண்டுகளில், 1,000 தடுப்பணைகளும், கதவணைகளும் கட்டப்படும்.**

44) பதவியேற்ற உடனேயே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காவேரி டெல்டாப் பகுதியில் சிறப்பு தூர்வாரும் பணிகளுக்கு ஆணையிட்டார்கள். விவசாயிகளின் ஆலோசனையுடன் ஒன்பது மாவட்டங்களில் 647 பணிகள் 65.11 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன.

45) **மேட்டூர், அமராவதி, வைகை, பேச்சிப்பாறை போன்ற முக்கிய அணைகளின் நீர்த்தேக்க கொள்ளவை மீண்டும் பழைய நிலைக்கு உயர்த்த, தேவையான திட்டங்களை இந்த அரசு வகுக்கும்.**

46) ஆனைமலையாறு, நீராறு–நல்லாறு, பாண்டியாறு–புனம்புழா திட்டம் உள்ளிட்ட மாநிலங்களுக்கு இடையேயான நதிநீர்த் திட்டங்களைச் செயல்படுத்த, கேரள மாநிலத்துடன் ஆக்கப்பூர்வமான பேச்சுவார்த்தைகளில் இந்த அரசு ஈடுபடும். மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கோதாவரி–காவேரி இணைப்பு திட்டத்தை

விரைவாகச் செயல்படுத்திட ஒன்றிய அரசினை வலியுறுத்தி உள்ளார்கள்.

47) பிரதமரின் வேளாண் நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ், நீர்நிலைப் பகுதிகளைப் பழுது பார்த்தல், புதுப்பித்தல் மற்றும் புனரமைத்தல் பணிகளுக்காக 2021–22ஆம் ஆண்டில் 111.24 கோடி ரூபாய் செலவில் 200 குளங்கள் தரம் உயர்த்தப்படும். 2021–22ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு ஆண்டின் தொடக்கத்திலும் 50 குறு நீர்ப்பாசனக் குளங்களைத் தரப்படுத்துலுக்கான சிறப்புத் திட்டம் ஒன்று இந்த அரசால் தொடங்கப்படும். இதற்காக, நீர்வளத்துறை, அனைத்து வேளாண் பங்குதாரர்களுடன் கலந்தாலோசித்து, உயர் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டிய குளங்கள் அடையாளம் காணப்படும்.

48) நீர்வளத் துறையின் பணிகள் நவீனமயமாக்கப்படும். **நவீன தொழில் நுட்பங்களான ஆளில்லா விமானங்களின் மூலம் ஆய்வு,** துல்லியமான புவியிடங்காட்டி மற்றும் புவியியல் தகவல் அமைப்பு போன்றவற்றின் உதவியுடன் பணிகள் மேம்படுத்தப்படும். **தமிழ்நாடு நீர்வள தகவல் மற்றும் மேலாண்மை அமைப்பு, மொத்தம் 30 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்.**

49) உலக வங்கி, ஆசிய வளர்ச்சி வங்கி, ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி மற்றும் நபார்டு வங்கி உள்ளிட்ட பல்வேறு முகமைகளிடம் இருந்து தேவையான உதவிகளைப் பெற்று நீர்வளங்கள் துறையில் சிறப்புத் திட்டங்களை இந்த அரசு தொடர்ந்து செயல்படுத்தும். கல்லணை கால்வாய் புதுப்பித்தல் விரிவுபடுத்துதல் மற்றும் நவீனப்படுத்துதல் திட்டத்திற்கு ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியிலிருந்து 2,639.15 கோடி ரூபாய் நிதி உதவி பெறப்பட்டுள்ளது. இரண்டாவது அணை சீரமைத்தல் மற்றும்

புதுப்பித்தல் திட்டமானது 610.26 கோடி ரூபாய் செலவில் உலக வங்கியின் நிதியுதவியுடன் துவங்கப்படவுள்ளது. பருவ நிலை மாற்றத்திற்கான தழுவல் திட்டத்தின் இரண்டாம் கட்டம், காவேரி டெல்டாப் பகுதியில் 1825 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் ஆசிய வளர்ச்சி வங்கியின் உதவியுடன் மேற்கொள்ளப்படும். தமிழ்நாடு நீர்ப்பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டத்தின் மூன்றாம் கட்டமும், நான்காம் கட்டமும், உலக வங்கியின் நிதி உதவியுடன் 779.89 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும். இந்த திருத்த வரவு செலவுத் திட்டத்தில் 326.37 கோடி ரூபாய் இந்தத் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. தடுப்பணைகள், ஏரிகள், வடிகால்கள் மற்றும் பாசன அமைப்புகளின் புனரமைத்தல் உட்பட 59 புதிய பாசனப் பணிகள் நபார்டு வங்கியின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்டன.

50) பாசனத்திற்காக மொத்தம் 6,607.17 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**மீன்வளம்**

51) தமிழ்நாடு நீண்ட கடலோரப் பகுதியையும், பெரிய மீனவர் சமூகத்தையும் கொண்ட மாநிலமாகும். 6000 கோடி ரூபாய்க்கும் மேற்பட்ட மதிப்புடன், கடல் மீன் உற்பத்தியில் தற்போது தமிழ்நாடு இந்தியாவில் இரண்டாவது பெரிய மாநிலமாக விளங்குகிறது. மீன்பிடித் தடைக்கால நிவாரண நிதிக்காகவும் சிறப்பு நிதிக்காகவும் கடல்சார் மீனவருக்கான சேமிப்புடன் கூடிய நிவாரண திட்டத்திற்காகவும் மொத்த தொகையாக 303.66 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பாக் வளைகுடாப் பகுதியில், மீன்பிடி இழுவைப் படகுகளிலிருந்து செவுள் வலை மற்றும் இழுவை வலை அமைப்புகளுக்கு படகுகளை மாற்றியமைப்பதற்கு

பன்முகத்தன்மைக்கான சிறப்புத் திட்டத்தை இந்த அரசு விரைவுப்படுத்தும். கடல் பாசி வளர்ப்பு, கூண்டுகளில் மீன் வளர்ப்பு மற்றும் கடல் வாழ் உயிரின வளர்ப்பு உள்ளிட்ட மாற்று வாழ்வாதாரத் திட்டங்களும் ஊக்குவிக்கப்படும்.

52) தரங்கம்பாடி, திருவொற்றியூர், அழகன்குப்பம் மற்றும் ஆற்காட்டுத்துறையில் மீன்பிடித் துறைமுகத் திட்டப்பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இவை விரைந்து நிறைவு செய்யப்படும். புதிதாக 6 இடங்களில் மீன்பிடி துறைமுகங்களை அமைக்க மொத்தம் 6.25 கோடி ரூபாய் செலவில் ஆய்வுகள் மேற்கொள்ளப்படும். சென்னை துறைமுகப் பொறுப்புக் கழகத்துடன் இணைந்து, சென்னையில் உள்ள காசிமேடு மீன்பிடி துறைமுகம் மொத்தம் 150 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும். **2021-22 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு - செலவுத் திட்ட மதிப்பீடுகளில் மீன்பிடி துறைமுகங்கள் மற்றும் மீன் இறங்கு தளங்களை அமைக்க மொத்தம் 433.97 கோடி ரூபாயும், மீன் இறங்கு தளங்களை மேம்படுத்த 143.46 கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளது.** தமிழ்நாட்டில் உள்ள மீனவர்களின் நலனுக்காக ஒட்டுமொத்தமாக 1,149.79 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**சுற்றுச்சூழல் மற்றும் பருவநிலை மாற்றம்**

53) இயற்கை வளங்கள் மற்றும் சுற்றுச்சூழல் அமைப்புகளைப் பாதுகாப்பதிலும், சுற்றுச்சூழல் சமநிலையையும், இயல்பான மழைப்பொழிவு வடிவங்களைப் பேணுவதிலும், காடுகள் முக்கியப் பங்கினை வகிக்கின்றன. **தமிழ்நாட்டின் காடு மற்றும் மரங்களின் அடர்த்தியை மாநிலத்தின் நிலப் பரப்பில் 33 சதவீதமாக உயர்த்துவதற்காக, தமிழ்நாடு பசுமை இயக்கத்தை அரசு**

**ஏற்படுத்தவுள்ளது. தமிழ்நாடு பசுமை இயக்கத்தின் கீழ், பல்வேறு துறைகள், பொது மற்றும் தனியார் நிறுவனங்களின் ஒத்துழைப்புடனும், மக்களின் முழுஅளவிலான பங்களிப்புடனும், பலதரப்பட்ட நம் மண்சார்ந்த மரங்களை நடுவதற்கு பெரும் மரம் நடவுத் திட்டம் ஒன்று அடுத்த 10 ஆண்டு காலத்தில் செயல்படுத்தப்படும்.**

54) காலநிலை மாற்றத்தின் தாக்கத்தை எதிர்த்துப் போராடுவதும் தணிப்பதும் தமிழ்நாடு போன்ற கடலோர மாநிலத்திற்கு ஒரு பெரிய சவாலாக உள்ளது. **பருவநிலை மாற்ற மேலாண்மை மற்றும் தணிப்பு நடவடிக்கைகளில் கவனம் செலுத்துவதற்காக, மாண்புமிகு முதலமைச்சரின் தலைமையின் கீழ், இந்த அரசு மொத்தம் 500 கோடி ரூபாய் செலவில் பருவநிலை மாற்ற இயக்கம் ஒன்றினை அமைக்கும்.**

55) **ஆளில்லா விமானங்கள், செயற்கை நுண்ணறிவு, தகவல் மேலாண்மை அமைப்புகள் (MIS), நவீன ஆயுதங்கள் மற்றும் வன நிலப்பரப்பிற்கேற்ற வாகனங்கள் உள்ளிட்ட நவீன கருவிகளுடன்** வனப்படையை நவீனப்படுத்துவதற்கு சிறப்பு கவனம் செலுத்தப்படும்.

56) கடற்கரையோரங்களைப் பாதுகாப்பதற்கும், தமிழ்நாட்டின் கரையோரப் பகுதிகளின் மாசுபாட்டைக் குறைப்பதற்கும் செயல் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு செயல்படுத்தப்படும். **அடுத்த 5 ஆண்டுகளில், சர்வதேச நீலக் கொடி சான்றிதழை (Blue Flag Certifcate) பெறுவதற்காக, உள்ளாட்சி அமைப்புகளின் ஆதரவுடன் 10 கடற்கரைகள் மேம்படுத்தப்படும். 'நீலக்கொடி சான்றிதழ்'** கடற்கரைகளின் தரம், பாதுகாப்பு, சுற்றுச்சூழல் கல்வி, தகவல் மற்றும் பாதுகாப்பு சேவைகளுக்கான உயர் தரங்களை கட்டாயப்படுத்துகிறது.

57) தமிழ்நாடு நதிப் பாதுகாப்பு திட்டத்தின் ஒரு பகுதியாக, முக்கிய நகரங்கள் மற்றும் தொழில்துறை பகுதிகளில் உள்ள முக்கிய ஆறுகளின் மேல் மற்றும் கீழ் பகுதிகளில் நிரந்தர நீர் தரக் கண்காணிப்பு நிலையங்கள் அடுத்த மூன்று ஆண்டுகளில் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தால் படிப்படியாக நிறுவப்படும். அனைத்து கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள், தேவையான தர அளவுகளை அடைவதையும், நீர்நிலைகளை மாசுபடுத்தாமல் இருப்பதையும் உறுதிசெய்வதற்காக, கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் நிகழ்நேர அடிப்படையில் இணைய வழியில் கண்காணிக்கப்படும்.

58) தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம், அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் ஒரு இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் தொகை கொண்ட நகரங்களிலும், தொடர் சுற்றுப்புற காற்று–தர கண்காணிப்பு நிலையங்களை நிறுவவுள்ளது. காற்றின் தரத்தினை நிகழ் நேரத்தில் கணிக்கவும் முன்னெச்சரிக்கை அறிவிப்பதற்காகவும் **இந்தியாவின் முதல் "ஒருங்கிணைந்த சுற்றுச்சூழல் கண்காணிப்பு மையம்" ஒன்று தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தால் நிறுவப்படும்.**

59) தமிழ்நாட்டிலுள்ள ஈர நிலங்களின் சூழலியலை மேம்படுத்தவும், அதன் இயற்கை சூழலை மீளுருவாக்கவும், மாண்புமிகு முதலமைச்சரின் தலைமையின்கீழ், ''தமிழ்நாடு ஈர நிலங்கள் இயக்கம்'' ஒன்றினை இந்த அரசு ஏற்படுத்தும். இந்த இயக்கம் ஐந்து ஆண்டுகளில் 100 ஈர நிலங்களை கண்டறிந்து, அவற்றின் இயற்கை சூழலை மீள உருவாக்கும் பணிகளை மேற்கொள்ளும். இதனால் அவற்றை சார்ந்தோரின் வாழ்வாதாரம் உயரும். இதற்கென 150 கோடி ரூபாய் நிதி ஐந்தாண்டுகளுக்கு செலவிடப்படும்.

கட்டுமானத் தொழில்நுட்பங்கள்

60) பொதுப்பணித்துறையை இரண்டாகப் பிரித்ததால், கட்டடங்களை கட்டுவதிலும் பராமரிப்பதிலும் புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதற்கான ஒரு வாய்ப்பை உருவாக்கியுள்ளது. கட்டுமானத் திட்டங்கள் தொழில்நுட்பரீதியாக கடினமானவை. குடிமக்களுக்குப் பெரிய அளவில் பயன்தரும் வகையில், செலவு குறைவாகவும், விரைவாகவும், பாதுகாப்பாகவும் கட்டடங்கள் கட்டப்பட வேண்டும். சுற்றுச்சூழலுக்கும், காலநிலை மாற்றத்திற்கும், ஏற்ற கட்டுமானத் தொழில்நுட்பத்திற்கு மாறுவது மிகவும் அவசியமாகும். கட்டுமானச் சவால்களை எதிர்கொள்வதற்காக கட்டட தகவல் மாதிரியாக்கம், புதுமையான விரைவு கட்டுமானத் தொழில்நுட்பம், தானியங்கு தொழில்நுட்பம், நீடித்து நிலை நிற்கும் கட்டுமானப் பொருட்களைப் பயன்படுத்துவது, ஆகியவற்றை செயல்படுத்துவதில் இந்த அரசு உறுதியாக உள்ளது. கட்டுமானத்திற்கான விலை விவர அட்டவணை மாற்றியமைக்கப்பட்டு மேம்படுத்தப்படும். **திட்ட மதிப்பீடு, ஒப்பந்தப்புள்ளி, திட்ட மேற்பார்வை, கண்காணிப்பு மற்றும் பட்டியலிடும் நடைமுறைகள் இவையனைத்தும் ஓராண்டுக்குள்ளாக முழுமையாக மின்னணுமயமாக்கப்படும்.**

ஊரக வளர்ச்சி

61) இந்த அரசின் திட்டங்கள் கிராமப்புரங்களில் வாழும் அனைத்து மக்களுக்கும் நல்ல வாழ்வாதாரங்களுடனான அடிப்படை கட்டமைப்பையும் சேவைகளையும் வழங்குவதில் கவனம் செலுத்தும். **மாநிலத்திலுள்ள அனைத்து 79,395 குக்கிராமங்களுக்கும் ஒரு நாளைக்கு குறைந்தபட்சம் ஒரு நபருக்கு 55 லிட்டர் தரமான குடிநீர் வழங்க வழிவகை செய்யப்படும். கிராமப்புரங்களில் அமைந்துள்ள 1.27 கோடி**

**குடும்பங்களுக்கும் வீட்டு குடிநீர் இணைப்புகள் வழங்க வழிவகை செய்யப்படும். தற்போது வீட்டிற்கான குடிநீர் இணைப்பு இல்லாத 83.92 லட்சம் குடும்பங்களுக்கும் 2024ஆம் ஆண்டு மார்ச் மாத இறுதிக்குள்ளாக குடிநீர் இணைப்பு வசதிகள் வழங்க வழிவகை செய்யப்படும். இந்த நோக்கத்தை நிறைவேற்ற 2,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஜல் ஜீவன் இயக்கம் செயல்படுத்தப்படும்.**

62) முதன்முதலாக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களது ஆட்சியில்தான், கிராமப்புர ஏழைகளுக்கு கான்கிரீட் கூரை வீடுகளை வழங்கும் திட்டம் இந்தியாவில் முன்மாதிரியாக செயல்படுத்தப்பட்டது. 2020–21 ஆம் ஆண்டில், பிரதம மந்திரி வீட்டு வசதித் (கிராமம்) திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் புதிய வீடுகளைக் கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்பது வருத்தத்திற்கு உரியது. 2016–17 முதல் 2019–20 வரையிலான காலகட்டத்தில் ஏற்கெனவே கட்டுமானத்திற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட 2,14,629 வீடுகள் இன்றும் நிறைவு செய்யப்பட வேண்டியுள்ளன. **முழுமையடையாத அனைத்து வீடுகளும் விரைந்து முடிக்கப்படுவதை இந்த அரசு உறுதி செய்வதுடன், 2021-22 ஆம் ஆண்டில் மொத்தம் 8,017.41 கோடி ரூபாய் செலவில், மேலும் 2,89,877 வீடுகள் கட்டப்படும். கிராமப்புரங்களில் தற்போது வீடு இல்லாத 8,03,924 குடும்பங்களுக்கும் அடுத்த 5 ஆண்டுகளில் வீடு வழங்கப்படுவதை இந்த அரசு உறுதி செய்யும். தற்போதுள்ள மேற்கூரைக்கான செலவான 50 ஆயிரம் ரூபாயுடன், கூடுதலாக மாநில அரசின் தரப்பிலிருந்து 70 ஆயிரம் ரூபாய் வழங்கப்படுவதால், ஒரு வீட்டிற்கான அரசு மானியம் 2.76 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. மிகவும் ஏழை, எளிய பயனாளர்களுக்கு விரைவாக, விலைக் குறைவாக வீடுகள் கட்டுவதற்காக, நவீன, விலை குறைவான கட்டுமான தொழில்நுட்பங்களை இந்த அரசு ஊக்குவிக்கும். 2021-22ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டில்**

**கிராமப்புர வீட்டு வசதித் திட்டத்தில், 3,548 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.**

63) கிராமப்புர மக்களின் நலனை மேம்படுத்த சுற்றுப்புற சுகாதாரம் மிகவும் முக்கியமானது. 2021–22 ஆம் ஆண்டில், 44,855 தனிநபர் வீட்டுக் கழிப்பறைகளை அமைக்கவும், 1,028 சமூக சுகாதார வளாகங்களையும் 97 நெகிழி கழிவு மேலாண்மை மையங்களையும் அமைக்க மொத்தம் 400 கோடி ரூபாய் செலவில், 'தூய்மை பாரத இயக்கம்' செயல்படுத்தப்படும். இது தவிர, 1,622 கிராம ஊராட்சிகளில் திடக்கழிவு மேலாண்மை சேவைகள் வழங்கப்படும்.

64) 2020–21 காலகட்டத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் தொடங்கப்பட்ட 4,67,567 பணிகளில் 2,65,016 பணிகள் நிறைவு செய்யப்பட வேண்டியுள்ளன. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்பு சட்டத்தை அமல்படுத்துவதில் பொருளாதார ஆலோசனைக் குழுவின் உறுப்பினரான ஜான் டிரேஸ் முக்கிய பங்கை வகித்தார். இந்த அரசு இத்திட்டத்திற்கு கூடுதல் உந்துதலை அளிப்பதுடன், மொத்த ஊதிய செலவு 6825 கோடி ரூபாயும், பொருட்செலவாக 3,200 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்து, நடப்பாண்டில் 25 கோடி மனித உழைப்பு நாட்கள் அளவிலான வேலைவாய்ப்பை உறுதி செய்யும். மேலும், இத்திட்டத்தில் மனித உழைப்பு நாட்களை 100இலிருந்து 150 ஆக உயர்த்தவும், ஊதியத்தினை நாளொன்றுக்கு 273 ரூபாயிலிருந்து 300 ரூபாயாக உயர்த்தவும் இந்த அரசு ஒன்றிய அரசை வலியுறுத்தும்.

65) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கான நிதி, நடப்பு ஆண்டிலிருந்து ஒரு தொகுதிக்கு 3 கோடி ரூபாயாக மீண்டும் அளிக்கப்படும்.

66) இந்த அரசு, 2021-22 ஆம் ஆண்டில் 1,200 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தைத் தொடங்கவுள்ளது. இத்திட்டம், குக்கிராம அளவில் நிலவும் அடிப்படை உட்கட்டமைப்பிற்கான இடைவெளிகளை நிறைவு செய்வதை உறுதி செய்யும்.

67) மறைந்த மாண்புமிகு முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அறிமுகப்படுத்திய மிகப் புகழ்பெற்ற திட்டம் 'நமக்கு நாமே' திட்டம். இத்திட்டம், உள்ளூர் சமூகங்களுடன் இணைந்து உள்ளூரின் முக்கியமானப் பணிகளை மேற்கொள்ள மீண்டும் அறிமுகப்படுத்தப்படும். 2021-22 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

68) தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதாரத் திட்டம் புதுப்பிக்கப்பட்டு 36,218 சுய உதவிக்குழுக்கள் பயன்பெறும் வகையில் 809.79 கோடி ரூபாய் செலவில் 2021-22 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படும். நடப்பு ஆண்டில் தமிழ்நாட்டில் உள்ள சுய உதவிக்குழுக்களுக்கு வங்கிகளின் உதவியுடன் 5,500 கோடி ரூபாய் சிறப்பு கோவிட் கடன் உட்பட 20,000 கோடி ரூபாய் கடன் உறுதிசெய்யப்படும். தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம் சீரமைக்கப்பட்டு 2021–22 ஆம் ஆண்டில் மொத்தம் 212.69 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்.

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை**

69) தூய்மையான மற்றும் பசுமையான சூழல், தேவையான அடிப்படை வசதிகள், எழில்மிகு பொது இடங்கள், மேம்பட்ட வாழ்க்கைத் தரத்துடன், வாழக்கூடிய நகரங்களை உருவாக்க இந்த அரசு உறுதி பூண்டுள்ளது. பொறுப்புமிக்க மற்றும் வெளிப்படையான நகர்ப்புர நிர்வாகம் மேம்படுத்தப்படும்.

70) அனைத்து மாநகராட்சிகளிலும் நாளொன்றுக்கு ஒரு நபருக்கு 135 லிட்டர் மற்றும் அனைத்து நகராட்சிகளிலும் நாளொன்றுக்கு ஒரு நபருக்கு 90 லிட்டர் மற்றும் அனைத்து பேரூராட்சிகளிலும் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 70 லிட்டர் குடிநீர் வழங்குதல் உறுதி செய்யப்படும். ஒவ்வொரு வீட்டிற்கும் குடிநீர் இணைப்புகள் வழங்கப்படும் நகரங்களில் போதிய அளவு நீர் ஆதாரங்கள் இருப்பதை உறுதி செய்யப்படும். ஒவ்வொரு நகரத்திற்கும் நீர் சமநிலைத் திட்டங்கள் தயாரிக்கப்படும்.

71) நகர்ப்புரங்களில் உள்ள அனைவருக்கும் கழிப்பறை அணுகும் வசதி ஏற்படுத்தப்பட்டு, திறந்த வெளியில் மலம் கழிக்கும் நடைமுறை முற்றிலும் தடுக்கப்படும். அனைத்து நகர்ப்புற மக்களும் பயன்பெறும் வகையில் பாதாள சாக்கடை திட்டங்கள் அமைக்கப்படும். **ஒரு இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் தொகை கொண்ட 27 நகரங்களில் பாதாள சாக்கடை திட்டங்கள் செயல்படுத்தப்படும்.** கழிவுநீர் அமைப்பின் பராமரிப்பு முழுமையாக இயந்திரமாக்கப்பட்டு செயல்படுத்தப்படும்.

72) **குப்பைகள் உருவாகும் நிலையிலேயே 100 சதவிகிதப் பிரித்தலை உறுதி செய்வதன் வாயிலாகவும், வீடுகள்தோறும் குப்பைகள் சேகரித்தல் மற்றும் 100 சதவிகிதம் அகற்றுவதன் வாயிலாகவும் நாம் குப்பை இல்லா நகரங்களை உருவாக்குவோம்.** அனைத்து நகரங்களிலும்

தேவையான திடக்கழிவு மேலாண்மை வசதிகள் ஏற்படுத்தப்படும் மற்றும் **நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் உள்ள மண் சாலைகள் அனைத்தும் தரம் உயர்த்தப்படும். அனைத்து நகர்ப்புரங்களிலும் பாதசாரிகள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் எளிதில் பயன்படுத்தத்தக்க நடைபாதைகள் அமைக்கப்படும்.** அனைத்து நகரங்களிலும் 30 மீட்டர் இடைவெளியில் தெரு விளக்குகள் நிறுவப்பட்டு அனைத்து தெரு விளக்குகளும் ஆற்றல் திறன் மிக்க விளக்குகளாக மாற்றியமைக்கப்படும்.

73) நீர்நிலைகளை மீட்டெடுப்பதற்கும், பூங்காக்கள் அமைக்கவும், பொழுதுபோக்கு மற்றும் விளையாட்டு வசதி, மரம் நடுதல், பள்ளிக் கட்டடங்கள், மருந்தகங்கள் மற்றும் நூலகங்கள் அமைத்து மேம்படுத்துவதற்கும் தமிழ்நாட்டின் அனைத்து நகர்ப்புரங்களிலும் 'நமக்கு நாமே' திட்டம் தீவிரமாக செயல்படுத்தப்படும். **நமக்கு நாமே திட்டத்தில் இதுபோன்ற பணிகளில் கணிசமாக பங்களிப்பவர்களுக்கு ஒவ்வோராண்டும் மாண்புமிகு முதலமைச்சரின் சிறப்பு விருது வழங்கப்படும். இத்திட்டத்திற்காக, 300 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. *மக்கள் சேவையில் மாநகராட்சி* மற்றும் *நமது சேவையில் நகராட்சித்* திட்டங்கள் மூலமாக அனைவருக்கும் இணையவழி சேவைகளை வழங்குவது உறுதி செய்யப்படும்.**

74) நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் வரியற்ற பிற வருவாய் அதிகரிக்க தற்போது இருக்கும் வருவாய் ஈட்டும் சொத்துக்களின் மதிப்பை கூட்டுவதன் மூலமும், புதிய வருவாய் ஈட்டும் சொத்துக்களான நவீன பேருந்து நிலையங்கள், வணிக வளாகங்கள், சமுதாயக் கூடங்களை உருவாக்குவதன் மூலமும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இந்த அரசு தற்போதைய பேருந்து

நிலையங்களை நவீன ஒருங்கிணைந்த பேருந்து நிலையங்களாக தரம் உயர்த்தும். **திருச்சிராப்பள்ளியில் புதியதாக ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் மற்றும் வணிக வளாகம் TUFIDCO நிதியுதவியுடன் ஏற்படுத்தப்படும்.**

75) பதினைந்தாவது நிதிக்குழு தனது அறிக்கையில் தமிழ்நாட்டில் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு மிகக் குறைந்த அளவே நிதி ஒதுக்கியுள்ளது. **தமிழ்நாட்டு மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவு செய்யும் நோக்கத்தில், 'கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டம்' என்ற புதிய திட்டத்திற்கு ரூபாய் 1,000 கோடி மதிப்பீட்டில் இந்த அரசு 2021-22 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்த உள்ளது.**

76) சீர்மிகு நகரங்கள் திட்டம் மற்றும் அம்ருத் திட்டத்தின்கீழ், நிறைவு பெறாத திட்டங்கள் அனைத்தும் 31.3.2023–க்குள் நிறைவு செய்யப்படும். **2021-22-க்கான வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளில், சீர்மிகு நகரங்கள் திட்டத்திற்கு 2,350 கோடி ரூபாயும், அம்ருத் திட்டத்திற்கு 1,450 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

77) நீடித்த நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் உலக வங்கியிடமிருந்தும், தமிழ்நாடு நகர்ப்புர முதன்மை முதலீட்டுத் திட்டத்தின் கீழ் ஆசிய மேம்பாட்டு வங்கியிடமிருந்தும் நகர்ப்புரப் பகுதிகளுக்கு தமிழ்நாடு நிதியுதவி பெறுகிறது. **ஆசிய மேம்பாட்டு வங்கியின் உதவியுடன் கொசஸ்தலை ஆற்றுப் படுகையில் ஒருங்கிணைந்த வெள்ள நீர் வடிகால் அமைப்பு ஏற்படுத்தப்படும். இதற்கென 2021-22 ஆம் ஆண்டின் வரவு செலவுத்திட்டத்தில் 87 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.** ஜெர்மன் வளர்ச்சி வங்கியிடமிருந்து உதவி பெறும் திட்டங்களுக்கு 2021–22 ஆம்

ஆண்டின் வரவு செலவுத்திட்டத்தில் 168.69 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

78) **சென்னையின் ஒவ்வொரு வீட்டிற்கும் குடிநீர் இணைப்பு அளிக்கப்பட்டு, சுத்தமான மற்றும் பசுமையான சென்னைக்கு முக்கியத்துவம் அளித்து சிங்கார சென்னை 2.0 தொடங்கப்படும்.** சென்னை பொது இடங்களில் சுவரொட்டிகள் இல்லாத நகரமாக மாற்றப்படும். பாரம்பரிய கட்டடங்கள் மற்றும் பொது இடங்கள் பொலிவு பெற நடவடிக்கை எடுக்கப்படும். தற்போது, பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் நடைபெறும் உயிரியல் அகழ்ந்தெடுக்கும் பணி விரைவுபடுத்தப்படும். கொடுங்கையூர் குப்பைக் கிடங்கில் உள்ள நிலத்தினை பழைய நிலைக்கு மீட்டெடுக்க உயிரியல் அகழ்ந்தெடுத்தல் பணிகள் மேற்கொள்ளப்பட்டு மீட்டெடுக்கும் நிலங்கள் நகரின் பசுமை வெளியாக மாற்றப்படும். **சென்னை நகரில் 3 இடங்களில் அதாவது கணேசபுரம் சுரங்கப்பாதையின் மேல், கொன்னூர் நெடுஞ்சாலை -ஸ்ட்ராண்ஸ் சாலை மற்றும் தெற்கு உஸ்மான் சாலையில் 335 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய மேம்பாலங்கள் கட்டப்படும். இதற்கென 500 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

79) ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு முகமையின் உதவியுடன் நாளொன்றுக்கு 400 மில்லியன் லிட்டர் (400 MLD) கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம் விரைவாக செயல்படுத்தப்படும். **சென்னை நகரத்துடன் இணைக்கப்பட்ட அனைத்து பகுதிகளுக்கும் மொத்தம் 2,056 கோடி ரூபாய் செலவில் பாதாள சாக்கடைத் திட்டம் ஏற்படுத்தப்படும். சென்னையில் உள்ள நீர்வழிகளில் கழிவுநீர் கலப்பதைத் தடுக்கும் திட்டம் மொத்தம் 2,371 கோடி ரூபாய் செலவில் தீவிரமாக செயல்படுத்தப்படும். ஆந்திரப் பிரதேசத்திலிருந்து குழாய் வழியாக**

**கிருஷ்ணா நீரை சென்னை நீர்த்தேக்கங்களுக்கு கொண்டு வருவதற்கான சாத்தியக்கூறு அறிக்கை தயாரிக்கப்படும்.**

சென்னை நகரக் கூட்டாண்மை

80) **சென்னை நகரக் கூட்டாண்மைத் திட்டம் விரைவில் உலக வங்கி மற்றும் ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் நிதியுதவியுடன் தொடங்கப்படும்.** இந்த அரசு பதவியேற்ற பின்னர், இத்திட்டம் குறித்து உலக வங்கியுடன் விரிவான கலந்துரையாடல்களை மேற்கொண்டதுடன், எமது கொள்கை அணுகுமுறைக்கு ஏற்ப சில கூறுகளை மறுவடிவமைப்பு செய்துள்ளது. இத்திட்டம், சென்னை நகரில் நீர்ப் பாதுகாப்பு மற்றும் தகவமைப்புத் திறனுடன் நகர்ப்புர இயக்கத்தை மேம்படுத்துதல், நிர்வாகக் கட்டமைப்பை வலுப்படுத்துதல் மற்றும் சென்னை பெருநகர போக்குவரத்துக் குழுமம் (CUMTA), பெருநகர சென்னை மாநகராட்சி, பெருநகரப் போக்குவரத்துக் கழகம் மற்றும் சென்னை பெருநகர நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் வாரியம் ஆகியவற்றின் நிதி ஆதாரத்தை மேம்படுத்துதல் கவனம் செலுத்தும்.

நகர்ப்புர ஊதிய வேலைவாய்ப்பு

**81)** கோவிட்–19 பெருந்தொற்று நகர்ப்புர ஏழைகளின் வாழ்வாதார வாய்ப்புகளையும், மாற்று வேலை தேடும் திறனையும் கடுமையாக பாதித்துள்ளது. எனவே, நகர்ப்புரங்களில் ஊதிய உத்தரவாதம் மற்றும் சமூக பாதுகாப்பை வழங்குவதற்காக ஒரு சிறப்புத் திட்டத்தை உருவாக்க வேண்டிய அவசியம் உள்ளது என்று டாக்டர் சி. ரங்கராஜன் குழு பரிந்துரை செய்துள்ளது. **அதன்படி, பூங்காக்கள், விளையாட்டு திடல்கள், வெள்ள நீர் வடிகால்கள்,**

**சாலைகள், கட்டடங்கள் போன்ற பொதுச் சொத்துகளை கட்டமைத்தல் மற்றும் பராமரித்தல் ஆகிய பணிகளிலும் நீர்நிலைகளைப் புதுப்பித்தல் போன்றவற்றிலும் நகர்ப்புர ஏழைகளை ஈடுபடுத்துவதன் மூலம் பயன்தரும் வேலைவாய்ப்பை ஏற்படுத்தக் கூடிய ஒரு முன்னோடி திட்டமாக இந்த அரசு ஒரு நகர்ப்புர ஊதிய வேலைவாய்ப்புத் திட்டத்தை ஏற்படுத்தும்.** மேலும், பல்வேறு திறன் மேம்பாட்டு திட்டங்களுடன் இந்தத் திட்டம் இணைக்கப்படும். இந்தத் திட்டத்திற்காக முதற்கட்டமாக **100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சி**

82) நிலையான நகரமயமாக்கலை உறுதிசெய்யும் அதே வேளையில், மாநிலத்தின் அனைத்துக் குடிமக்களுக்கும் போதிய ஏற்புடைய வீட்டுவசதி வழங்குவது இந்த அரசின் முக்கிய குறிக்கோளாக உள்ளது. இதற்காக, **தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு வீட்டுவசதி வாரியச் சட்டம், தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு குடிசைப்பகுதி (மேம்பாடு மற்றும் அகற்றுதல்) சட்டம், தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டம் மற்றும் தமிழ்நாடு 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு அடுக்குமாடி குடியிருப்பு உரிமையாளர்கள் சட்டம் உள்ளிட்ட வீட்டுவசதித் துறையின் பழைய சட்டங்கள் மறு ஆய்வு செய்யப்படும்.**

83) நாட்டின் மிகவும் நகரமயமாக்கப்பட்ட பெரிய மாநிலமாக தமிழ்நாடு இருப்பினும், அதன் மொத்த நிலப்பரப்பில் 7 சதவீதம் மட்டுமே பெருந்திட்டங்களின் (Master Plans) கீழுள்ளது. **மேற்சொன்னவாறு, பெருந்திட்டங்களின் கீழுள்ள நிலப்பரப்பு 22 சதவீதமாக உயர்த்தப்படுவதை இந்த அரசு உறுதி செய்யும்.**

84) சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் 1972ல் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் தொடங்கப்பட்டது. தற்போது தமிழகத்தில் 10 இலட்சம் பேர் வசிக்கக்கூடிய நகரங்கள் அதிகரித்து வரும் நிலையில் நகரமயமாக்கலை ஒழுங்குபடுத்தி, திட்டமிட்ட நகரங்கள் அமைவதை உறுதி செய்திட, **புதிய பெருநகர வளர்ச்சிக் குழுமங்கள், மதுரை, கோயம்புத்தூர் - திருப்பூர் பகுதி, வேகமாக வளர்ந்து வரும் ஓசூர் பகுதிக்கு ஏற்படுத்தப்படும்.**

85) **மேலும் 10 ஆண்டு காலத்திற்குள், தமிழ்நாடு முற்றிலுமாகக் குடிசைகளற்ற மாநிலமாக விளங்க வேண்டுமென்பதில் இந்த அரசு உறுதியாக உள்ளது.** நகர்ப்புர ஏழைகளுக்கான மொத்த வீட்டுவசதித் தேவை 9,53,446 குடியிருப்புகள் / வீடுகள் என மதிப்பிடப்பட்டுள்ளது. **தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்காக 3,954.44 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.**

86) **நீர்நிலைகள் உட்பட ஆட்சேபணையுள்ள புறம்போக்கு நிலங்களிலிருந்து, குடிசையில் வாழும் மக்களை மனிதாபிமானத்துடன் நியாயமான முறையில் மறுகுடியமர்த்துவதற்காக, அனைத்து பொறுப்பாளர்களுடன் கலந்தாலோசித்து ஒரு புதிய குடிசை மறுகுடியமர்வு மற்றும் புனர்வாழ்வுக் கொள்கை வகுக்கப்படும்.**

87) உலக வங்கி நிதியுதவியுடன் தமிழ்நாடு வீட்டுவசதித் துறை வலுவூட்டும் திட்டம் மற்றும் தமிழ்நாடு வீட்டுவசதி மற்றும் உறைவிட மேம்பாட்டு திட்டம் ஆகியவை ஏற்கெனவே செயல்படுத்தப்பட்டு வருகின்றன. **இரண்டாவது தமிழ்நாடு வீட்டுவசதித் துறை வலுவூட்டும் திட்டம் உலக வங்கியின் நிதியுதவியுடன் விரைவில் மேற்கொள்ளப்படும். ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதியுதவியுடன், நகர்ப்புர ஏழை மக்களுக்கு பேரிடர்களை எதிர்கொள்ளும்**

**நிலைத்திருக்கக்கூடிய அனைவருக்குமான வீட்டுவசதித் திட்டத்தின் பேச்சுவார்த்தைகள் அண்மையில் நிறைவடைந்துள்ளன.** வீட்டுவசதி துறையில், உலக வங்கித் திட்டங்களுக்கு 320.40 கோடி ரூபாய் எனவும் ஆசிய வளர்ச்சி வங்கித் திட்டத்திற்கு 171 கோடி ரூபாய் எனவும் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

நெடுஞ்சாலைகள்

88) நாட்டிலேயே அதிக அளவிலான தார் சாலைகள் தமிழ்நாட்டில் உள்ளன. தமிழ்நாட்டில் உள்ள 2.61 லட்சம் கி.மீ சாலைகளில், 61,131 கி.மீ., சாலைகள் மாநில நெடுஞ்சாலையாகவும், 6,606 கி.மீ., தேசிய நெடுஞ்சாலையாக பராமரிக்கப்படுகின்றன.

89) மாநில நெடுஞ்சாலைத்துறையின் கீழ் உள்ள சாலை அமைப்பு, ஒருங்கிணைந்த சாலை கட்டமைப்பு மேம்பாட்டு திட்டத்தின் கீழ் பராமரிக்கப்பட்டு மேம்படுத்தப்படுகிறது. இந்தத் திட்டத்திற்கான வரவு–செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடு 5,421.41 கோடி ரூபாய். **அடுத்த 10 ஆண்டுகளில் மாநில நெடுஞ்சாலைகளை மாவட்ட தலைமையகத்துடன் இணைக்கக்கூடிய 2,200 கி.மீ சாலைகளை 4 வழிச் சாலைகளாகவும், வட்ட தலைமையகத்தை இணைக்கும் 6,700 கி.மீ ஒற்றை மற்றும் இடைநிலை வழிச் சாலைகளை இரட்டை வழி நெடுஞ்சாலைகளாக மேம்படுத்துவதே இந்த அரசின் நோக்கம். தற்போது புற வழிச் சாலைகள் இல்லாத 59 நகராட்சிகளுக்கு புற வழிச் சாலைகள் அமைக்க முன்னுரிமை அளிக்கப்படும்.**

90) சென்னை முதல் கன்னியாகுமரி வரையிலான கிராண்ட் சவுத் டிரங்க் சாலை மாநிலத்தின் பொருளாதாரத்திற்கான முதுகெலும்பாகும். இந்த தேசிய நெடுஞ்சாலையை ஆறு மற்றும்

எட்டுவழி நெடுஞ்சாலையாக மொத்த தூரத்திற்கும் மேம்படுத்துவதற்கு ஒன்றிய அரசிடம் வலியுறுத்தப்படும். ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதியுதவியுடன் சென்னை கன்னியாகுமரி தொழில் பெருவழித் திட்டத்தின் கீழ், 6,448.24 கோடி ரூபாய் மொத்த செலவில், 589 கி.மீ நீளமுள்ள 16 மாநில நெடுஞ்சாலைப் பெருவழிகள் மேம்படுத்தப்படும். இதனால் முக்கிய தேசிய நெடுஞ்சாலைகளுடன் சிறந்த இணைப்பைப் பெறுவது உறுதி செய்யப்படும். தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் இரண்டாம் கட்டம் 663 கோடி ரூபாய் வரவு–செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும். 1,750 கோடி ரூபாய் வரவு–செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டில் சென்னை வெளி வட்ட சுற்றுச்சாலை திட்டம் செயல்படுத்தப்படும். நெடுஞ்சாலைத் துறையின் ஒட்டுமொத்த நிதி ஒதுக்கீடு 17,899.17 கோடி ரூபாயாக இருக்கும்.

போக்குவரத்து

91) தமிழ்நாட்டின் பேருந்துப் போக்குவரத்து அமைப்பு மாநிலத்திற்குப் பெருமை சேர்க்கும் ஒன்றாக ஒரு காலத்தில் இருந்தது. அரசுப் பேருந்துகளில் 2010–11 இல் 208.36 இலட்சமாக இருந்த தினசரி பயணிகளின் எண்ணிக்கை, 2019–20 இல் கோவிட் பெருந்தொற்றுக்கு முன்னரே 131.42 இலட்சமாகக் குறைந்துள்ளது என்பது வருந்தத்தக்கது. அனைத்து அண்டை மாநிலங்களை ஒப்பிட்டுப் பார்க்கினும், தமிழ்நாட்டில் உள்ள நகர மற்றும் புறநகர்ப் பேருந்து சேவைகளுக்கான கட்டணம் மிகக் குறைவாக இருக்கும் சூழலிலும், இவ்வாறு நிகழ்ந்துள்ளது. மிகவும் பழைய பேருந்துகள் மற்றும் மிக அதிக மேல்நிலைச் செலவுகள் உட்பட, பல காரணிகளால் மாநிலப் போக்குவரத்து நிறுவனங்கள் பாதிக்கப்பட்டுள்ளது தெளிவாகிறது. வெள்ளை அறிக்கையில் போக்குவரத்து

நிறுவனங்களின் கவலையளிக்கக்கூடிய நிதி நெருக்கடி விரிவாக விளக்கிக் கூறப்பட்டுள்ளது.

92) **மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாநிலத்தில் உள்ள வெண்பலகை கொண்ட நகரப் பேருந்துகளில் பெண்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் மூன்றாம் பாலினத்தவர் ஆகியோர் இலவசமாகப் பயணிக்கலாம் என அறிவித்திருந்தார். இந்த நோக்கத்திற்காக, 703 கோடி ரூபாய் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. மேலும் 750 கோடி ரூபாய் டீசல் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. 623.59 கோடி ரூபாய் ஜெர்மன் வளர்ச்சி வங்கி உதவியுடன் 1,000 புதிய பேருந்துகள் வாங்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

93) திறமையான, வசதியான மற்றும் மலிவான பொதுப் போக்குவரத்து வசதிகளை வழங்குவது, பொதுப் போக்குவரத்து அமைப்பில் பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க உதவும் என இந்த அரசு கருதுகிறது. பொருளாதாரத்தில் பல்பெருக்கு செயல்திறன், உற்பத்தித்திறன் அதிகரிப்பு, ஏழை மக்களின் வருமான உயர்வு மற்றும் சுற்றுச்சூழலில் நேர்மறைத் தாக்கம் என பல நேர்மறை வெளிப்பாடுகள் இதனால் ஏற்படும். **இந்த அரசு, நிதி மேம்பாட்டில் கவனம் செலுத்தும் அதே வேளையில், பேருந்து சேவைகளின் இயக்கத் திறனை மேம்படுத்துவதற்கும் பல நடவடிக்கைகளை மேற்கொள்ளும். போக்குவரத்து நிறுவனங்கள் சிக்கனமாகச் செயல்படுவதை உறுதி செய்வதற்கும், விதிமுறை அடிப்படையிலான செயல்திறன் குறியீடுகளின் இலக்கை அடைவதற்கும் முக்கியத்துவம் அளிக்கப்படும். இலவச அல்லது மானியம் அளிக்கப்பட்ட பேருந்துப் பயணம் வேண்டுமென அரசு விரும்பும் இனங்களில், நெறிசார் செலவு அளவுருக்களின் அடிப்படையில் வெளிப்படையான மானியம் வழங்கப்படும். இந்தப் புதிய முறை நடப்பு நிதியாண்டில் அமல்படுத்தப்படும்.**

## மெட்ரோ இரயில்

94) சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் இரண்டாம் கட்டத்திற்கான கட்டுமானப்பணிகள் முழு வீச்சில் தொடங்கப்பட்டுள்ளது. என்பதை இந்த மன்றத்திற்கு தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். ஒன்றிய நிதி அமைச்சரின் வரவு–செலவுத் திட்ட உரையில் ஏற்கெனவே உறுதியளிக்கப்பட்டவாறு, சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் இரண்டாம் கட்டத்திற்கு பங்கு மூலத்தனத்திற்கான விரைந்த முறையான ஒப்புதலை வழங்குமாறும் அதற்கு இணையான ஒன்றிய அரசின் பங்கினை விரைந்து வழங்குமாறும் ஒன்றிய அரசினை இந்த அரசு வலியுறுத்தும். **மெட்ரோ இரயில் திட்டத்தின் கோடம்பாக்கம் முதல் பூந்தமல்லி புறவழித்தடத்திற்கான சேவைகள், 2025 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் அதாவது நான்கு ஆண்டுகளுக்குள் தொடங்கும். மெட்ரோ இரயில் திட்டத்தின் மொத்த இரண்டாம் கட்டமும் 2026 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் முடிக்கப்படும். அதே நேரத்தில், மெட்ரோ ரயில் திட்டத்தை, தாம்பரம் வழியாக விமான நிலையத்திலிருந்து கிளம்பாக்கம் பேருந்து முனையம் வரை நீட்டிக்கும் பணியை இந்த அரசு விரைவாகத் தொடங்கும்.** மேலும், கோயம்புத்தூரில் மெட்ரோ இரயில் திட்டத்தை அமைப்பது குறித்து மத்திய அரசுடன் கலந்தாலோசித்து விரைவாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும். **மதுரையில் மெட்ரோ இரயில் திட்டத்தை அமைப்பதற்கான விரிவான சாத்தியக்கூறு அறிக்கைகள் தயார் செய்யப்படும்.**

## எரிசக்தி

95) தமிழ்நாட்டில் நிறுவப்பட்டுள்ள மொத்த மின் உற்பத்தித் திறன் 32,646 மெகாவாட் (சூரிய மற்றும் காற்றாலை

13,128 மெகாவாட் உட்பட) ஆக உள்ளது. இருப்பினும் உச்சபட்சமாக 16,846 மெகாவாட் மின் தேவை ஏற்படும்போது, உண்மையில் அதிகபட்சமாக 14,351 மெகாவாட் மின்சாரம் மட்டுமே கிடைக்கப்பெறுகிறது. காற்று ஆற்றல் குறிப்பிட்ட பருவகாலத்தில் மட்டுமே கிடைக்கப்பெறுகிறது, சூரிய ஆற்றல் பகலில் மட்டுமே கிடைக்கப்பெறுகிறது என்பதே உச்ச மின் தேவைகளை நிறைவு செய்ய இயலாமைக்கு முக்கிய காரணமாக இருந்துள்ளது. **ஏறத்தாழ 2,500 மெகாவாட் மின்சாரத்தை மின் சந்தைகளிலிருந்து வாங்கியே அரசு சமாளிக்கிறது. எனவே, கடந்த சில ஆண்டுகளில் தமிழ்நாடு மின் மிகை மாநிலமாக மாறியுள்ளது என்ற கூற்று தவறானது.**

96) தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் சிக்கலான நிதி நிலையினை வெள்ளை அறிக்கை மூலமாக மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். **தமிழ்நாடு மின் உற்பத்தி கழகம் சந்திக்கும் பெரும் நிதி இழப்புகள் முற்றிலும் நிலையற்ற தன்மையை ஏற்படுத்துகின்றன. ஆசிய வளர்ச்சி வங்கியின் உதவியுடன் செயல்படுத்தப்படவுள்ள சென்னை-கன்னியாகுமரி தொழில் பெருவழித்தடம் மின்துறை முதலீட்டுத் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மானக் கழகம் மற்றும் தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகம் ஆகிய நிறுவனங்களின் நிதி மறுசீரமைப்பு விரிவாக ஆய்வு செய்யப்படும். அந்த அறிக்கையின் மீது அரசு விரைந்து செயல்பட்டு மின் வாரியத்தின் கழக நிறுவனங்கள் நொடிந்து போவதிலிருந்து காப்பாற்ற நடவடிக்கை எடுக்கும்.** செலவினங்களைக் குறைக்கும் வகையில், புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உருவாக்கப்பட்டு விநியோக மட்டத்தில் ஒருங்கிணைக்கப்படும். மேலும், ஒட்டுமொத்த தொழில்நுட்ப மற்றும் வணிக இழப்புகளைக் குறைக்கும் வகையில் விநியோக அமைப்பு பலப்படுத்தப்படும். விலைப்பட்டியல் இடுதல் மேம்படுத்தப்பட்டு, மின் சேமிப்பு ஊக்குவிக்கப்படும். பல்வேறு

இத்தகைய கூட்டு நடவடிக்கைகளின் வாயிலாக, இந்த அரசு, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் மற்றும் தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகத்தின் நிதிநிலையை மீட்டெடுக்கும்.

97) தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தில் தற்போது நிறுவப்பட்டுள்ளவாறு, சொந்த அனல் மின் உற்பத்தி நிறுவுதிறன் 4,320 மெகாவாட் மட்டுமே. அவற்றில் 2,520 மெகாவாட் மின் உற்பத்தி செய்கின்ற 12 அலகுகள் 25 ஆண்டுகளுக்கு மேற்பட்டவை என்பதால், விரைவில் அவை மாற்றப்பட வேண்டும். இந்த அரசு, தமிழ்நாட்டிற்குப் போதிய மின்சாரம் வழங்குவதற்கு உத்தரவாதம் அளிப்பது மட்டுமன்றி, தமிழ்நாடு நெடுங்காலம் வரையில் யாதொரு மின் பற்றாக்குறையும் அற்ற மாநிலமாக இருப்பதை உறுதி செய்யும் வகையில், தற்போது நிறுவப்பட்டுள்ள மின் உற்பத்தித் திறனை சுற்றுச்சூழலுக்கு உகந்த வகையில் முறையாக உயர்த்துவதற்கும் உறுதிபூண்டுள்ளது. **அடுத்த 10 ஆண்டுகளில், சொந்த மின் உற்பத்தி நிலையங்களின் வாயிலாக, மாநிலத்தில் 17,980 மெகாவாட் மொத்த மின் உற்பத்தித் திறன் கூடுதலாக சேர்க்கப்படும்.**

98) தடையற்ற மின்சாரம் வழங்குவதை உறுதி செய்யும் வகையில், மின் பகிர்மான மற்றும் விநியோக அமைப்புகளுக்குப் போதிய முதலீடுகளும் வழங்கப்படும். இந்த அரசு பதவியேற்ற பின்னர், உடனடியாக 2021' ஜூன் மாதத்தில் மாபெரும் பராமரிப்புப் பணித் திட்டம் ஒன்றை செயல்படுத்துமாறு தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு உத்தரவிட்டது. அத்திட்டத்தின் கீழ் மரக்கிளைகளை அகற்றுதல், சேதமடைந்த மின்கம்பங்கள், சாய்ந்த மின்கம்பங்கள், சேதமடைந்த பில்லர்கள் மற்றும் மின்கடத்திகள் ஆகியவற்றை சரிசெய்தல் உள்ளிட்ட 2,72,912–க்கும் மேற்பட்ட

பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் காரணமாக மின் விநியோகத் தரம் கணிசமாக மேம்படுத்தப்பட்டுள்ளது.

99) **வேளாண்மைக்கான இலவச மின்சாரம் மற்றும் வீட்டிற்கான மின்சாரம் வழங்குவதற்கான மானியங்களுக்காகவும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் இழப்புகளுக்கு நிதி வழங்கவும் 19,872.77 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

மாநிலக் கல்விக் கொள்கை

100) **தமிழ்நாட்டின் வரலாற்று மரபு, தற்போதைய நிலைமை, எதிர்காலக் குறிக்கோள்களுக்கு ஏற்ப, மாநிலத்திற்கெனத் தனித்துவமான மாநிலக் கல்விக் கொள்கை ஒன்றை வகுப்பதற்கு, கல்வியாளர்கள் மற்றும் வல்லுநர்களைக் கொண்ட உயர் மட்டக் குழு ஒன்றை இந்த அரசு நியமிக்கும்.**

பள்ளிக்கல்வி

101) **பள்ளிக்கல்விக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படும் விதமாக இந்த வரவு-செலவுத்திட்டத்தில் மொத்தமாக 32,599.54 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.** தற்போது யாரும் விடுபடாமல் இருப்பதற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. 2019–20ஆம் ஆண்டில் தொடக்க நிலையில் ஏற்பட்ட 0.75 சதவீத இடைநிற்றல் விகிதம் கூட இருக்கக் கூடாது என்பதுடன், பள்ளிகளில் 100 சதவீத நிகர சேர்க்கை விகிதத்தை உறுதிப்படுத்த இந்த அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும். மலைப்பாங்கான மற்றும் தொலைதூரப் பகுதிகளில் 12 தொடக்கப் பள்ளிகள் புதிதாகத் தொடங்கப்படுவதுடன், 22 பள்ளிகள் தரம் உயர்த்தப்படும். சிறப்புத்

தேவைகள் உள்ள குழந்தைகள் மற்றும் புலம் பெயர்ந்த தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு சிறப்பு கவனம் செலுத்தப்படும். அனைவரும் எளிதில் பயன்படுத்தத்தக்க செயல்படக்கூடிய தடையில்லா கழிப்பறைகள், குடிநீர் வசதிகள் மற்றும் ஆய்வக வசதிகள் வழங்குவதில் உள்ள, கட்டமைப்புச் சேவைகளின் இடைவெளிகள் குறைக்கப்படும்.

102) அரசுப் பள்ளிகளின் மாணவர் எண்ணிக்கை 2012 ஆம் ஆண்டில் மொத்த மாணவர் எண்ணிக்கையில் 76 சதவீதத்திலிருந்து 2020 ஆம் ஆண்டில் 53 சதவீதமாகக் குறைந்துள்ளது. பள்ளிகளின் தரங்களில் வேறுபாடு உள்ளதாகக் கருதுவதால் ஏற்படும் இப்போக்கு முற்றிலும் மாற்றியமைக்கப்பட வேண்டும். அரசுப்பள்ளிகளின் கற்பித்தல் தரம் மற்றும் கற்றல் முடிவுகளுக்கு தற்போது உயர் முன்னுரிமை அளிக்கப்படுகிறது. **தேசிய அடைவு ஆய்வு கணக்கெடுப்பின்படி, கற்றல் விளைவுகளின் அடிப்படையில் முதல் மூன்று மாநிலங்களுக்குள் தமிழ்நாடு கொண்டுவரப்படுவதை அரசு உறுதி செய்யும்.**

103) பள்ளிகள் மனப்பாடம் செய்யும் முறையிலிருந்து விலகி மாணவர்களிடையே சிந்திக்கும் பழக்கத்தை ஊக்குவிக்க வேண்டும். ஆசிரியர்களின் கற்பித்தல் ஆற்றலை மேம்படுத்துதல், ஆசிரியருக்கான பயிற்சி மற்றும் ஊக்கமளித்தல் மற்றும் பெற்றோரின் பங்களிப்பை விரிவாக்குதல் ஆகியவை கற்றல் செயல்பாட்டில் முக்கியமானவையாகும். **அனைத்து ஆசிரியர்களுக்கும் தொழில்நுட்ப வசதியுடன் கண்காணிக்கக்கூடிய மற்றும் ஆதாரங்கள் அடிப்படையிலான பயிற்சி வழங்க ஏதுவாக 413 கல்வி ஒன்றியங்களுக்கும் தலா 40 தொடுதிரை கையடக்க கணினிகள்(Tablet) 13.22 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வழங்கப்படும்.**

104) **2025-ஆம் ஆண்டிற்குள் தமிழ்நாட்டில் உள்ள 8 வயதிற்குட்பட்ட அனைத்து மாணவர்களும் அந்தந்த வகுப்பு அளவில் படிக்கவும், எழுதவும், அடிப்படைக் கணக்குகளை செய்யவும் முடியும் என்பதை உறுதி செய்வதற்காக, அடிப்படை கல்வியறிவு மற்றும் கணித அறிவை உறுதி செய்ய 'எண்ணும் எழுத்தும் இயக்கம்', 66.70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தீவிரமாக செயல்படுத்தப்படும்.**

105) **அரசுப்பள்ளி மாணவர்கள் கணினித் திறன்களை இளம் வயதிலேயே பெறுவதை உறுதிசெய்ய 1,784 அரசு நடுநிலைப் பள்ளிகளில் 114.18 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள் ஏற்படுத்தப்படும். மேலும், 865 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 20.76 கோடி ரூபாயில் ஸ்மார்ட் வகுப்பறைகள் துவக்கப்படும்.**

106) **அரசுப் பள்ளிகளில் பயிலும் ஏழை எளிய மாணவர்களுக்கு கல்வி, கவின்திறன் மற்றும் விளையாட்டில் சிறந்து விளங்குவதற்கான வாய்ப்பை அளிக்கும் நோக்கத்துடன், மாதிரிப் பள்ளிகள் அமைத்திட சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்படும்.**

107) **கொரோனா பெருந்தொற்றின் பரவல் காரணமாக ஏற்பட்டுள்ள கற்றல் இழப்புகளைக் குறைப்பதே இந்த அரசின் உடனடி முன்னுரிமையாக இருக்கும்.** மாண்புமிகு முதலமைச்சரின் பொருளாதார ஆலோசனைக் குழு உட்பட அனைத்து வல்லுநர்களுமே இதற்கென குரல் எழுப்பியுள்ளனர். கல்வி தொலைக்காட்சி மற்றும் 14 தனியார் தொலைக்காட்சி அலைவரிசைகள் மற்றும் ஒலி ஒளிபரப்புகளின் வாயிலாக, தொடர் கற்றல் அடைவதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டது. **பள்ளிகள் மீண்டும் திறக்கப்பட்டு விரைவாக செயல்படும் வகையில் அனைத்து ஆசிரியர்களுக்கும் தேவையான கொரோனா தொடர்பாக**

**கடைபிடிக்க வேண்டிய நெறிமுறைகளுக்கான பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது மற்றும் அனைவருக்கும் தடுப்பூசி வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படும். கற்றலில் ஏற்பட்ட இழப்புகளை சரிசெய்வதற்காக பள்ளி நேரங்களை தவிர பள்ளி வளாகங்களுக்கு வெளியே குறைதீர் கற்றல் வழங்குவதற்கான விரிவானத் திட்டம் அறிமுகப்படுத்தப்படும்.**

உயர்கல்வி

108) அகில இந்திய அளவில் காணப்படுகிற உயர்கல்வி மாணவர் சேர்க்கை விகிதமான 27.1 சதவீதத்துடன் ஒப்பிடுகையில், தமிழ்நாட்டில் உயர்கல்வி மாணவர் சேர்க்கை விகிதம் 51.4 சதவீதம் என்ற மிக உயர்ந்த அளவிலும், மாணவர் : ஆசிரியர் விகிதம் 17:1 என்ற சிறப்பான விகிதத்தையும் கொண்டு தமிழ்நாடு முன்னணி மாநிலமாக உள்ளது. இன்னும் பல்வேறு வட்டங்களில் அரசு அல்லது அரசு உதவிபெறும் கல்லூரியோ அல்லது பல்தொழில்நுட்பக் கல்லூரியோ இல்லை. மாநிலத்தில் உயர்கல்வி சென்றடையாத பகுதிகளுக்கும் அடுத்த பத்தாண்டுகளில் அரசால் உயர்கல்வி விரிவுபடுத்தப்படும். **இந்த ஆண்டு புதிதாக 10 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் துவங்கப்படும்.**

109) உயர் கல்வியின் தரம் முக்கியத்துவம் வாய்ந்தது. தற்போது தமிழ்நாட்டிலுள்ள நான்கு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மட்டுமே (தலைசிறந்த 100 கல்லூரிகள்) தேசிய கல்வி நிறுவன தரவரிசை கட்டமைப்பு (NIRF) வெளியிட்ட பட்டியலில் உள்ளன. **மேலும் தரத்தை மேம்படுத்தி, அதிகளவிலான கல்வி நிறுவனங்கள் தேசிய மதிப்பீடு மற்றும் தரச்சான்றுக் குழுவின் தரநிலையை அடைவதற்கு அரசு முன்னெடுப்புகளை மேற்கொள்ளும்.**

**அதிக எண்ணிக்கையிலான காலிப் பணியிடங்கள், குறிப்பாக, ஆசிரியர் பணியிடங்கள் முன்னுரிமை அடிப்படையில் நிரப்பப்படும். கற்றல் மேலாண்மை அமைப்பு மற்றும் நிறுவன வள திட்டமிடல் மென்பொருளானது அனைத்து உயர்கல்வி நிறுவனங்களிலும் அமைந்திட விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்படும்.**

110) மாணவர்களுக்கு வேலைவாய்ப்பினை அதிகரிக்கும் வண்ணம் தொழில் நிறுவனங்களுடன் ஆலோசித்து, பல்வேறு கல்லூரிகளில் பயிற்றுவிக்கப்படும் பாடப்பிரிவுகள் மறுசீரமைக்கப்படும். **25 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஸ்மார்ட் வகுப்பறைகள் ஆரம்பிக்கப்படும். மேலும் 4 அரசு பொறியியல் கல்லூரிகளில் கூடுதலாக மாணவர் விடுதிகள் கட்டப்படும்.**

111) **ராஜா முத்தையா மருத்துவக் கல்லூரியை கடலூர் மாவட்டத்திற்கான அரசு மருத்துவக் கல்லூரியாக ஆணை பிறப்பித்ததும், அண்ணாமலை பல்கலைக்கழகத்தை கடலூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, மயிலாடுதுறை மாவட்டங்களுக்கான இணைவு வழங்கும் பல்கலைக்கழகமாக ஆணை பிறப்பித்ததும், அண்ணாமலைப் பல்கலைக்கழகம் சந்தித்து வரும் நிதி நெருக்கடியைச் சமாளிக்க ஏதுவாக இருக்கும்.**

112) **மற்றுமொரு புதிய முன்மாதிரி முயற்சியாக, ஆளில்லா விமானங்களுக்கென தமிழ்நாடு ஆளில்லா விமானக் கழகம் அண்ணா பல்கலைக்கழக சென்னை தொழில்நுட்ப நிறுவனத்துடன் இணைந்து துவக்கப்படும்.** இந்நிறுவனம், தமிழ்நாடு மட்டுமல்லாது, பிற மாநிலங்களிலும் உள்ள அரசு மற்றும் அரசு சார்ந்த முகமைகள் ஆளில்லா விமானங்களைப் பயன்படுத்துவதில் உறுதுணையாக இருக்கும்.

113) உயர் கல்விக்காக 5,369.09 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

**மருத்துவம் மற்றும் குடும்ப நலம்**

114) கொரோனா பெருந்தொற்றின் பாதிப்புகளை எதிர்கொண்ட 2020 மற்றும் 2021–ஆம் ஆண்டுகள் நம் நினைவுகளில் மறக்க இயலாத வடுக்களை ஏற்படுத்தி விட்டன. 2021ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் தொடங்கி தமிழ்நாடெங்கும் வெகு தீவிரமாக பரவியிருந்த கொரோனா பெருந்தொற்று புதிய அரசு பதவியேற்கும்போது பெரும் சவாலை முன் வைத்தது. தமிழ்நாட்டின் சுகாதார கட்டமைப்பு கடுமையானதொரு சோதனைக்குள்ளாகியிருந்தது. ஏனைய அனைத்து அரசு நடவடிக்கைகளுக்கும் மேலாக, கொரோனா பெருந்தொற்றுக்கு எதிரான போருக்கு முன்னுரிமை அளித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கைகளை தொடங்கியதை இந்த மன்றத்தின் உறுப்பினர்கள் நினைவு கூர்ந்து கொள்வார்கள்.

115) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கோரிக்கையை ஏற்று, முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 509.56 கோடி ரூபாய் வழங்கப்பட்டது. மாற்றியமைக்கப்பட்ட இணையதளம் மூலம் அயல்நாட்டில் வாழும் தமிழ் மக்களும் நன்கொடை வழங்கினார்கள். இதுவரை மருந்துகள், மருத்துவ உபகரணங்கள் மற்றும் கோவிட் தொற்றினால் ஒன்று அல்லது இரண்டு பெற்றோர்களை இழந்த குழந்தைகளுக்கு நிதியுதவி என மொத்தம் 241.40 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

116) மேற்கொண்டும் கொரோனா பெருந்தொற்று பரவுவதை தடுப்பதற்கு, இந்த அரசு நோய்த் தொற்றினை தொடர்ந்து

கண்காணித்து வருகிறது. மேலும் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்த அறிவிக்கப்பட்ட பல்வேறு கட்டுப்பாடுகளை தொடர்ந்து அமல்படுத்தி வருகிறது. **நோய்த் தொற்றைத் தடுக்க தடுப்பூசி போடுவது மிகவும் அவசியமாகும். நாள்தோறும் 8 இலட்சம் பேருக்குத் தடுப்பூசி போடும் திறன் பெற்றிருந்தும், 2.4 இலட்சம் அளவில் மட்டுமே தடுப்பூசி வரப்பெறுகிறது. தமிழ்நாட்டு மக்களுக்கு போதுமான அளவில் தடுப்பூசி வழங்கவேண்டிய தேவையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு பிரதமர் அவர்களின் கவனத்திற்கு அடிக்கடி எடுத்துச் சென்றார்.** மேலும், தனியார் மருத்துவமனைகளில் CSR மூலம் இலவசத் தடுப்பூசி வழங்கும் முன்மாதிரி திட்டமும் செயல்படுத்தப்பட்டது.

117) கொரோனா பெருந்தொற்றின் மூன்றாவது அலையை எதிர்கொள்வதற்கு போதுமான மருத்துவ வசதிகளை இந்த அரசு உறுதி செய்து வருகிறது. அதன்படி, மாநிலம் முழுவதும் கூடுதல் சுகாதார கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டு, குழந்தைகள் நல மருத்துவ சிகிச்சை வசதிகள் வலுவூட்டப்பட்டு வருகின்றன.

118) **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 'மக்களைத் தேடி மருத்துவம்' எனும் மகத்தான முன்மாதிரித் திட்டம் உருவாக்கப்பட்டு மொத்தம் 257.16 கோடி ரூபாய் செலவில் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.**

119) 2018ல் சிசு இறப்பு விகிதம் 15 எனவும் தாய் இறப்பு விகிதம் 60 எனவும் தமிழ்நாடு முக்கிய சுகாதாரக் குறியீடுகளில் முன்னிலை வகித்து வருகிறது. சிசு இறப்பு விகிதம், தாய் இறப்பு விகிதம் ஆகியவற்றை குறைப்பதில் ஒரு முக்கிய பங்கு வகித்து வரும் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டம் மறைந்த

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் முதன்முதலில் அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு திட்டமாகும். தாய் இறப்பு விகிதத்தை மேலும் குறைப்பதற்கேதுவாக குழந்தை பிறப்பிற்கு பிந்தைய மருத்துவ நலக்கொள்கையில் இந்த திட்டம் தொழில்நுட்பத்தின் மூலம் மேலும் சிறப்பாக ஒருங்கிணைக்கப்படும். 959.20 கோடி ரூபாய் செலவில் இதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

120) **முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், அனைவரின் பாராட்டையும் பெற்ற 108 இலவச ஆம்புலன்ஸ் சேவைகள் திட்டத்தை 15.09.2008 அன்று தொடங்கி வைத்தார். இலவச ஆம்புலன்ஸ்களின் எண்ணிக்கையானது 1,303 ஆக உயர்த்தப்பட்டு, சேவைகளின் தரம் மேலும் மேம்படுத்தப்படும்.**

121) **23-07-2009 அன்று தொடங்கப்பட்ட கலைஞர் காப்பீட்டுத் திட்டம் தொடர்ந்து முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் என்ற பெயரில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தனியார் மருத்துவ நிறுவனங்களிலுள்ள சிறந்த மருத்துவ வசதிகள் ஏழை மக்களுக்கு கிடைப்பதை உறுதிபடுத்தும் வண்ணம், கோவிட் பெருந்தொற்று காலத்தின்போது இத்திட்டத்தின் கீழ் பயன்பெறும் நோய்களும், சிகிச்சை முறைகளும் இந்த அரசால் விரிவுப்படுத்தப்பட்டன.** இந்த ஆண்டு மொத்தம் 1,046.09 கோடி ரூபாய் செலவில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

122) மிக மந்த நிலையில் செயல்படுத்தப்பட்டு வந்த, ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு முகமையின் நிதியுதவியுடனான தமிழ்நாடு நகர்ப்புர சுகாதாரத் திட்டம் தற்போது விரைவுபடுத்தப்பட்டுள்ளது. 17 நகரங்களில் அமைந்துள்ள 21 அரசு நிறுவனங்களில் மருத்துவக் கட்டடங்களும் கூடுதல் வசதிகளும் ஏற்படுத்தப்படும். மேலும்

741.91 கோடி ரூபாய் மதிப்பில் மருத்துவக் கருவிகள் கொள்முதல் செய்யப்பட்டு வழங்கப்படும். தமிழ்நாட்டில் அளிக்கப்படும் சிகிச்சையின் தரத்தினை மேம்படுத்துதல், தொற்றாநோய் மற்றும் காயங்களுக்கு சிகிச்சை மேலாண்மையை வலுப்படுத்துதல் மற்றும் பேறுசார் மற்றும் குழந்தை நலத் திட்டத்தில் காணப்படும் ஏற்றத்தாழ்வு நீக்குவதற்கு, தமிழ்நாடு சுகாதார சீரமைப்புத் திட்டம் என்ற திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இந்த ஆண்டில் திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் மொத்தம் 116.46 கோடி ரூபாய் செலவில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

123) **முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், தமிழ்நாடு சித்தா பல்கலைக்கழகத்தை அமைத்திட திட்டமிட்டார். அதற்கென, உரிய நிலமும் கண்டறியப்பட்டது. அதற்குப் பின், இத்திட்டத்தை செயல்படுத்தவில்லை. மற்ற உள்நாட்டு மருத்துவ முறைகளைப் போல் சித்தாவிற்கும் உரிய அங்கீகாரம் அளிக்கும் விதமாக, தமிழ்நாடு சித்தா பல்கலைக்கழகத்தை இந்த அரசு அமைத்திடும். இதற்கென, முதல்கட்ட நிதியுதவியாக 2 கோடி ரூபாய் வழங்கப்படும்.**

124) மருத்துவம் மற்றும் குடும்ப நலத்துறைக்காக மொத்தம் 18,933.20 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாடு

125) புலம்பெயர் தொழிலாளர்கள் உட்பட அமைப்புசாரா தொழிலாளர்களின் நலன்களைப் பாதுகாக்க இந்த அரசு உறுதியாக உள்ளது. **அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியத்திற்கு மானியங்களை வழங்குவதற்காக, 215.64 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.** கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தின் செயல்பாடு

புதுப்பிக்கப்படும். அவர்களிடம் பயனற்று இருக்கும் கணிசமான நிதி, தொழிலாளர்களுக்கு உண்மையில் பயனளிக்கக்கூடிய வகையில் வீட்டுவசதி வழங்குவது உள்ளிட்ட திட்டங்களுக்குப் பயன்படுத்தப்படும்.

126) தமிழ்நாட்டின் இளைஞர்கள் பொருத்தமான, தரமான வேலைவாய்ப்பைப் பெறுவதை உறுதி செய்வதே இந்த அரசின் தலையாய கடமையாகும். நேரடி இணைய வழி போட்டி தேர்வுகளுக்கான பயிற்சி வகுப்புகள் வாயிலாக மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டும் மையங்களுக்கு மீண்டும் புத்துயிர் அளிக்கப்படும்.

127) **தொழில் நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து, தொழிற்பேட்டைகளில் அமைந்துள்ள தொழிற்பயிற்சி நிலையங்களில் தொழில் 4.0 எனும் நவீன தரத்திற்கு உயர் உற்பத்தி தொழில்நுட்பங்கள் மற்றும் திறன் மேம்பாட்டுப் பயிற்சி இளைஞர்களுக்கு வழங்கப்படும். இதனால், மேலும், சிறந்த வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும். நெய்வேலி நிலக்கரி நிறுவனத்துடன் இணைந்து புதிய தொழிற்பயிற்சி நிலையம் ஒன்று நெய்வேலியில் அமைக்கப்படும். தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் வாயிலாக, தொழிற்பயிற்சி நிலைய மாணவர்கள் தொழிற்சாலைகளில் திறம்பட வேலை செய்வதை உறுதி செய்வதற்காக, எதிர்கால வேலைவாய்ப்புக்கான திறன் பயிற்சியினை, தெரிவு செய்யப்பட்ட 15 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் வழங்க 60 கோடி ரூபாய் செலவில் திறன் மேம்பாட்டு மையங்கள் அமைக்கப்படும்.** தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்திற்கான மானியமாக 200 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

தொழில்கள்

128) வணிகம் செய்வதை எளிதாக்குவதில் தேசிய அளவில் தற்போது 14வது இடத்தை வகித்து வரும் தமிழ்நாட்டை முதல் மூன்று இடங்களுக்குள் கொண்டு வருவோம். **ஒற்றைச் சாளர அமைப்புமுறை திறம்பட செயல்படுத்தப்பட்டு, அதன் கீழ் 2021 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் மேலும் 100 சேவைகள் கொண்டு வரப்பட்டுள்ளன. 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் மேலும் 110 சேவைகளும் ஒற்றைச் சாளர வலைவாசலின் கீழ் கொண்டு வரப்படும்.** 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் வசதி சட்டத்தை திருத்தி, சுய சான்றிதழின் அடிப்படையில் ஆய்வுகள் இல்லாமல், பல்வேறு மாநில சட்டத்தின்கீழ், அனுமதி பெற்று முதல் 3 ஆண்டுகளில் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் உட்பட புதிய தொழிற்சாலைகளை அமைத்து, செயல்பட வழிவகை செய்யப்படும்.

129) **வளர்ந்து வரும் துறைகளில் தமிழ்நாட்டின் பங்கை வலுப்படுத்துவதற்காக உயிரியல் அறிவியல், ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, உற்பத்தி ஆகியவற்றிற்கான புதிய தொழில் கொள்கைகள் விரைவில் அறிவிக்கப்படும். அதிக அளவிலான முதலீடுகளை ஊக்குவிக்க புலம்பெயர் தமிழர்களுடனான உறவு வலுப்படுத்தப்படும். முதலீட்டாளர்களின் முதலீடு சார்ந்த முடிவுகளுக்கு ஆதரவு அளிப்பதற்காகவும், சிறப்பாக திட்டமிடுவதற்கும், மாநிலத்தில் உள்ள தொழிற்சாலைகளைப் பற்றி விவரமான, துல்லியமான தரவுதளம் உருவாக்கப்படும்.**

130) **தமிழ்நாட்டின் உள்ள தொழில்துறையில் பின்தங்கிய மாவட்டங்களை மையமாகக் கொண்டு, அடுத்த 5 ஆண்டுகளில் மொத்தம் 45,000 ஏக்கர் அளவிலான நில வங்கித் தொகுப்புகள் உருவாக்கப்படும்.**

தமிழ்நாட்டின் தொழிலகப் பயன்பாட்டிற்கான நில எடுப்புச் சட்டம் மேலும் எளிமைப்படுத்தப்பட்டு, நிலத் தொகுப்புக்கள் மற்றும் தனியாருடனான பேச்சுவார்த்தை மூலம் நில எடுப்பு ஊக்குவிக்கப்படும். தொழில்சார் நோக்கத்திற்காகக் கையகப்படுத்தப்பட்ட நிலங்களை விரைவாகவும், உரியவாறாகவும் பயன்படுத்துவது உறுதி செய்யப்படும்.

131) **தூத்துக்குடி மாவட்டத்தில் 4,500 கோடி ரூபாய் முதலீட்டை ஈர்க்கும் விதமாகவும், 3.5 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பை வழங்குமாறும் 1,100 ஏக்கர் நிலப்பரப்பில் 1,000 கோடி ரூபாய் செலவில் அறைகலன்களுக்கான சர்வதேச பூங்கா ஒன்று அமைக்கப்படும்.** திருவள்ளூர் மாவட்டத்தின் மாநல்லூரில் ஒரு **மின்-வாகனப் பூங்கா**, காஞ்சிபுரம் மாவட்டம் ஒரகடத்தில் மருத்துவ சாதனங்கள் பூங்கா, இராணிப்பேட்டை மாவட்டம் பனப்பாக்கத்தில் தோல் பொருட்கள் உற்பத்திப் பூங்கா, மணப்பாறை, தேனி மற்றும் திண்டிவனம், ஆகிய இடங்களில் மூன்று உணவுப் பூங்காக்களும் நிறுவப்படும். தொழில்துறை அலகுகளுக்காக தூத்துக்குடியில் 60 MLD அளவு கடல்நீர் சுத்திகரிப்பு ஆலை மற்றும் ஒசூரில் உள்ள தொழிலகங்களுக்கான 10 MLD TTRO கழிவுநீர் சுத்திகரிப்பு ஆலை நிறுவப்படும்.

132) **நிதிநுட்பத் துறை வளர்ச்சிக்கு தமிழ்நாட்டில் மாபெரும் வாய்ப்புகள் உள்ளன. அதனை முன்னெடுக்கும் வகையில் "நிதிநுட்ப கொள்கை" ஒன்று வெளியிடப்படும். மேலும், வழிகாட்டி நிறுவனத்தில் இதற்கென பிரத்யேகமான "நிதிநுட்ப பிரிவு" ஒன்று அமைக்கப்பட்டு, நிதிநுட்ப நிறுவனங்களுக்கு தேவையான அனைத்து உதவிகளும் அளிக்கப்படும். சென்னையில் இரண்டு கட்டங்களாக நந்தம்பாக்கம் மற்றும் காவனூரில் நிதிநுட்ப நகரம் உருவாக்கப்படும். முதற்கட்டமாக**

நந்தம்பாக்கத்தில் இந்த நிதிநுட்ப நகரம் 165 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உருவாக்கப்படும்.

133) பழைய மாமல்லபுரம் சாலை தகவல் தொழில்நுட்ப துறை பெருவழியாக வளர்ச்சியடையவதற்கு, 2000 ஆம் ஆண்டில் சென்னையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் டைடல் தகவல் தொழில்நுட்ப பூங்கா நிறுவனம் தோற்றுவிக்கப்பட்டது முக்கிய காரணமாகும். இப்போது தமிழ்நாட்டிலுள்ள நிலை II மற்றும் நிலை III நகரங்களிலும் டைடல் பூங்காக்கள் ஏற்படுத்தப்படுகின்றன. முதல் கட்டமாக விழுப்புரம் மாவட்டத்தின் திருச்சிற்றம்பலம், வேலூர், திருப்பூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் டைடல் பூங்காக்கள் உருவாக்கப்படும்.

134) ஓசூர், சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் கோயம்புத்தூரை இணைக்கும் பாதுகாப்பு தொழில்துறை பெருவழிகளை நிறுவுவதாக ஒன்றிய அரசு அறிவித்த போதிலும், அதற்கான ஒன்றிய அரசின் உதவி குறைவாகவே உள்ளது. கோயம்புத்தூரில், 500 ஏக்கர் பரப்பளவில், 225 கோடி ரூபாய் மதிப்பில், பாதுகாப்பு கருவிகள் உற்பத்தி பூங்காவை மாநில அரசு அமைத்து செயல்படுத்தும். இதன் மூலம், 3500 கோடி ரூபாய் மதிப்பிலான முதலீடுகள் ஈர்க்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

135) தொழில் வளர்ச்சியில் பின்தங்கியுள்ள திருவண்ணாமலை, தர்மபுரி, திருநெல்வேலி, விருதுநகர், சிவகங்கை, விழுப்புரம், நாமக்கல், தேனி மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் புதிய சிப்காட் தொழிற்பூங்காக்கள் அமைக்கப்படும். இப்பூங்காக்களில், தயார்நிலையில் உள்ள தொழிற்கூடங்கள் (Play & Play facilities) உட்பட உலகத்தரம் வாய்ந்த உட்கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப்படும். இதற்கென இப்பூங்காக்களில், முதற்கட்டமாக, 1,500 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 4,000 ஏக்கர் நிலங்கள் மேம்படுத்தப்படும்.

குறு,சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள்

136) குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் பல்வேறு சவால்களை சந்தித்து வருகின்றன. குறிப்பாக, கோவிட் பெருந்தொற்றினால் பல்வேறு சிக்கல்களை எதிர்கொண்டன. இந்நிறுவனங்களுக்கு முழுமையாக ஆதரவு அளிப்பதற்கு இந்த அரசு உறுதியாக உள்ளது. **தமிழ்நாட்டில் உள்ள இந்த நிறுவனங்கள் எதிர்கொள்ளும் நிதி, கட்டமைப்பு, இதர சிக்கல்களை ஆய்வு செய்வதற்கும், இந்நிறுவனங்கள் வளர்ச்சி அடைய தேவைப்படும் நடவடிக்கைகள் பரிந்துரைக்கவும், டாக்டர்.ந.சுந்தரதேவன் இ.ஆ.ப (ஓய்வு) அவர்களின் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது.**

137) வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் பெறுவது, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை இந்த அரசு நன்கு உணர்ந்துள்ளது. எனவே, **மாநில அளவிலான கடன் உத்தரவாதத் திட்டத்தை** மேலும் பல இம்மாதிரியான நிறுவனங்கள், **குறிப்பாக குறு தொழில் நிறுவனங்கள்** கடன் பெறும் வகையில் செயல்படுத்தும். **இந்நிறுவனங்கள் வணிகத் திறனின் அடிப்படையில் நிதி நிறுவனங்களும் நவீன நிதி தொழில்நுட்ப நிறுவனங்களும் கடன் வழங்கிட ஏதுவாக, மின்னணு தகவல் தரவுகள் அடிப்படையிலான கடன் மதிப்பீட்டு முறை ஏற்படுத்தப்படும். இந்நிறுவனங்களுக்கு கடன் வழங்க தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கியை மாற்றியமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.** கடன் பெற ஏதுவாக, பதிவு செய்வதற்கான, ஆவணங்களை நேரில் வராமல் இணைய வாயிலாகவே பதிவு செய்ய உரிய சட்டத்திருத்தங்கள் பதிவுச் சட்டத்தில் கொண்டு வரப்படும். **பங்குச் சந்தைகள் மூலம் முதலீட்டைப் பெற முயலும் இந்நிறுவனங்களுக்கு அரசு**

**உதவி செய்து, 30 இலட்சம் ரூபாய் வரை பட்டியல் இடும் செலவை அரசு ஏற்றுக்கொள்ளும்.**

138) **மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பொருளாதார ஆலோசனைக் குழுவின் ஆலோசனையின்படி, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மற்றும் அவற்றிற்கு கடன் அளித்தவர்கள் தங்களது கடன்களை மறு கட்டமைப்பு செய்ய முன்வந்தால், அரசு கடன் உத்தரவாதத்துடன் நிதி நிறுவனங்களின் உதவியுடன் கடன் வழங்கப்படும்.**

139) **குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் தங்களின் நிலுவைத் தொகைகளை விரைவாக வசூலிப்பதற்கான வழிவகைகளை உறுதி செய்வதற்கான வர்த்தக வரவுகள் மற்றும் தள்ளுபடித் தளங்களின் கீழ் (TReDS), அனைத்து மாநில பொதுத்துறை நிறுவனங்கள், உள்ளாட்சி அமைப்புகள், கூட்டுறவு நிறுவனங்கள் கொண்டு வரப்படும்.**

140) **ஐந்து பெரிய தொழிற் தொகுப்புகளை மருந்து மற்றும் பெட்ரோ இரசாயனங்கள் துறையிலும், துல்லியமான உற்பத்தி, பாதுகாப்பு, விண்வெளி மற்றும் ஸ்மார்ட் போக்குவரத்து (Smart mobility) ஆகிய துறைகளிலும் 100 கோடி ரூபாய் மதிப்பில் அமைக்கப்பட உள்ளன.** கூடுதலாக, புகைப்படம் எடுத்தல், அட்டைப் பெட்டி அச்சிடுதல், உணவுப் பொருட்கள், கயிறு தயாரித்தல் மற்றும் அச்சிடும் துறைகளுக்கு, செங்கல்பட்டு, திருப்பத்தூர், கன்னியாகுமரி, திண்டுக்கல் மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் 55 கோடி ரூபாய் செலவில் மேலும் 5 பொது வசதி மையங்கள் நிறுவப்படும்.

141) **265 ஏக்கர் மொத்தப் பரப்பளவில் 5 இடங்களில் நில வங்கிகளை சிட்கோ நிறுவ உள்ளது. சிட்கோ தொழில்துறை பூங்காக்களில், விற்கப்படாத மனைகளை விரைவாக பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படுவதை உறுதி செய்வதற்காக விலைக் கொள்கை சீரமைக்கப்படும்.** 62 தொழிற்பேட்டைகளில் அமைந்துள்ள 9,264 மனைகளுக்கு பட்டாக்கள் வழங்கப்படுவதை உறுதி செய்ய விரைவான நடவடிக்கை எடுக்கப்படும். சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில்துறை நிறுவனங்களின் தொழிலாளர்களுக்கான மலிவான வாடகையில் குடியிருப்பு வளாகங்கள் முதலில் சென்னை மற்றும் கோயம்புத்தூரிலும் பின்னர் ஏனைய இடங்களிலும் தொடங்கப்படும்.

கனிமங்களும், சுரங்கங்களும்

142) **சுற்றுப்புரம் மற்றும் சூழலுக்கு பாதிப்பின்றி சுரங்கப் பணிகளை செயல்படுத்திட இந்த அரசு நீடித்த நிலையான சுரங்க கொள்கையை உருவாக்கும்.** அதனுடன் கனிமங்கள் மற்றும் சுரங்கங்களில் ஏற்படும் வருவாய் இழப்பை சரி செய்ய அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும். இதன் மூலம், கனிமங்கள் மற்றும் சுரங்கங்களிடமிருந்து பெறப்படும் ஒட்டுமொத்த வருவாய் பெருமளவு அதிகரிக்கும் என அரசு எதிர்பார்க்கிறது.

143) **இது தவிர, பசுமை சுங்க மேல்வரி விதிக்கப்பட்டு ஒரு பசுமை நிதியம் உருவாக்கப்படும். இதன் மூலம் கைவிடப்பட்ட குவாரிப் பகுதிகள் முறைப்படி மூடப்பட்டு பாதுகாக்கப்படும். ஆறு கோடி வருடங்களுக்கு முந்தைய உள்நாட்டு புதை வடிவங்கள் கண்டறியப்பட்டுள்ள அரியலூர்-பெரம்பலூர் மாவட்டங்களில், புவியியல் புதைபடிவ பூங்கா ஒன்று பத்து கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.**

**கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை**

**144)** கைத்தறி மற்றும் துணிநூல் துறைகளில் தமிழ்நாட்டின் பங்கு தொடர்ந்து மிகப் பெரிய அளவில் உள்ளது. மாநிலத்திலுள்ள கைத்தறி நெசவாளர்கள் அதிக வருமானம் ஈட்டுவதற்கு ஏதுவாக, மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களை தயாரிக்க உதவி செய்வதே இந்த அரசின் நோக்கமாகும். தறிகளை நவீனமயமாக்குதல், தரமான நூல் மற்றும் பிற உள்ளீடுகளை வழங்குவதை உறுதி செய்தல் மற்றும் வடிவமைப்பு அம்சங்களை மேம்படுத்துதல் ஆகியவை வலியுறுத்தப்படும்.

**145)** 2021–22 ஆம் ஆண்டில் 490.27 கோடி ரூபாய் மொத்த நிதியொதுக்கீட்டுடன், மாநிலத்திலுள்ள கைத்தறி நெசவாளர்கள் பயன்பெறும் வகையில், இலவச வேட்டி சேலை வழங்கும் திட்டத்தின் கீழ், பொங்கல் திருநாளை முன்னிட்டு, 1.81 கோடி சேலைகள் மற்றும் 1.81 கோடி வேட்டிகள் வழங்கப்படும். தமிழ்நாட்டிற்குள் அமைந்துள்ள விசைத்தறிகள் மற்றும் நெசவு அலகுகளிலிருந்து பொருட்களை பயன்படுத்தி 1 முதல் 8 ஆம் வகுப்பு வரையிலான குழந்தைகளுக்கு இலவச பள்ளி சீருடைகளை விநியோகிக்கும் திட்டம், செயல்படுத்தப்படும். இந்தத் திட்டத்திற்காக 409.30 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

**146)** தொகுப்பு மேம்பாட்டுத் திட்டம் திறம்பட செயல்படுத்தப்படும். பொதுவான கழிவுப்பொருள் சுத்திகரிப்பு நிலையங்கள் (Common Effluent Treatment plant) புத்துயிர் பெறும். மேலும், புதிய பொதுவான கழிவுப்பொருள் சுத்திகரிப்பு நிலையங்கள் ஈரோட்டிலும், நாமக்கல்லிலும் அமைக்கப்படும். தமிழ்நாட்டின் துணிநூல் பொருட்கள் முழுமையாக சூழலுக்கு உகந்ததாகவும் சுற்றுச்சூழல் விதிமுறைகளைப் பின்பற்றும் வகையிலும்

சந்தைப்படுத்தப்படும். திருப்பூர், காஞ்சிபுரம் மற்றும் ஈரோடு ஆகிய மாவட்டங்களில் தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் நான்கு ஒருங்கிணைந்த துணிநூல் பூங்காக்கள் வேகப்படுத்தப்பட்டு முடிக்கப்படும்.

147) தொழில்நுட்ப துணிகள் (Technical Textile)மீது அதிக கவனம் செலுத்தி துணிநூல் துறைக்கு கூடுதல் உட்கட்டமைப்பை உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும். **துணிநூல் துறையில் கவனம் செலுத்துவதற்காக, ஒரு தனி இயக்குநரகம் உருவாக்கப்படும்.**

**தகவல் தொழில்நுட்பவியல் துறை**

148) தகவல் மற்றும் தொழில்நுட்பத்தை அனைத்துத் துறைகளிலும் செயல்பாட்டிற்கு கொண்டு வருவதன் மூலம், SMART என்ற விரைவான (Swift), அளவிடக்கூடிய (Measurable), அணுகக்கூடிய (Accessible), பதிலளிக்கக்கூடிய (Responsive), வெளிப்படையான (Transparent) நிருவாகத்தை இந்த அரசு வழங்கும். மின்னாளுகை பயன்பாட்டில் ஏனைய மாநிலங்களை விட தமிழ்நாடு பின்தங்கிவிட்டது. மக்கள் நேரடியாக அணுகும் முக்கியத் துறைகளில் மின்னாளுகைக்கு முன்னுரிமை அளிக்கப்படும். **தற்போது 131 சேவைகள் இ-சேவை மையங்கள் வாயிலாகவும், 55 சேவைகள் இணையதளம் வாயிலாகவும் மக்களுக்கு நேரடியாக வழங்கப்படுகின்றன. டிசம்பர் மாதத்திற்குள், 29 துறைகள் மூலமாக வழங்கப்படக்கூடிய 600க்கும் மேற்பட்ட சேவைகளும் மின்னணு முறையில் வழங்கப்படும்.** அரசுத் திட்டங்களில் அனைத்து பயனாளிகளுக்குமான ஒற்றைத் தரவு ஆதாரமாக மாநிலக் குடும்பத் தரவு தளம் வலுப்படுத்தப்படும்.

149) அனைத்து தகுதி வாய்ந்த ஊராட்சி அமைப்புகளுக்கும் அகண்ட அலை வரிசை இணைப்பு பாரத்நெட் இணைப்புத் திட்டத்தின் மூலம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மாநிலத்திலுள்ள 12,525 கிராமங்களுக்கும் குறைந்தபட்சம் 1 Gbps அளவிடத்தக்க அலைவரிசை இணைப்பு கண்ணாடி இழைவடம்(optical fibre) வாயிலாக வழங்கப்படும். இதன் மூலம் மாநிலம் முழுவதும் வேலைவாய்ப்பு மற்றும் கற்றலுக்கான வாய்ப்புகள் பெரிதும் மேம்படுத்தப்படும்.

**இந்து சமய அறநிலையத்துறை**

150) இந்த அரசு தமிழ்நாட்டில் உள்ள கோயில் சொத்துகள், நிலங்கள் மற்றும் உடைமைகளைப் பாதுகாக்க ஏற்கெனவே பல சிறப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதை மன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். இந்த அரசு பதவியேற்ற 100 நாட்களுக்குள்ளே, ஆக்கிரமிப்பில் இருந்த திருக்கோயில்களுக்கு சொந்தமாக 187.91 ஏக்கர் நிலங்கள், 161.702 கிரவுண்டு காலிமனைகள், 1887.13 சதுர அடி பரப்புள்ள கட்டடங்கள், 15.60 கிரவுண்டு பரப்புள்ள கோயில் குளக்கரை நிலங்கள் மீட்கப்பட்டு, அவை அவற்றிற்கு சொந்தமான திருக்கோயில்கள் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு மீட்கப்பட்ட சொத்துகள் 626 கோடி ரூபாய் மதிப்புடையவை ஆகும். இந்த ஆண்டில் 100 திருக்கோயில்களில் திருத்தேர், திருக்குளம், நந்தனம் ஆகியவற்றின் சீரமைக்கும் திருப்பணிகள் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும். அனைத்து திருக்கோயில்களிலும் பக்தர்களுக்கான வசதிகள் மேம்படுத்தப்படும். திருக்கோயில்களை நிருவகிக்க பரம்பரை அல்லாத அறங்காவலர்கள் நியமிக்கப்படுவார்கள்.

**151) போதிய நிதி வசதி இல்லாத 12,959 திருக்கோயில்களில் ஒரு கால பூஜை திட்டத்தை செயல்படுத்த உதவும் வகையில் 130 கோடி ரூபாயில் நிலை நிதி ஏற்படுத்தப்படும்.** இந்த நிலை நிதியின் மூலம் ஈட்டப்படும் வட்டித்தொகை, மேற்கண்ட கோயில்களின் தினசரி பூஜைக்கு பயன்படுத்தப்படும்.

**152) பழநி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் மூலம் ஒரு புதிய சித்த மருத்துவக் கல்லூரி தொடங்கப்பட்டு சித்தர்களின் அறிவாற்றலுடைய தொன்மைவாய்ந்த மருத்துவ முறையான சித்தமருத்துவம் மேம்படுத்தப்படும்.**

153) பயிற்சி பெற்ற ஓதுவார்கள், அர்ச்சகர்களை உருவாக்கிட ஓதுவார் மற்றும் அர்ச்சகர் பயிற்சிப் பள்ளிகள் புதுப்பிக்கப்படும். திருக்கோயில்களின் சேவைகளை மேம்படுத்த திருக்கோயில்களில் உள்ள காலிப்பணியிடங்களை நிரப்ப சிறப்பு நடவடிக்கை தொடங்கப்பட்டுள்ளது. பழம்பெரும் பாரம்பரியத்தை பாதுகாக்கவும், **பக்தர்களின் அனுபவத்தை அதிகரிப்பதற்கும் 539 திருக்கோயில்களுக்கான பெருந்திட்டங்கள் அரசால் வகுக்கப்பட்டு வருகின்றன.**

சுற்றுலா

154) உள்ளூர் வேலைவாய்ப்பை அதிகரிப்பதில் முக்கியப் பங்காற்றுவது சுற்றுலாத்துறை ஆகும். கோவிட்–19 பெருந்தொற்றினால் தமிழ்நாட்டின் சுற்றுலாத்துறை மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. சுற்றுலாத் துறையை புதுப்பிக்க தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க இந்த அரசு உறுதியாக உள்ளது. சுற்றுலா பெருந்திட்டத்தின்கீழ் 300 சுற்றுலா தலங்கள்

மேம்படுத்தப்படும். **கன்னியாகுமரி மற்றும் பூம்புகாரில் உள்ள அய்யன் திருவள்ளுவர் சிலைக்கான வசதிகள் மேம்படுத்தப்பட்டு, அவற்றின் பழம்பெருமை மீட்டெடுக்கப்படும்.** மலைவாசஸ்தலங்கள், அணைக்கட்டுகள் மற்றும் கடற்கரைப் பகுதிகளில் அனுபவம் சார்ந்த மற்றும் சாகச சுற்றுலாக்கள் முகாம்கள் அமைத்து மேம்படுத்தப்படும். தமிழ்நாடு வனாந்திர அனுபவங்கள் கழகம் மூலம் சூழல் சுற்றுலா மேம்படுத்தப்படும். நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை மற்றும் ஊரக வளர்ச்சித் துறைகள் மூலம் சுற்றுலா அடிப்படை வசதிகள் ஒருங்கிணைந்து மேம்படுத்தப்படும். சுற்றுலாத்துறைக்கு 187.59 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

**சமூக நலம்**

155) மகளிருக்கு அதிகாரமளித்தலை மேலும் மேம்படுத்த வேண்டும் என்பதை இந்த அரசு மையக் கருத்தாக கொண்டுள்ளது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் தொடங்கப்பட்ட திருமண நிதியுதவித் திட்டங்களுக்கு புத்துயிர் அளித்து, மகளிர் கல்வி மற்றும் முன்னேற்றம் ஆகியவற்றை ஊக்குவிப்பதற்கு 762.23 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டுடன் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

156) **திருநங்கைகளின் நலனில் சிறப்பு கவனம் செலுத்தப்படுகிறது. 1,071 கைவிடப்பட்ட திருநங்கையர் பயன்பெறும் வகையில், மூன்றாம் பாலினத்தவருக்கான ஓய்வூதியத் திட்டத்திற்காக 1.50 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.** திருநங்கையர் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள குடும்ப அட்டைகள் இல்லாத 8,493 திருநங்கைகளுக்கு கொரோனா பெருந்தொற்றுக் காலத்தின்போது நிதியுதவியாக 4000 ரூபாய் வழங்கப்பட்டது. மேலும்,

வெண்பலகை கொண்ட நகரப் பேருந்துகளில் இலவசமாக பயணம் செய்வதற்கு அவர்களுக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

157) **கோவிட் பெருந்தொற்றுக் காலத்தில் பெற்றோரில் ஒருவரையோ அல்லது இருவரையுமோ இழந்த குழந்தைகளைப் பாதுகாப்பதற்கு இந்த அரசு சிறப்பு முயற்சிகளை எடுத்துள்ளது.** விரைவாகவும் கருணை உள்ளத்துடனும் நடவடிக்கைகள் மேற்கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பெற்றோர் இருவரையும் இழந்த ஒவ்வொரு குழந்தைக்கும் 5 இலட்சம் ரூபாய் தொகை வழங்கப்படும் எனவும் ஏழைக்குடும்பத்தில் பெற்றோரில் ஒருவரை இழந்த ஒவ்வொரு குழந்தைக்கும் 3 இலட்சம் ரூபாய் தொகை வழங்கப்படும் எனவும் அறிவித்தார்கள். மேலும், இந்தக் குழந்தைகளுக்கான கல்விச் செலவு முழுவதையும் அரசே பொறுப்பேற்றுக் கொள்ளும். **இதுவரை 5,963 குழந்தைகள் அடையாளம் கண்டறியப்பட்டு, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து 95.96 கோடி ரூபாய் நிதியுதவியாக வழங்கப்பட்டது.**

158) மதிய உணவுத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக விளங்கி வருகிறது. இது தவிர பல ஆண்டுகளாக ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் (ICDS) நடைமுறையில் உள்ளது. இருப்பினும், பல மாவட்டங்களில் எடை குறைந்த, உயரக் குறைவு மற்றும் மெலிந்த தன்மையுடைய குழந்தைகளின் எண்ணிக்கை கூடுதலாக உள்ளது கவலைக்குரியது. ஊட்டச்சத்து குறைவான குழந்தைகள் இல்லாத மாநிலமாக தமிழ்நாட்டினை மாற்றுவதற்கு முன்னுரிமை அளிக்கப்படும். அதன்படி, குழந்தைப் பருவ கல்வி உள்ளிட்ட குழந்தைப் பருவ நலனை உறுதிப்படுத்தும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் (ICDS) திட்டத்திற்கு புத்துயிர் அளிக்கப்படும். **அங்கன்வாடி**

**மையங்களின் தரத்தை உயர்த்துவதற்காக சிறப்பு ஒதுக்கீடாக 48.48 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. முன்பருவக் கல்வி பயிலும் குழந்தைகளுக்கு, கல்வி சார்ந்த பொருட்களை வழங்குவதற்கு 23.33 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

159) **மதிய உணவுத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்திற்கு முட்டைகள் மற்றும் இதர பொருட்கள் கொள்முதல் செய்யும் முறை சீரமைக்கப்படுவதன் மூலம் செலவினங்கள் குறைக்கப்படும்.** புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் மதிய உணவு திட்டத்திற்காக 1,725.41 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்திற்காக மொத்தம் 2,536.69 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன்

160) ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடியினரின் சமூகப் பொருளாதார நிலையினை ஏனைய சமூகத்தினருக்கு இணையாகக் கொண்டு வருவது, இந்த அரசின் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சித் தத்துவத்தின் மையக் கருத்தாக உள்ளது. தமிழ்நாட்டில் உள்ள ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடியினர் மக்கள் தொகைக்கு ஏற்ப, ஆதிதிராவிடர்களுக்கான சிறப்புக் கூறுகள் திட்டம் மற்றும் பழங்குடியினர் துணைத்திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட ஒதுக்கீட்டை, இச்சமுதாயத்தினரின் முன்னேற்றத்திற்காக திறம்பட பயன்படுத்துவதை இந்த அரசு உறுதி செய்யும். சிறப்புக் கூறுகள் திட்டத்திற்கான ஒட்டுமொத்த செலவினம் 14,696.60 கோடி ரூபாய் எனவும் பழங்குடியினர் துணைத் திட்டத்திற்கு 1,306.02 கோடி ரூபாய் எனவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

161) மெட்ரிக் கல்விக்கு பிந்தைய கல்வி உதவித்தொகைத் திட்டம் மாநிலத்தில் ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடியினரின் கல்வி முன்னேற்றத்திற்கான முக்கியத் திட்டமாகத் தொடர்ந்து வருகிறது. இந்த ஆண்டு இத்திட்டத்திற்கு 1,884.70 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடியின மாணவர்கள் உயர்கல்வியைப் பெறுவதற்கு அதிக வாய்ப்புகள் கிடைப்பதை உறுதி செய்யும் வகையில், வெளிநாட்டிற்குச் சென்று கல்வி கற்பதற்கான கல்வி உதவித்தொகைத் திட்டம் திருத்தி அமைக்கப்படும். இத்திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து இதுவரை 4 மாணவர்கள் மட்டுமே பயனடைந்துள்ளனர் என்பது வருத்தத்திற்குரியது. இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு 5 கோடி ரூபாயாக உயர்த்தப்படும். அதைப்போல, முனைவர் பட்டப் படிப்புகளுக்கான கல்வி உதவித்தொகைத் திட்டமும், அதிக எண்ணிக்கையிலான மாணவர்களுக்குப் பயனளிக்கும் வகையில் மறுசீரமைக்கப்பட்டு, கல்வி உதவித்தொகை வருடத்திற்கு ஒரு இலட்சம் ரூபாய் என்ற அளவில் உயர்த்தப்படும், இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு 16 கோடி ரூபாயாக உயர்த்தப்படும். **நபார்டு வங்கியின் ஊரக கட்டமைப்பு வளர்ச்சி நிதியத்தின் உதவியுடன் கூடுதல் வகுப்பறைகள், ஆய்வுக்கூடங்கள் உள்ளிட்ட கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி திருத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 123.02 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

162) விடுதிகளில் மாணவர்களுக்குத் தரமான உணவு வழங்கப்படுவதையும், அவர்களின் படிப்பு நேரம் உரிய முறையில் சீரமைக்கப்படுவதையும் உறுதிசெய்வதற்கான சிறப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்படும். **விடுதிகளில் பயிலும் மாணவர்களின் மாதாந்திர**

**சில்லறைச் செலவினக் கட்டண உதவித்தொகை இரண்டு மடங்காக உயர்த்தப்படும். தற்போதுள்ள பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கான விடுதிகளை மேம்படுத்த சிறப்பு மூலதன ஒதுக்கீடாக 25 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.**

163) தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) வாயிலாக, ஆதிதிராவிடர்களுக்கான பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களை மாற்றியமைத்து, அந்த சமூகத்தினரிடையே தொழில்முனைவு ஊக்கப்படுத்தப்படும். ஆதி–திராவிடர் மற்றும் பழங்குடியினரின் நலனுக்கான ஒட்டுமொத்த நிதியொதுக்கம் **4,142.33** ரூபாயாக உயர்த்தப்படுகிறது.

**பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன்**

164) பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினரின் கல்வி நிலையை உயர்த்துவதற்காக அத்துறையின், மொத்த வரவுசெலவுத் திட்ட மதிப்பீட்டில் 77.88 சதவீதம் கல்வி தொடர்பான திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. தற்போது 7,43,853 மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது. 86,514 மாணவர்கள் விடுதிகளில் வசித்து வருகின்றனர். மேலும், 3,77,286 மாணவர்கள் இலவச மிதிவண்டிகள் விநியோகத் திட்டத்தில் பயனடைந்துள்ளனர். விடுதிகள், குறிப்பாக கல்லூரி விடுதிகளின் தரத்தை மேம்படுத்துவதற்காக இந்த அரசு 25 கோடி ரூபாய் சிறப்பு மூலதன நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

165) **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்ட தொடர் நடவடிக்கைகளின் காரணத்தினாலும், உயர்நீதிமன்றம் மற்றும் உச்சநீதிமன்றத்தில் வழக்குகள் தொடரச் செய்ததினாலும், இளநிலை மற்றும் முதுநிலை மருத்துவ படிப்புகளுக்கான, அகில இந்திய**

**ஒதுக்கீட்டில், இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27 சதவீத இட ஒதுக்கீட்டினை இந்தக் கல்வியாண்டில் இருந்து வழங்க, ஒன்றிய அரசு முடிவு செய்துள்ளது. இதன் மூலம் சமூகநீதி பாதுகாக்கப்பட்டுள்ளது.**

சிறுபான்மையினர் நலன்

166) இந்த அரசு, 4.25 இலட்சம் சிறுபான்மையினப் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு நிதியுதவித் திட்டத்தின் பயன்கள் சென்றடைவதை உறுதி செய்யும். இந்த மாணவர்களுக்கு 2021–22 ஆம் ஆண்டில் 114.65 கோடி தொகை பகிர்ந்தளிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

167) தமிழ்நாட்டில் இஸ்லாமிய மற்றும் கிறிஸ்தவப் பெண்கள் உதவி சங்கங்கள் 2007 ஆம் ஆண்டு முதல் அமைக்கப்பட்டு, இந்த சங்கங்கள் வசூலித்த நன்கொடைகளைக் காட்டிலும் இரண்டு மடங்குத் தொகையை மானியமாக அரசு வழங்கியுள்ளது. 2021–22 ஆம் ஆண்டில் 4.15 கோடி ரூபாய் இசுலாமிய பெண்கள் உதவி சங்கத்திற்கும் 2.97 கோடி ரூபாய் தொகை கிறிஸ்தவப் பெண்கள் உதவி சங்கத்திற்கு வழங்கப்படும்.

168) மசூதிகள் மற்றும் தேவாலயங்களைப் புதுப்பிப்பதற்காக தலா 6 கோடி ரூபாய் வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு வக்பு வாரியத்தின் நிர்வாகத்தை வலுப்படுத்தி, அச்சமூகத்திற்குச் சொந்தமான வக்பு சொத்துகளை இந்த அரசு பாதுகாக்கும். தகுதியுள்ள நபர்கள் நேர்மையான சேவைகளைப் பெறும் வகையில் 2009 இல் அமைக்கப்பட்ட உலமாக்கள் மற்றும் பிற பணியாளர்கள் நல வாரியத்திற்குப் புத்துயிர் அளிக்கப்படும்.

169) தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம், குறைந்தபட்சம் 7,000 பயனாளிகள் 50 கோடி ரூபாய் ஒட்டுமொத்த பொருளாதார மேம்பாட்டுக் கடனுதவியைப் பெறுவதற்கு உதவி செய்யும்.

**மாற்றுத்திறனாளிகள் நலன்**

170) மிகவும் பாதிக்கப்படக்கூடிய மாற்றுத் திறனாளிகளுக்குப் பரிவு காட்டும் விதமாக, முத்தமிழ் அறிஞர் கலைஞர் மாற்றுத்திறனாளிகளின் நலனுக்காக ஒரு தனித்துறையை நிறுவி, அத்தகைய ஒரு துறையைக் கொண்ட முதல் மாநிலம் என்ற தனித்துவத்தை தமிழ்நாட்டிற்கு பெற்றுத் தந்தார். இதைப்போன்றே அக்கறை கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையினை தனது நேரடிக் கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டுள்ளார். மாற்றுத்திறனாளிகள் அனைவரும் தமது ஓர் உதவியாளருடன் மாநிலம் முழுவதும் இயங்கும் அரசுப் பேருந்துகளில் இலவசமாகப் பயணிக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

171) காத்திருப்புப் பட்டியலில் உள்ள 9,173 தகுதியுள்ள நபர்களுக்கும் மாதத்திற்கு 1,500 ரூபாய் பராமரிப்புத் தொகையை உடனடியாக வழங்குவதற்காக திருத்த வரவு செலவுத் திட்டத்தில் பராமரிப்புத் தொகைக்கான ஒதுக்கீடு 404.64 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. 2021–22 ஆம் ஆண்டில் காத்திருப்புப் பட்டியலில் உள்ள 9,185 நபர்களுக்கு அவர்கள் விரும்பும் கருவி வழங்கப்படுவதை உறுதி செய்ய வரவு செலவுத் திட்டத்தில் கருவிகள் மற்றும் உபகரணங்களுக்காக 50.66 கோடி ரூபாயென உயர்த்தப்பட்டுள்ளது. தகுதி வாய்ந்த நபர்களுக்கு அவர்கள் பயன்படுத்த விரும்பும் சாதனங்களின் வகை மற்றும் மாதிரியில்

தெரிவினை வழங்கும் வகையில், நேரடி மானியம் வழங்கும் திட்டத்தையும் இந்த அரசு அறிமுகப்படுத்தும்.

172) இத்துறையில் மற்றுமொரு முன்மாதிரி திட்டமாக, உலக வங்கியின் உதவியுடன் Rights திட்டத்தை இந்த அரசு தொடங்கவுள்ளது. குறைபாடுகளை தொடக்க நிலையில் கண்டறிதல், தடுத்தல், பராமரிப்பு, மறுவாழ்வு மற்றும் கல்விச் சேவைகளை பெருமளவில் அணுகுதல், மாற்றுத்திறனாளிகளுக்கான திறன் மேம்பாடு மற்றும் அவர்களால் அமைக்கப்பட்ட உற்பத்தி நிறுவனங்களை ஊக்குவித்தல், மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளுக்கும் பரவலாக மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் செயல்பாடுகளை விரிவுபடுத்துதல் ஆகியவற்றுடன் இத்திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டம் மற்ற மாநிலங்களுக்கு மட்டுமல்லாமல் உலகின் பிற நாடுகளுக்கும் முன்னோடியாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆறு ஆண்டுகளில் மொத்தம் 1,702 கோடி ரூபாய் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

**இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாடு**

173) இந்த அரசு, விளையாட்டை ஊக்குவித்து ஒழுக்கம் மற்றும் சமூகப் பொறுப்பை வலுப்படுத்தும் ஆக்கப்பூர்வமான செயல்பாடுகளில் மாநிலத்தின் இளைஞர்களை வழிநடத்தும். மாநிலம் முழுவதும் விளையாட்டு கட்டமைப்பை மேம்படுத்துவதற்கான முதலீடுகள் உயர்த்தப்படும். பள்ளி, கல்லூரி மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் விளையாட்டுப் போட்டிகளில் அதிகளவில் பங்கேற்பதற்கு ஊக்கமளிக்கப்படும். விளையாட்டுகளில் சிறந்து விளங்கும் தனிநபர்களைக் கண்டறிந்து, ஊக்குவித்து பரிசளிக்கப்படும். தற்போது, மாநிலத்தில் இதுபோன்ற விளையாட்டு வசதிகள் இல்லாத அனைத்து சட்டமன்றத் தொகுதிகளிலும் தலா 3 கோடி ரூபாய்

செலவில் சிறு விளையாட்டரங்கங்கள் நிறுவப்படும். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் அவர்களுடைய தொகுதி மேம்பாட்டுத் திட்டத்திலிருந்து ஒரு பகுதியை இந்நோக்கத்திற்காகப் பயன்படுத்துமாறு ஊக்குவிக்கப்படுவர். தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் கீழ் உள்ள விளையாட்டு உட்கட்டமைப்புகளைப் பராமரிக்க ஒரு சிறப்பு நிதியளிக்கும் நடைமுறை செயல்படுத்தப்படும். இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டிற்கான ஒதுக்கீடு 225.62 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

174) அண்மையில் நடைபெற்ற டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்ற தமிழகத்தைச் சேர்ந்த 12 விளையாட்டு வீரர்களுக்கும், தலா 5 லட்சம் ரூபாய் சிறப்பு பரிசு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது. டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்ற விருப்பம் தெரிவித்த இரண்டு மகளிருக்கு அரசு வேலை வழங்கப்பட்டது. இவை பன்னாட்டு அளவில் நடைபெறும் போட்டிகளில் விளையாட்டு வீரர்கள் அதிக அளவில் பங்கேற்பதை மேலும் ஊக்குவிப்பதாக அமையும்.

## ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் திட்டம் (IFHRMS)

175) 01–01–2021 முதல் ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் திட்டம் மாநிலம் முழுவதும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. நிதி மேலாண்மையினையும் மனித வள மேலாண்மையினையும் ஒருங்கிணைப்பதுடன், நிகழ்நேரத்தில் வரவு–செலவு திட்ட கட்டுப்பாடுகள், அரசின் வழிவகைகளின் நிலையை தொடர்ந்து கண்காணித்தல், அரசின் நிதிசார் நடவடிக்கைகளில் வெளிப்படைத் தன்மை மற்றும் செயல்

திறன் மேம்படுத்துதல், மக்கள் அரசிற்கு செலுத்த வேண்டிய தொகையை இணையவாயிலாக எளிதில் செலுத்துதல் ஆகியவற்றிற்கு இத்திட்டம் வழிவகுக்கிறது. இத்திட்டத்தின் பங்குதாரர்களான 9 லட்சத்திற்கு மேற்பட்ட அரசு அலுவலர்கள், 7 லட்சம் ஓய்வூதியர்கள் மற்றும் முதியோர் ஓய்வூதியம், மகப்பேறு உதவி, கல்வி உதவித்தொகை உள்ளிட்ட நேரடி பணப் பயன் பெறும் 40 இலட்சம் பயனாளிகளிடையே வரவேற்பினைப் பெற்று வருகிறது.

176) நிதி மேலாண்மை தொடர்புள்ள அமைப்புகளான மாநில கணக்காயர், இந்திய ரிசர்வ் வங்கி மற்றும் வணிக வங்கிகள் இணைக்கப்பட்டவுடன், ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் திட்டம் அரசின் நிதி பரிவர்த்தனைகளின் களஞ்சியமாக மாறும். இதன் மூலம் நிகழ்நேர மேலாண்மை தகவல் அமைப்பு ஏற்படுத்தப்பட்டு விரைவாகவும் சிறப்பாகவும் முடிவெடுக்க உதவியாக இருக்கும்.

177) ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் திட்டத்தின் அடுத்த கட்டமாக, கருவூலங்கள் விரிவுபடுத்தப்பட்டு முன் தணிக்கை வசதிகளுடன் மேம்படுத்தப்பட்டு, அவை அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பணம் செலுத்தும் வங்கியாக(Payments Bank) மாற்றப்படும்.

**பொது நிதி மேலாண்மை**

178) பொது நிதி மேலாண்மை முறையை மாற்றியமைக்கவும் வலுவூட்டுவதற்கான உள்ள உடனடித் தேவையை வெள்ளை அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது. பன்னாட்டு நாணய நிதியம் அளித்துள்ள தொழில் நுட்ப உதவி அறிக்கையில் வரவு–செலவுத் திட்டம் தயாரிப்பதை சீர்திருத்தவும், வரவு செலவுத் திட்ட முறைகளை

நவீனப்படுத்தவும், நிதி இடர்பாடு மேலாண்மை குறித்து கூறப்பட்டுள்ள பரிந்துரைகள் மீது இந்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

179) பேரியல் பொருளாதார நிதி கணிப்புகளை உள்ளடக்கிய விரிவான நிதிநிலை கட்டமைப்பு அறிக்கை தயாரிக்கப்படும். பொதுத்துறை நிறுவனங்கள், குறிப்பாக மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் மற்றும் போக்குவரத்துக் கழகங்களின் நிதிச்சுமையை வெளிக்கொணரும் நிதி இடர்பாட்டு அறிக்கை தயாரிக்கப்படும். **வரும் 2022-23 ஆம் ஆண்டு வரவு-செலவு திட்ட அறிக்கையுடன், எளிய மொழியில் பொதுமக்கள் அனைவரும் புரிந்துகொள்ளும் வகையில் வெளியிடப்படும். இதனால் அரசின் நிதிநிலையை பற்றி ஆரோக்கியமான புரிதலுடன் கூடிய விவாதங்கள் ஊக்குவிக்கப்படும்.**

180) வலுவான வரவு–செலவுத் திட்டக் கட்டுப்பாடு மற்றும் தணிக்கை நடைமுறைகளுடன் நிருவாகத் துறைகளுக்கு கூடுதல் அதிகாரங்களை நிதித்துறை பகிர்ந்தளிக்கும். இதன் மூலம், சம்பந்தப்பட்ட துறைகளின் வரவு–செலவுத் திட்ட ஒதுக்கீட்டிற்குள் பயனளிக்கும் விதமாக, அதிகப் பொறுப்புடைமையுடன் அந்தந்தத் துறைகளே செலவினங்களுக்கு ஒப்புதல் வழங்கலாம். முடிவுகளை விரைந்து எடுக்கவும், செயல்பாட்டினை மேம்படுத்தி செலவுகளைக் குறைக்கவும் இது வழிவகுக்கும்.

**அரசு ஊழியர் நலன்**

181) இரண்டிற்கும் குறைவான குழந்தைகள் உள்ள மகளிர் அரசு ஊழியர்களுக்கான மகப்பேறு கால விடுப்பு 9 மாதங்களிலிருந்து 12 மாதங்களாக உயர்த்தப்படும் என்ற தேர்தல் அறிக்கையின் வாக்குறுதியை, 1.7.2021 முதல் செயல்படுத்தப்படும் என்று இந்த

அவையின் உறுப்பினர்களுக்குத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

182) பணியிலிருக்கும்போது உயிரிழக்கும் அரசுப் பணியாளரின் குடும்பத்தினருக்கு, குடும்பப் பாதுகாப்பு நிதியிலிருந்து வழங்கப்படும் உதவி மானியம் 3 இலட்சம் ரூபாயிலிருந்து 5 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்படும். அதற்கிணங்க, குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டத்தின் கட்டணம் மாதம் ஒன்றிற்கு 110 ரூபாய் என உயர்த்தப்படும். குழு காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் உள்ள பணியாளர்களுக்கும் இது பயனளிக்கும்.

183) மற்ற மாநிலங்களைப்போல் அல்லாமல், கோவிட் பெருந்தொற்று காலத்தில், தமிழ்நாட்டின் அரசு அலுவலர்களுக்கு தாமதமின்றி முழுமையாக சம்பளம் வழங்கப்பட்டது. பல்வேறு துறைகளில், அரசு அலுவலர்கள் தன்னலம் கருதாமல், அவர்களின் உயிரை பணயம் வைத்து சேவை ஆற்றினார்கள். இத்தருணத்தில், அகவிலைப்படியை உயர்த்துவதில் அரசு எதிர்கொள்ளும் நிதி நெருக்கடியை அரசு ஊழியர்கள் நன்கு அறிவார்கள். எனவே அரசு ஊழியர்களுக்கும், ஓய்வூதியதாரர்களுக்கும் உயர்த்தப்பட்ட அகவிலைப்படி 1–4–2022 முதல் வழங்கப்படும்.

**உரிமைத்தொகை வழங்கல்**

184) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வழிநடத்தப்படும் இந்த அரசின் மீது பல்வேறு எதிர்பார்ப்புகள் உள்ளன. நிலவும் நிதி நெருக்கடியினால் அனைத்து வாக்குறுதிகளையும் ஒரே நேரத்தில் நிறைவேற்றுவது மிகவும் கடினமாகிறது. அறிவிக்கப்பட்ட வாக்குறுதிகளை எவ்வாறு நிறைவேற்றுவது என்பது குறித்து கவனமாக இந்த அரசு பரிசீலனை செய்து வருகிறது.

185) குடும்பத் தலைவிகளுக்கு மாதந்தோறும் 1,000 ரூபாய் வழங்கும் திட்டம் மிக முக்கியமானது. குடும்பத்தின் தலைவர் ஒரு பெண்ணாக இருந்தால் மட்டுமே மாதந்தோறும் உதவி கிடைக்கும் என சில தரப்பில் தவறாகப் புரிந்துகொள்ளப்பட்டுள்ளது. இதனால், பலர் குடும்ப அட்டைகளில் பெண் குடும்ப உறுப்பினர் ஒருவரை குடும்பத்தின் தலைவராக மாற்றுவதற்கு முயற்சித்து வருகின்றனர். **இத்திட்டத்தின் நோக்கம், நிதியுதவியை இல்லத்தரசிகளுக்கு வழங்குவதே ஆகும், என உறுதியளிக்கிறேன். எனவே, குடும்பத் தலைவரின் பெயரை மாற்றத் தேவையில்லை.**

186) இத்திட்டம் மிகவும் ஏழ்மையானவர்களுக்கான திட்டமாகும். கோவிட் பெருந்தொற்றின் போது, மாநிலத்திலுள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கும் 4,000 ரூபாய் வழங்கப்பட்டது. இத்தகைய நிதியுதவியை பணக்காரர்களுக்கும், சம்பளம் வாங்கும் மக்களுக்கும் வழங்கக்கூடாது என்ற விமர்சனங்களும் வழக்குகளும் எழுந்தன. ஏழை மக்களுக்கு அடிப்படை உரிமைத்தொகை சென்றடைவதை உறுதி செய்வதற்காக, வல்லுநர்களுடன் கலந்தாலோசித்து இத்திட்டத்திற்கான தகுதிவாய்ந்த குடும்பங்களைக் கண்டறிய, தேவைப்படும் அளவுகோல்கள் மற்றும் வழிமுறைகளை இந்த அரசு வகுத்து வருகிறது. இந்த வழிமுறைகள் பெருமளவில் விளம்பரப்படுத்தப்படும். தகுதிவாய்ந்த குடும்பங்களைக் கண்டறிந்தபின், இத்திட்டத்தை அரசு திறம்படச் செயல்படுத்தும்.

**கூட்டுறவுக் கடன் தள்ளுபடி**

187) கூட்டுறவு கடன் சங்கங்களில் வழங்கப்பட்ட நகைக்கடன்கள் மற்றும் சுய உதவிக் குழுக்களுக்கான கடன்களை தள்ளுபடி செய்வது இந்த அரசின் முன்னுரிமையாகும். முந்தைய அரசு, தேர்தலுக்கு முன்பாக பயிர்க்கடனைத் தள்ளுபடி செய்வதாக

அறிவித்தது. இத்திட்டத்தின் மொத்தச் செலவு 12,110.74 கோடி ரூபாய் என மதிப்பிடப்பட்டது. முந்தைய அரசால் இந்த அரசின் மீது சுமத்தப்பட்ட மிகப் பெரிய நிதிச்சுமையாக இது அமைந்தது. இதற்காக 4,803.95 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

188) இத்திட்டத்தின் செயல்பாட்டை ஆராய்ந்தபோது பல்வேறு குளறுபடிகள் நிகழ்ந்துள்ள உண்மை தெரிய வருகிறது. சில மாவட்டங்களில் இந்தத் திட்டம் அறிவிக்கப்படுவதற்கு முன்பாகவே சந்தேகத்திற்கு இடமான வகையில் அதிகமான அளவில் பயிர்க்கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. பயிர்க்கடன் தள்ளுபடி பெற்றவர்களின் தகுதியை ஆராய்ந்தபோது அடங்கலில் குறிப்பிட்டுள்ள பரப்பை விட கூடுதலாகவும், அடங்கலில் குறிப்பிடப்பட்டுள்ள பயிர் அல்லாமல் வேறு பயிரும், மேலும் அடங்களில் குறிப்பிடப்பட்டுள்ள பயிருக்கு அனுமதிக்கப்பட்ட கடனை விட கூடுதலாகவும் உள்ளிட்ட பல்வேறு முறைகேடுகள் நிகழ்ந்துள்ளன. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்களைப் பொறுத்தவரையில் மத்திய கூட்டுறவு கடன் சங்கங்களிலிருந்து அனுமதியில்லாமலும், தொகையைப் பெறாமலும், சில சங்கங்களில் கடன்கள் வழங்கப்பட்டன. மேலும், சில சங்கங்களில் திருப்பிச் செலுத்தப்பட்ட பல்வேறு கடன்களின் தொகையைக் கொண்டு பயிர்க்கடனை வழங்கியுள்ளன. இது அவர்கள் ஏற்கெனவே வழங்கிய கடன்களைத் திருப்பிச் செலுத்துவதற்காக புதிய கடன்கள் வழங்கப்பட்டதற்குச் சமமாகும். அதுபோலவே, விவசாய நகைக் கடன்களில் அடமானம் வைக்கப்பட்ட நகைகளின் தரம் மற்றும் தூய்மை சரியாகக் கணக்கிடப்படவில்லை. எனவே, இந்தக் கடன் தள்ளுபடியை தொடர்ந்து அனுமதிக்கும் பட்சத்தில், தவறு செய்தவர்கள் பலரும் பலனைப் பெறக்கூடிய வாய்ப்புகள் நிகழும். எனவே, இந்த முறைகேடுகள் குறித்து தீர ஆராய்ந்து இத்திட்டம் முழுமையாகச் செயல்படுத்தப்படும்.

189) இதுபோன்ற இதர நகைக் கடன்களை தள்ளுபடி செய்யும்போதும் இதே நிகழ்வு பொருந்தும் என்பதால் அதுகுறித்து உரிய விசாரணைக்குப் பிறகு, தள்ளுபடி குறித்து இந்த முடிவு எடுக்கப்படும். அப்போதுதான் தவறு செய்பவர்கள் தவிர்க்கப்பட்டு, உண்மையான பயனாளிகள் பலன் அடைவர்.

190) மகளிர் சுய உதவிக் குழு கடன்களைப் பொறுத்தவரையில், இந்தக் கடன்கள் அனைத்தும் தகுதியான குழுக்களுக்கே சென்றடைந்துள்ளது என்பது முதற்கட்ட ஆய்வில் தெரியவந்துள்ளது. மேலும், இந்தக் குழுக்கள் கோவிட் பெருந்தொற்றுக் காலம் காரணமாக பாதிக்கப்பட்டுள்ளதால், இந்தக் கடன்கள் குறித்து சாதகமான முடிவு எடுக்க இயலும். அதன்படி, கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மூலம் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்பட்ட கடன் தொகை 2,756 கோடி ரூபாய் தள்ளுபடி செய்யப்படும். கூட்டுறவு சங்கங்கள் கடன் வழங்குவதற்கு ஏதுவாக, இச்சங்கங்களுக்கு பல்வேறு கட்டங்களில் நிதி வழங்குவதற்கான நடைமுறையை அரசு வகுக்கும். இதற்காக, 600 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## பெட்ரோல்

191) தமிழ்நாட்டில் 2.63 கோடி இருசக்கர வாகனங்கள் உள்ளன. இவைதான் எளிய உழைக்கும் வர்க்கம் அதிகமாகப் பயன்படுத்தும் போக்குவரத்து முறை. இவர்கள் பெட்ரோல் விலை உயர்வால் கடுமையாகப் பாதிக்கப்படுகிறார்கள். ஒன்றிய அரசு பெட்ரோல் மீதான வரியை அதிகரித்து, மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்காமல் பெருமளவில் பயன் பெற்றதால், பெட்ரோலின் விலை உயர்விற்கு ஒன்றிய அரசேதான் முழுமையாகப் பொறுப்பேற்க

வேண்டும் என்று ஏற்கெனவே எனது உரையில் சுட்டிக்காட்டியுள்ளேன். இருப்பினும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், பெட்ரோல் விலை உயர்வால் பாதிக்கப்படும் ஏழை மற்றும் நடுத்தர வர்க்கத்தின் வலியை உணர்ந்து, பெட்ரோல் மீது விதிக்கப்படும் வரியை 3 ரூபாய் அளவிற்கு குறைக்க ஆணையிட்டுள்ளார் என்பதை இந்த அவைக்குத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். இது, மாநிலத்தில் உள்ள உழைக்கும் வர்க்கத்திற்கும் நடுத்தரக் குடும்பங்களுக்கும் பெரிய நிவாரணமாக அமையும். இதனால் ஆண்டுக்கு 1,160 கோடி ரூபாய் வருவாய் இழப்பு ஏற்படும்.

## பாகம் – ஆ

## வரவு–செலவுத் திட்டத்திற்கான நிதி ஆதாரங்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

192) நான் இதுவரையில், எங்கள் அரசு செயல்படுத்தவுள்ள முக்கியத் திட்டங்களை குறிப்பிட்டுள்ளேன். தற்போது ஒட்டுமொத்த நிதிநிலைமையை விளக்க விழைகிறேன். முந்தைய அரசு, 2021 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் தாக்கல் செய்த 2021–22 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் மொத்த வருவாய் வரவினங்கள் 2,18,991.96 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது, 2020–21 ஆம் ஆண்டுக்கான திருத்த மதிப்பீடுகளைக் காட்டிலும் 21.19 சதவீதம் அதிகமாக இருந்தது. ஆனால் 2020–21 ஆம் ஆண்டு, திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டு இலக்குகளையும் அடையவில்லை. இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டு இலக்குகள், ஏற்கெனவே யதார்த்தமற்றதாக இருந்தது. 2021 ஆம் ஆண்டு மே மற்றும் ஜூன் மாதங்களில் கோவிட்–19 பெருந்தொற்றின் இரண்டாம் அலைக்குப் பின்னர், இந்த இலக்குகளை அடைவது மேலும் கடினமாகியது.

அதன் விளைவாக, இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 2,18,991.96 கோடி ரூபாயாக உள்ள ஒட்டுமொத்த வரி வருவாய் மதிப்பீடுகளை, 2021–22 ஆம் ஆண்டு திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 2,02,495.89 கோடி ரூபாயாகக் குறைக்கும் கட்டாயத்தில் இருக்கிறேன்.

193) மொத்த வருவாய் வரவுகளில், மாநில அரசின் சொந்த வரி வருவாய் பெரும்பகுதியாக உள்ளது. இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 1,35,641.78 கோடி ரூபாயாக இருந்த மாநிலத்தின் சொந்த வரி வருவாய் மதிப்பீடுகள், 2021–22 ஆம் ஆண்டு திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 1,26,644.15 கோடி ரூபாயாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மத்திய வரிகளில் தமிழ்நாட்டின் பங்கு 2021–22 ஆம் ஆண்டு ஒன்றிய வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் நிர்ணயிக்கப்பட்ட 27,148.31 கோடி ரூபாய் அளவிலேயே மதிப்பிடப்பட்டுள்ளது. 2021–22 ஆம் ஆண்டு திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 14,139.01 கோடி ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ள வரி அல்லாத வருவாய், கோவிட்–19 பெருந்தொற்றின் காரணமாக, 2021–22 ஆம் ஆண்டு இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளைக் காட்டிலும் சற்றுக் குறைவாக உள்ளது.

194) 2021–22 ஆம் ஆண்டு இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், நடப்பு ஆண்டிற்கான சரக்கு மற்றும் சேவை வரி இழப்பீட்டுத் தொகை முழுவதும், இழப்பீட்டு மேல்வரி நிதியிலிருந்து மானியமாகப் பெறப்படும் என தவறான கணிப்பின் அடிப்படையில் மதிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், சரக்கு மற்றும் சேவை வரி இழப்பீட்டின் ஒரு பகுதியை மானியமாகவும், மீதமுள்ள தொகையை கடனாகவும் வழங்கும் நடைமுறை, 2021–22 ஆம் ஆண்டிலும் பின்பற்றப்படும் என ஒன்றிய அரசு தற்போது குறிப்பிட்டுள்ளது.

அதன் அடிப்படையில், 2021–22 ஆம் ஆண்டு இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 40,553.45 கோடி ரூபாயாக நிர்ணயிக்கப்பட்ட உதவி மானிய வரவுகள் 2021–22 ஆம் ஆண்டு திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 34,564.42 கோடி ரூபாயாகக் குறைக்கப்பட்டுள்ளது.

195) 2021–22 ஆம் ஆண்டு இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் மொத்த வருவாய் செலவினங்கள் 2,60,409.26 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. 2021 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம், ஓய்வு பெறுவதற்கான வயது 59–லிருந்து 60–ஆக அதிகரித்து அறிவிக்கப்பட்டதால், வருவாய்ச் செலவினத்தில் சில சேமிப்புகள் ஏற்பட்டுள்ளன. மறுபுறம், வாழ்வாதார நிதி உதவித் தொகை மற்றும் கூடுதல் உணவு மானியம் உட்பட, கோவிட் தொடர்பான நிவாரணம் வழங்குவதற்கு மொத்தமாக, 17,618.80 கோடி கூடுதல் செலவினம் அரசிற்கு ஏற்பட்டுள்ளது. 2021–22 ஆம் ஆண்டு திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், சில முக்கியத் திட்டங்களுக்காக கூடுதல் நிதி ஒதுக்கங்களும் செய்யப்பட்டுள்ளன. அதன் அடிப்படையில், 2021–22 ஆம் ஆண்டு திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், ஒட்டுமொத்த வருவாய் செலவினங்கள் 2,61,188.57 கோடி ரூபாயாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

196) கோவிட்–19 பெருந்தொற்றின் அடுத்தடுத்த அலைகளின் தாக்கத்திலிருந்து மாநிலத்தின் பொருளாதாரம் இன்னும் முழுமையாக மீண்டு வராத காரணத்தால், நிதிச் சீரமைப்பு செய்வதற்கான காலம் இன்னும் வரவில்லை. எனவே, 2021–22 ஆம் ஆண்டில் இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் 41,417.30 கோடி ரூபாயாக இருக்கும் என தவறாக கணிக்கப்பட்ட வருவாய்ப் பற்றாக்குறை, 2021–22 ஆம் ஆண்டு திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், உண்மையில் 58,692.68 கோடி

ரூபாயாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது போன்ற அசாதாரணமான காலத்தின் காரணமாக, வருவாய்ப் பற்றாக்குறை அதிகரித்துள்ளது எனவும், இனிவரும் காலங்களில், நிதி ஒழுக்கம் மற்றும் நிதி ஒருங்கிணைப்பில், இந்த அரசின் உறுதியை எள்ளளவும் பாதிக்காது என்பதையும் உறுப்பினர்களுக்கு உறுதியளிக்க விரும்புகிறேன்.

197) நெடுஞ்சாலைத் துறை, நீர்ப்பாசனத் துறை மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில், தவறான நோக்கோடு, முழுமையாக திட்டமிடாத அரைகுறையான பல்வேறு திட்டங்களுக்கு கொரோனா பெருந்தொற்று காலத்தின் போது, மூலதன செலவின பொருளாதார ஊக்குவிப்பு என்ற பெயரில், கடைசி நேரத்தில், தவறான எண்ணத்தில் அரைகுறையான திட்டங்களுக்கு முந்தைய அரசால் ஒப்பளிப்பு அளிக்கப்பட்டன. இத்தகைய திட்டங்களை நாங்கள் கவனமாக ஆராய்ந்துள்ளோம். விரிவான முறையில் செலவின ஆதாய பகுப்பாய்வு அடிப்படையில் உண்மையாகவே பயன்தரக்கூடிய திட்டங்கள் மட்டுமே செயல்படுத்தப்படும். எனவே மூலதனச் செலவினங்களுக்காக இடைக்கால வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட 43,170.61 கோடி ரூபாய் திருத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் 42,180.97 என குறைக்கப்பட்டுள்ளது.

198) இந்த அடிப்படையில், 2021–22 ஆம் ஆண்டு திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் நிதிப் பற்றாக்குறை 92,529.43 கோடி ரூபாய் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. சரக்கு மற்றும் சேவை வரி இழப்பீட்டிற்கு பதிலாக திரும்ப செலுத்தப்படும் கடனாக எதிர்பார்க்கப்படும் 8,095.00 கோடி ரூபாய் இந்த நிதிப் பற்றாக்குறையில் சேர்க்கப்படவில்லை. இந்தக் கடனை மாநில தொகுப்பு நிதியிலிருந்து திரும்ப செலுத்துவதில்லை. இதை, ஒன்றிய

அரசின் பொறுப்பிலுள்ள இழப்பீட்டு மேல்வரி நிதியத்திலிருந்து செலுத்தப்படும்.

199) பதினைந்தாவது நிதிக்குழுவின், நிதி மேலாண்மைப் பாதையின்படி, மாநிலங்களுக்கு 4 சதவீதம் நிதிப் பற்றாக்குறை அனுமதிக்கப்பட்டுள்ளது. மின் துறையில் திருத்தங்களை அரசு மேற்கொண்டால், மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.5 சதவீதம் கூடுதல் கடன் வாங்குவதற்கு அனுமதிக்கப்படும். அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவு 293 (3) –ன் கீழ் மாநிலங்கள் கடன் வாங்குவதன் மீது விதிக்கப்படும் கட்டுப்பாடுகளை இந்த அரசு எதிர்த்தாலும், ஒன்றிய அரசிடமிருந்து பெறப்பட்ட விரிவான வழிகாட்டுதல்களை ஆய்வு செய்தது. அதன் அடிப்படையில், மின் துறையில் மேற்கொள்ளப்படும் சீர்திருத்தத்தினால், 0.5 சதவீத மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில், கூடுதல் கடன் மதிப்பீடான 0.35 சதவீதத்தை, வேளாண் துறைக்கு இலவசமாக மின்சாரம் வழங்கும் நமது அடிப்படையான கொள்கையில் பாதிப்பு ஏற்படாமல் தமிழ்நாட்டால் பெற இயலும் என்று நாங்கள் புரிந்து கொண்டோம். இதன் அடிப்படையில், 2021–22 ஆம் ஆண்டிற்கு நிதிப் பற்றாக்குறை, மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4.33 சதவீதம் என, பதினைந்தாவது நிதிக் குழுவால் வரையறுக்கப்பட்ட ஒட்டு மொத்த விதிகளுக்குள் நிதிப்பற்றாக்குறை கட்டுப்படுத்தப்படும்.

200) எனினும் இது இந்த அரசுக்கு திருப்தி அளிக்கும் சூழ்நிலை அல்ல. கோவிட் –19 பெருந்தொற்று நோயின் தாக்கம் முடிவடைந்தவுடன், தமிழகத்தின் கடன் சுமையை தாமதமின்றி சரி செய்யப்படுவதை உறுதி செய்வதற்கான முக்கிய சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படும். இந்த உறுதி மொழியை தமிழ்நாட்டு மக்களுக்கு இந்த மாமன்றத்தின் வாயிலாக இந்த அரசு அளிக்கிறது.

201) தமிழ்நாட்டின் மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வரி விகிதத்தை அதிகரிப்பதே நாம் மேற்கொள்ள வேண்டிய மிக முக்கியமான சீர்திருத்தம் ஆகும். வெள்ளை அறிக்கையின் மிக முக்கியமான கண்டுபிடிப்பு, 2006–07 ஆம் ஆண்டில் 8.48 சதவீதமாக இருந்த தமிழ்நாட்டின் மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி வரி விகிதம் 2020–21 ஆம் ஆண்டில் வெறும் 5.46 சதவீதம் என 3.02 சதவீதம் வீழ்ச்சியடைந்துள்ளது. தற்போதுள்ள மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில், இது சுமார் 60,000 கோடி ரூபாய்க்கும் மேலான வருவாய் இழப்பைக் குறிக்கிறது. இது இந்த மாநிலத்தால் சரி செய்ய வேண்டிய இழப்பாகும்.

202) கடந்த பத்தாண்டுகளில் நிலவிய தளர்வான வரி நிருவாகம், வருவாய் இழப்புக்கான முக்கிய காரணங்களில் ஒன்றாகும். வணிக வரி மற்றும் பத்திரப் பதிவுத்துறை அமைச்சர், போக்குவரத்துத் துறை அமைச்சர் மற்றும் கலால் அமைச்சர் ஆகிய என் சக அமைச்சர்களின் ஆதரவுடன் வணிகவரி மற்றும் பத்திரப்பதிவு, மோட்டார் வாகன வரி மற்றும் மாநில ஆயத்தீர்வைகள் போன்ற முக்கியமான துறைகளில் வரி நிருவாகத்தை சீரமைக்கும் பணிகளை நாங்கள் மேற்கொண்டு வருகிறோம். மேம்படுத்தப்பட்ட நிருவாகம் மற்றும் வீண்செலவுகளைக் குறைப்பதன் வாயிலாக, வரும் நிதியாண்டில் வருவாய் வசூலை கணிசமாக அதிகரிக்க முடியும் என்று நாங்கள் நம்புகிறோம்.

203) **வணிகவரித் துறை மறுகட்டமைப்பு செய்யப்பட்டு, கூடுதலான மனித வளங்களை களப்பணிக்கு அளிக்கவும், புலனாய்வு மற்றும் தணிக்கைப் பிரிவுகளை வலுவாக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திற்கும் இணங்க ஒரு வணிகவரி மாவட்டம் இருக்கும் விதமாக துறையின் அலுவலகங்கள் மாற்றியமைக்கப்படும். உயர் தரவு பகுப்பாய்வின் மூலம் வரி ஏய்ப்பு**

**செய்வோர் கண்டறியப்பட்டு, உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். ரோந்துப் பணி குழுக்கள் 100 ஆக அதிகரிக்கப்பட்டு பட்டியல் இல்லாமல் செல்லும் வாகனங்களை தடுப்பதற்காக அவர்களுக்கு வாகனங்கள் மற்றும் RFID கருவிகள் வழங்கப்படும். விலைப்பட்டியல் (Bill Traders) வியாபாரிகள் உள்ளிட்ட வரி ஏய்ப்பு செய்வோர் மீது குற்றவியல் நடவடிக்கை உட்பட, கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படும். தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி உள்ளிட்ட பழைய வரிகளில் நிலுவையிலுள்ள 28,000 கோடி ரூபாயை வசூலிக்க எளிமையாக, அரசிற்கு பலனளிக்கக்கூடிய விதமாக "சமாதான் திட்டம்" அறிவிக்கப்படும்.**

204) **மோசடியான ஆவணங்கள் மூலம் ஏமாற்றப்பட்ட உண்மையான உரிமையாளர்களின் துயரத்தை நீக்க 1908 ஆம் ஆண்டு பதிவுச் சட்டத்தை திருத்தி, அத்தகைய ஆவணங்களின் பதிவை இரத்து செய்ய பதிவுத்துறை தலைவருக்கு அதிகாரம் வழங்கப்படும். இதுவரை நிலுவையில் உள்ள இம்மாதிரி மோசடி நிகழ்வுகளுக்கும் இந்த மாற்றம் பொருந்தும். கள நிலவரம் பற்றி ஆராய்ந்து, வழிகாட்டி மதிப்பினை நிர்ணயிப்பதற்கான வழிமுறைகளை பரிந்துரைக்க, ஓர் உயர்மட்டக் குழு அமைக்கப்படும். உரிமை ஆவணங்கள் ஒப்படைப்பு பதிவு மற்றும் வாடகை ஒப்பந்த ஆவணங்களை இணைய வாயிலாகவே பதிவு செய்யும் வசதி ஏற்படுத்தப்படும். 1.1.1975 முதல் மட்டுமே வில்லங்கச் சான்றினை இணையவழியில் பார்க்க முடியும். இந்த வசதி, 1.1.1950 முதல் பதியப்பட்ட அனைத்து ஆவணங்களுக்கும் விரிவு செய்யப்படும். அதற்கு முந்தைய ஆவணங்களும் பட்டியலிடப்பட்டு கணினிமயமாக்கப்படும்.**

205) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கடினமான தருணத்தில், இந்த நிதிநிலை அறிக்கையை நான் தயாரித்தபொழுது எனக்கு உறுதுணையாக இருந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்

கொள்கிறேன். இந்த வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிப்பதில் அவரின் ஈடுபாடும், வழிநடத்தலும் எனக்கு மிகவும் உறுதுணையாக இருந்தது.

206) எனது உரையைத் தொடங்கிய போது நான் கூறியவாறே, எனது முன்னோர்களுக்கு மரியாதை செலுத்தி என் உரையை நிறைவு செய்ய விரும்புகிறேன். முதலில் இந்த மாமன்றத்தில் நிதியமைச்சர்களாக இருந்து நிதிநிலை அறிக்கையை சமர்ப்பித்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் பெரும் தலைவர்களான பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் மற்றும் பேராசிரியர் க.அன்பழகன் அவர்களது புனிதமான பாதையை நானும் பின்பற்றுவதை என் வாழ்க்கையில் கிடைத்த மிகப் பெரும் பேறாகக் கருதுகிறேன். மேலும், என் மீது மிகவும் நம்பிக்கை வைத்து, இம்மாபெரும் பொறுப்பை எனக்கு வழங்கிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

207) நான் தற்போது பயணிக்கும் இப்பாதையை வகுத்துத் தந்த என் முன்னோர்களுக்கு மரியாதை செலுத்த கடமைப்பட்டுள்ளேன். நீதிக் கட்சியின் முன்னோடியும், தென்னிந்திய நல உரிமைகள் சங்கத்தை தோற்றுவித்தவர்களுள் ஒருவரும், அதன் துணைத் தலைவருமான எனது முப்பாட்டனார் திரு. எம்.டி. சுப்ரமணியன் அவர்களையும், இம்மாமன்றம் தொடங்கப்பட்ட 1921 ஆம் ஆண்டின் உறுப்பினரும், அப்போதைய ஆளும் கட்சியின் கொறடாவாகவும், பிறகு நீதிக் கட்சியின் முதலமைச்சராகவும் இருந்த எனது பாட்டனார் தமிழ்வேள் பி.டி.ராஜன் அவர்களையும், இம்மாமன்றத்தின் பேரவைத் தலைவராகவும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் அமைச்சராகவும் இருந்த எனது தந்தை பண்பாளர் பி.டி.ஆர். பழனிவேல் ராஜன் அவர்களையும் வணங்குகிறேன். அவர்கள் இல்லாமல் நான் இன்று இங்கு இல்லை.

208) இந்த திருத்த நிதிநிலை அறிக்கையை வடிவமைத்து தயாரிப்பதில் உறுதுணையாக இருந்து, என்னுடன் ஓய்வின்றிப் பணியாற்றிய, நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ச. கிருஷ்ணன், இ.ஆ.ப. அவர்களுக்கும், அவருடன் திறம்படப் பணியாற்றிய நிதித்துறையின் அனைத்து அலுவலர்களுக்கும், பணியாளர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

209) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2021–2022 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு–செலவுத் திட்டத்திற்கு இந்த அவையின் ஒப்புதலைப் பெற்றுத் தருமாறு தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**நன்றி**

**வணக்கம்**

**முனைவர் பழனிவேல் தியாக ராஜன்**

நிதி மற்றும் மனித வள மேலாண்மைத்
துறை அமைச்சர்

**சென்னை**
**2021 ஆம் ஆண்டு**
**ஆகஸ்ட் திங்கள் 13 ஆம் நாள்**
**திருவள்ளுவர் ஆண்டு 2052**
**பிலவ – ஆடித் திங்கள் 28 ஆம் நாள்**

## இணைப்பு

## இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டம்

2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி நிலை நிருவாகப் பொறுப்புடைமைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் உட்பிரிவு (1)—ன்படி, வரவு—செலவுத் திட்ட அறிக்கையுடன், இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டம் குறித்த அறிக்கை ஒன்றையும், மாநில அரசு சட்டமன்றப் பேரவையில் வைக்க வேண்டும். மேலும், இச்சட்டத்தின், 3 ஆம் பிரிவின் உட்பிரிவு (2)—ன்படி, வருவாய்ப் பற்றாக்குறை, நிதிப் பற்றாக்குறை மற்றும் கடன் மாநில மொத்த உற்பத்தி மதிப்பு விகிதம் போன்ற நிதி நிலைக் குறியீடுகளுக்கான இலக்குகளை அடுத்தடுத்து வரும் ஆண்டுகளுக்குக் குறிப்பிட்டும், அவற்றின் கணக்கீட்டிற்கான அனுமானங்களைத் தெளிவாக விளக்கியும் இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டம் வகுக்கப்பட வேண்டும். 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி நிலை நிருவாகப் பொறுப்புடைமைச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள மேற்சொன்ன விதிகளுக்கிணங்கி, 2021—22 ஆம் ஆண்டு முதல் 2023—24 ஆம் ஆண்டு வரையிலான காலத்திற்கு இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டம் சட்டமன்றப் பேரவை முன் வைக்கப்படுகிறது.

### நோக்கங்கள்

மாநிலத்தின் சமச்சீரான வளர்ச்சி எனும் ஒட்டுமொத்த நோக்கத்தை அடையும் வகையில், அனைத்து தரப்பு மக்களும், குறிப்பாக, ஏழைகள், நலிவடைந்த பிரிவினர் ஆகியோரும் மாநில வளர்ச்சியில் பயன் பெறுவதற்கான உரிய வாய்ப்புகளை ஏற்படுத்திட, வேளாண்மை, தொழில் துறை மற்றும் அடிப்படை உள்கட்டமைப்பு ஆகியவற்றில் முதலீட்டுக்கு தேவையான அடிப்படை நிதி ஆதாரத்தை உருவாக்கி, உயர் பொருளாதார

வளர்ச்சியை அடையுமாறு இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

சமூகப் பாதுகாப்பு, கல்வி, சுகாதாரம் போன்ற பல்வேறு பணிகளுக்கான நலத் திட்டங்களுக்கு இந்த அரசு அதிக அளவில் செலவிட்டு வருவதுடன், சாலைகள் மற்றும் பாலங்கள் கட்டுதல், நீர்ப்பாசனம் மற்றும் மின் திட்டங்கள் போன்ற மூலதனச் செலவினங்களுக்கு உரிய முக்கியத்துவளம் அளித்து வருகிறது.

இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டமானது, கீழ்கண்ட நிதி விதிமுறைகளைப் பின்பற்றி முற்போக்கான நிதி ஒருங்கிணைப்பு மற்றும் கடன் தாங்கும் தன்மைகள் போன்ற இலக்குகளை அடைவதற்கான வரையறைகளை வகுத்துள்ளது.

- நிதிப்பற்றாக்குறை மாநில மொத்த உற்பத்தி மதிப்பில், **2021–22** ஆம் நிதியாண்டில் **4** சதவீதத்திற்குள்ளும், **2022–23** ஆம் நிதியாண்டில் **3.5** சதவீதத்திற்குள்ளும் **2023–24** ஆம் நிதியாண்டு முதல் **3** சதவீதத்திற்குள்ளும் இருக்க வேண்டும்.

- **2021–22** ஆம் ஆண்டு முதல் **2024–25** ஆம் ஆண்டுவரை மின்துறை சீர்திருத்தங்களை நிறைவேற்றும்பட்சத்தில் மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் **0.5** சதவீதம் கூடுதல் கடன் தொகை.

- **15**வது நிதிக்குழுவின் பரிந்துரையின்படி, நிலுவைக் கடன் தொகை மாநில மொத்த உற்பத்தி மதிப்பில், **2021–22** ஆம் நிதியாண்டில் **28.7** சதவீதத்திற்குள்ளும், **2022–23** ஆம் நிதியாண்டில் **29.3** சதவீதத்திற்குள்ளும் **2023–24** ஆம் நிதியாண்டில் **29.1** சதவீதத்திற்குள்ளும் இருக்க வேண்டும்.

- மேலும், வருவாய்ப் பற்றாக்குறையை படிப்படியாக குறைப்பதற்கான நிதி வழிவகைகளும் வகுக்கப்பட்டு வருவதால் பலன்தரும் சொத்துக்கள் உருவாக்கத்திற்கான ஒதுக்கீடு அதிகரிக்கும்.

இதன் நோக்கங்களை அடைவதற்கான வழிமுறைகள்.

❖ நிதி வளங்களை முன்னுரிமைப்படுத்துவதுடன், அதனைப் பெருக்குவதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய்தல்.

❖ செலவினங்களை திறமையாக மேற்கொள்வதுடன், எதிர்பாரா செலவினங்களையும் கணக்கில் கொண்டும், வளர்ச்சியை உருவாக்கும் செலவினங்களில் சமரசம் செய்யாமலும், அதேசமயம் பொறுப்பேற்ற செலவினங்களுக்குமான நிதித் தேவைகளை எதிர்கொள்ளுதல்.

❖ கடன் தாங்குதன்மை வரையறைக்குட்பட்டு வரவுகளுக்கும் செலவுகளுக்கும் இடையில் சமநிலை இருக்குமாறு பரமரித்தல்.

**பொருளாதார நிலை**

**2020–21** ஆம் ஆண்டில், இந்திய பொருளாதாரம் நிலையான நிலையில் **7.3** சதவீத எதிர்மறை வளர்ச்சியுடன் தேக்க நிலையை எதிர் நோக்கியுள்ளது. இருப்பினும், இனி வரும் ஆண்டுகளில், இந்த தேக்க நிலை மறைந்து, போதுமான வளர்ச்சி அடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. நிலையான விலையில் மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பீடு **2020–21** ஆம் ஆண்டிற்கு **2.02** சதவீதமாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது பொருளாதார அதிர்வுகளை மாநில பொருளாதாரம் தாங்கூடிய வகையில் உள்ளது. பன்முக பொருளாதாரம்

மற்றும் நிலையான கொள்கை முயற்சிகளின் காரணமாக இந்த தாங்குதிறன் ஏற்பட்டுள்ளது. நடப்பாண்டு கணிப்புகளைக் காட்டிலும் எதிர் வரும் ஆண்டுகளில் வலுவான வளர்ச்சியை அடைவோம் என நாங்கள் எதிர்பார்க்கிறோம். மாநில மொத்த உள்நாட்டு மதிப்பீட்டின் வளர்ச்சியானது,

15வது நிதிக்குழு பரிந்துரையின் அடிப்படையில் 2022–23 ஆம் ஆண்டில் 11.5 சதவீதமாகவும் மற்றும் 2023–24 ஆம் ஆண்டில் 12.0 சதவீதமாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

**I. வருவாய்க் கணக்கு வரவுகள்**

மத்திய அரசின் நிதி உதவி உட்பட மாநில அரசின் மொத்த வருவாய் வரவுகள் 2021–22 ஆம் ஆண்டின் இடைக்கால வரவு செலவு மதிப்பீடுகளில் கணிக்கப்பட்ட வரவினம் 2,18,991.96 கோடியைக் காட்டிலும் 2021–22 ஆம் ஆண்டின் திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 2,02,495.89 கோடி ரூபாயாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த மதிப்பீடுகள் 2022–23 ஆம் ஆண்டில் 2,30,024.71 கோடி ரூபாயாகவும், 2023–24 ஆம் ஆண்டில் 2,56,208.94 கோடி ரூபாயாகவும் இருக்கும் என மதிப்பிடப்படுகிறது. இது 2022–23 மற்றும் 2023–24 ஆண்டுகளுக்கு முறையே 13.59 சதவீதம் மற்றும் 11.38 சதவீத வளர்ச்சியைக் குறிக்கிறது. இதன் முக்கியக் கூறுகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

**1. மாநில அரசின் சொந்த வரி வருவாய்**

மாநில அரசின் சொந்த வரி வருவாய் 2021–22 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 1,35,641.78 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டிருந்தது.

2021–22 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் இது 1,26,644.15 கோடி ரூபாயாக உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது. மாநிலத்தின் சொந்த வரி வருவாய் 2022–23 ஆம் ஆண்டில் 1,46,044.83 கோடி ரூபாயாகவும், 2023–24 ஆம் ஆண்டில் 1,63,222.95 கோடி ரூபாயாகவும் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மாநில அரசின் சொந்த வரி வருவாயின் முக்கியக் கூறுகள் மற்றும் அதன் தொடர்புடைய அனுமானங்கள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன

- பொருட்கள் மற்றும் சேவைகள் வரியைப் பொருத்தமட்டில் 2015–16 ஆம் ஆண்டில் இருந்த 14 சதவீத வளர்ச்சி, 2021–22 ஆம் ஆண்டு வரை நீடிக்கும் என நம்பப்படுகிறது. பொருட்கள் மற்றும் சேவை வரி வசூலில் தமிழகம் ஓரளவு சிறப்பாக செயல்படுவதாலும், மத்திய அரசிடமிருந்து வரவேண்டிய நிலுவைத் தொகைகள் உரிய நேரத்திற்குள் வரும் என எதிர்பார்க்கப்படுவதாலும் 2021–22 ஆம் ஆண்டு திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு 42,300.19 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. விற்பனைவரி குறிப்பாக, பெட்ரோலியப் பொருட்கள் மீதான விற்பனைவரி வளர்ச்சி விகிதம் அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு குறிப்பிடத்தக்க அளவில் உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

- 2021–22 ஆம் ஆண்டு திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் வணிக வரிகளின் வருவாய் 96,109.66 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. வணிக வரியின் வளர்ச்சி விகிதம் தற்போதைய போக்கின் அடிப்படையில் 2022–23

ஆண்டில் **16.0** சதவீதமாகவும் மற்றும் **2023–24**–ஆம் ஆண்டில் **12.0** சதவீதமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

- **2021–22** ஆம் ஆண்டு திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் மாநில ஆயத்தீர்வைகளின் வருவாய் **8,769.83** கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. தற்போதைய வரி வசூல் போக்கின் அடிப்படையில் மாநில ஆயத்தீர்வைகளில் **2022–23** மற்றும் **2023–24** ஆம் ஆண்டுகளில் **12.0** சதவீதம் கூடுதல் வருவாய் எதிர்பார்க்கப்படுகிறது.

- **2021–22** ஆம் ஆண்டு இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் **14,879.37** கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்ட முத்திரைத்தாள் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணங்கள் மூலமாகக் கிடைக்கும் வரவுகள், **2021–22** ஆம் ஆண்டில் திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் **13,252.67** கோடி ரூபாயாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. பொதுவான பொருளாதார வளச்சியின் அடிப்படையிலும், வரிவசூல் திறம்பட செய்யப்படுவதாலும் இதன் வளர்ச்சி **2022–23** ஆண்டில் **15.0** சதவீதமாகவும் மற்றும் **2023–24**–ஆம் ஆண்டில் **10.0** சதவீதமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

- **2021–22** ஆம் ஆண்டு திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் மோட்டார் வாகன வரிவருவாய் **6,581.75** கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது **2021–22** ஆம் ஆண்டு இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டின் அதே அளவாகும். மோட்டார் வாகன வரிவருவாய் முக்கியமாக வாகனங்களின் பதிவின் மீது விதிக்கப்படுவதால், வரும் ஆண்டுகளில்

வரிவருவாய் பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்ப அமையும். மின் வாகனங்கள் அதிகமாக பதியப்படும் என எதிர்பார்க்கப்படும் நிலையில் அவைகளுக்கு விலக்கு அளிக்கப்பட்டிருப்பதன் தாக்கம் ஒரு காரணியாக கணக்கிடப்பட்டுள்ளது. **2022–23** மற்றும் **2023–24** ஆம் ஆண்டுகளில் **12.0** சதவீத வளர்ச்சி எதிர்பார்க்கப்படுகிறது.

**வரி அல்லாத வருவாய்**

**2021–22** ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், மாநிலத்தின் சொந்த வரி அல்லாத வருவாய் **14,139.01** கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது **2021–22** ஆம் ஆண்டு இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டினை காட்டிலும் **9.65** சதவீதம் எதிர்மறை வளர்ச்சியினைக் காட்டுகிறது. வருவாய் இனங்களை பெருக்க எடுக்கப்பட்ட பல்வேறு நடவடிக்கையினாலும், வரியல்லாத வருவாய் வசூலை மேம்படுத்தும் நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருவதாலும், வரியல்லாத வருவாயில் **2022–23** மற்றும் **2023–24** ஆம் ஆண்டுகளில் **10.0** சதவீத வளர்ச்சி மதிப்பிடப்பட்டுள்ளது.

மத்திய வரிகளில் மாநில அரசின் பங்கு

**2021–22** ஆம் ஆண்டு மத்திய வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளின்படி **2021–22** ஆம் ஆண்டு திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் **27,148,31 4** கோடி ரூபாயாக மத்திய வரியின் மாநில அரசிற்கான பங்கு உள்ளது. இது, **2021–22** ஆம் ஆண்டு இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டின் அதே அளவாகும். **15–வது** நிதிக்குழு, தனது பரிந்துரையில் மத்திய வரிகளில் மாநில அரசிற்கான நிதிப்பகிர்வை **42** சதவீதத்தில் இருந்து **41** சதவீதமாக குறைத்துள்ள போதிலும், மாநிலங்களுக்கிடையேயான இடைப்பட்ட நிதிப்பகிர்வில்

தமிழ்நாட்டின் பங்கு 4.023 சதவீதத்தில் இருந்து 2020–21 ஆம் ஆண்டில் 4.189 சதவீதமாகவும் 2021–22 ஆம் ஆண்டு முதல் 4.079 சதவீதமாகவும் உயர்த்தியுள்ளது. வரும் காலங்களில் இந்தியப் பொருளாதார உண்மையான வளர்ச்சியில் நேர்மறை மாற்றம் ஏற்படும் என்பதை கருத்தில் கொண்டு, மத்திய அரசின் வரிவருவாயில் தமிழ்நாட்டின் பங்கு 2022–23 மற்றும் 2023–24 ஆண்டுகளில் 12 சதவீத வளர்ச்சி இருக்கும் என்னும் அனுமானத்துடன் 2022–23 ஆம் ஆண்டிற்கு 30,406.11 கோடி ரூபாயாகவும், 2023–24 ஆம் ஆண்டிற்கு 34,054.84 கோடி ரூபாயாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

**மத்திய அரசிடமிருந்து பெறும் உதவி மானியங்கள்**

2021–22 ஆம் ஆண்டின் மத்திய வரவு – செலவுத் திட்ட ஒதுக்கீடுகள் மற்றும் தற்போதைய போக்குகளின் அடிப்படையில் 2021–22 ஆம் ஆண்டு திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் மத்திய அரசிடமிருந்து பெறப்படும் உதவி மானியம் 34,564.42 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. 2021–22 ஆம் ஆண்டில் மத்திய அரசு நிலுவைத் தொகைகளை குறிப்பிட்ட காலவரையறைக்குள் விடுவிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. 2022–23 மற்றும் 2023–24 ஆம் ஆண்டுகளில் 10.0 சதவீத வளர்ச்சி இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மத்திய நிதிக்குழு பரிந்துரையின்படியான உள்ளாட்சி அமைப்புகளுக்கான மானியங்கள் போன்ற ஏனைய மத்திய அரசு மானியங்கள் மற்றும் தற்போது செயல்பாட்டிலுள்ள மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களுக்காக பெறப்படவுள்ள மானியங்கள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு இந்த மதிப்பீடுகள் செய்யப்பட்டுள்ளன.

## II. வருவாய்க் கணக்கில் செலவுகள்

**2021–22** ஆம் ஆண்டில் வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் வருவாய் செலவினங்கள் **2,61,188.57** கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது **2021–22** ஆம் ஆண்டு இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளைக் காட்டிலும் **0.30** சதவீதம் அளவிற்கு குறைவான வளர்ச்சியை அடைந்துள்ளது. வருவாய் கணக்கில் செலவினம் **2022–23** ஆம் ஆண்டில் **2,66,400.74** கோடி ரூபாயாகவும், **2023–24** இல் **2,84,196.95** கோடி ரூபாயாகவும் இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இதன் முக்கியக் கூறுகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளது:

- பொறுப்பேற்ற ஊதியச் செலவினங்களுக்காக **2021–22** ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் **63,919.16** கோடி ரூபாய் மதிப்பிடப்பட்டுள்ளது. இது **2021–22** ஆம் ஆண்டு இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளைக் காட்டிலும் **8.66** சதவீதம் குறைந்துள்ளது. ஊதியச் செலவினங்கள், **2022–23** ஆம் ஆண்டிற்கு **67,754.31** கோடி ரூபாயாகவும், **2023–24** ஆம் ஆண்டிற்கு **71,819.57** கோடி ரூபாயாகவும் இருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. **2022–23** மற்றும் **2023–24** ஆம் ஆண்டுக்கான மதிப்பீடுகளில் தற்போதைய போக்கு மற்றும் பொருளாதர நிலையின் அடிப்படையில் மதிப்பிடப்பட்டுள்ளது.

- **2021–22** ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில், சம்பளம் அல்லாத, செயல்பாடுகள் மற்றும்

பராமரிப்பிற்கான செலவினம் **14,618.73** கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது. இச்செலவினம், **2022–23** ஆம் ஆண்டில் **15,203.48** கோடி ரூபாயாகவும், **2023–24** ஆம் ஆண்டிற்கு **15,811.62** கோடி ரூபாயாகவும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

- பொறுப்பேற்ற செலவுகளான, ஓய்வூதியம் மற்றும் ஏனைய ஓய்வுக்காலப் பயன்களுக்கான மதிப்பீடு **2021–22** ஆம் ஆண்டு திருத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் **25,066.20** கோடி ரூபாயாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. பொறுப்பேற்ற செலவுகளான, ஓய்வூதியம் மற்றும் ஏனைய ஓய்வுக்காலப் பயன்களுக்கான செலவினங்களில் **2022–23** ஆம் ஆண்டில் வயது முதிர்வின் காரணமாக ஓய்வு பெறுவதினால் ஏற்படும் செலவினங்களை கருத்திற்கொண்டு **23.75** சதவீதமும் **2023–24** ஆம் ஆண்டுகளில் **10.0** சதவீதமும் கூடுதல் செலவினம் ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

- உதவித் தொகைகளும் மற்றும் நிதி மாற்றங்களுக்கான **2021–22** ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளில் **1,14,632.71** கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது **2021–22** ஆம் ஆண்டு இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளைக் காட்டிலும் **13.30** சதவீத வளர்ச்சியைக் குறிக்கிறது. **2021–22** ஆம் ஆண்டில் பேரிடர் ஆயத்தநிலை / கோவிட்–**19** பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான தடுப்பு நடவடிக்கை மற்றும் கோவிட்–**19** பொதுமுடக்க காலத்தின்பொழுது குடும்ப அட்டைத்தாரர்களுக்கு நிதியுதவி வழங்கிய வகையில் கூடுதல் செலவினம் ஆகியவற்றிற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. உதய் திட்டத்தின்கீழ் மாநில அரசால், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும்

மின் பகிர்மான கழகத்திற்கு 2017–18 ஆம் ஆண்டு முதல் 2021–22 ஆம் ஆண்டு வரையிலான 5 ஆண்டு காலங்களுக்கு 4,563 கோடி ரூபாய் மானியமாக வழங்கப்படுகிறது. தற்போது நடைமுறையிலுள்ள திட்டங்கள் மற்றும், நடைமுறைப்படுத்தப்பட உள்ள புதிய திட்டங்களாலும், 2022–23 ஆம் ஆண்டுக்கான செலவினம் 1,04,323.94 கோடி ரூபாயாகவும் 2023–24 ஆம் ஆண்டுக்கான செலவினம் 1,09,540.14 கோடி ரூபாயாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது. நடைமுறையிலுள்ள திட்டச் செலவினங்களில், மின்சாரம் மற்றும் போக்குவரத்து துறை சார்ந்த பொதுத்துறை நிறுவனங்களின் பொறுப்புகளும் அடங்கும். இதுபோன்ற எதிர்பாரா நிதிச் செலவினங்களும் இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டத்திற்கான மதிப்பீடுகளை தயாரித்து கணிக்கையில் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

### III. மூலதனக் கணக்கு

2021–22 ஆம் ஆண்டு இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் மூலதனச் செலவினத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 43,170.61 கோடி ரூபாயைக் காட்டிலும் 2021–22 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 42,180.97 கோடி ரூபாயாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது 2021–22 ஆம் ஆண்டு இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளைக் காட்டிலும் 2.29 சதவீதம் குறைவாக உள்ளது. இது 2022–23 மற்றும் 2023–24 ஆம் ஆண்டில் 10.0 சதவீதமாக மேலும் உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. மூலதனச் செலவினம் மற்றும் நிகர கடன்களும் முன்பணங்களும் உள்ளிட்ட மூலதன கணக்கிற்கான செலவினம் 2022–23 ஆம் ஆண்டு 46,699.07 கோடி ரூபாயாகவும் 2023–24 ஆம் ஆண்டு 51,838.98 கோடி ரூபாயாகவும் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மாநிலத்தின் நிதி ஒழுக்கத்தை

பராமரிக்கும் அதே வேலையில் வளர்ச்சிக்கான செலவினங்களை தொடர்ந்து அதிகரிப்பதில் இந்த அரசு கொண்டுள்ள உறுதி இதன் மூலம் தெரியவருகிறது

## IV. வருவாய்ப் பற்றாக்குறை மற்றும் நிதிப் பற்றாக்குறை

**2021–22** ஆம் ஆண்டு திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் வருவாய்ப் பற்றாக்குறை **58,692.68** கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது**.** இது **2021–22** ஆம் ஆண்டு இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் மதிப்பிடப்பட்ட வருவாய்ப் பற்றாக்குறை தொகையான **41,417.30** கோடி ரூபாயைக் காட்டிலும் அதிகமானதாகும்**.** வருவாய்ப் பற்றாக்குறையை முறையாக குறைப்பதன் மூலம் வருவாய்ப் பற்றாக்குறை இல்லாத நிலையை அடைவதற்கும், தமிழ்நாடு நிதி நிலை நிருவாகப் பொறுப்புடைமைச் சட்டத்தில் கூறப்பட்ட நெறிமுறைகளை பின்பற்றி, நிதிநிலை மேம்பாடு மற்றும் கடன் தாங்குதன்மையை உறுதி செய்யும் வகையிலும் இடைக்கால நிதி நிலவரத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது**.** வருவாய் மற்றும் செலவினங்களுக்கிடையே சமன்நிலையை பேணுவதன் மூலம் இந்த நிலையை அடைய எண்ணப்பட்டுள்ளது. இதற்காக வருவாய் ஆதாரங்களை மேம்படுத்த தேவையான வழிமுறைகளை ஆராய முன்னுரிமை வழங்கப்படும். மேலும் வளர்ச்சிக்கான செலவினங்களுக்கு அதிகமாக ஒதுக்கீடு செய்வது மற்றும் வருவாய் செலவினங்களை சரியான முறையில் பயன்படுத்தும் பல்வேறு சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொண்டு செலவினங்களுக்குரிய தரத்தை மேம்படுத்த எண்ணப்பட்டுள்ளது. **2021–22** ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு–செலவுத் திட்டத்தில் மதிப்பிடப்பட்ட வருவாய்ப் பற்றாக்குறைக் காட்டிலும் **2022–23** ஆம் ஆண்டில் வருவாய்ப் பற்றாக்குறை **36,376.03** கோடி ரூபாயாகக் குறையும். இது, **2023–24** ஆம் ஆண்டில் **27,988.01**

கோடி ரூபாயாக மேலும் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது மூலதனச் செலவிற்கு அதிக இடம் தரும் வகையில் உள்ளது.

15வது நிதிக்குழு, நிதிப்பற்றாக்குறைக்கும் மாநில மொத்த உற்பத்தி மதிப்பீட்டிற்கும் உள்ள விகிதத்தை 2022–23 ஆம் ஆண்டில் 3.5 சதவீதமாகவும் 2023–24 ஆம் ஆண்டில் 3.0 சதவீதமாகவும் பராமரிப்பதற்கு மாநில அரசுகளுக்கு அனுமதி அளித்துள்ளது. மேலும், மின்துறை சீர்திருத்தங்களை நிறைவேற்றும்பொருட்டு 2021–22 ஆம் ஆண்டு முதல் 2024–25 ஆம் ஆண்டு வரை மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் 0.5 சதவீதம் கூடுதலாக பெறுவதற்கு வழிவகை செய்துள்ளது. 2021–22 ஆம் ஆண்டு திருத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளில் மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் நிதிப்பற்றாக்குறை விகிதம் 4.33 சதவீதமாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. வரும் ஆண்டுகளில் மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் நிதிப் பற்றாக்குறை விகிதம் 2022–23 ஆம் ஆண்டில் 3.49 சதவீதம் மற்றும் 2023–24 ஆம் ஆண்டில் 2.99 சதவீதமாக இருக்கும். இது 15வது நிதிக்குழு பரிந்துரைத்த இலக்கிற்குள் உள்ளது.

## V. கடன்கள்

மத்திய அரசு நிர்ணயிக்கும் ஒட்டுமொத்தக் கடன் வரம்பின் அடிப்படையில், கடன் வரவுகள் மற்றும் திரும்பச் செலுத்துதல் மதிப்பிடப்பட்டுள்ளன. 2021–22 ஆம் ஆண்டில் மாநில அரசு 92,484.50 கோடி ரூபாய் அளவிற்கு நிகரக் கடன் பெற திட்டமிட்டுள்ளது. இதில் சரக்குகள் மற்றும் சேவைவரி இழப்பீட்டிற்கு ஈடாக மத்திய அரசால் வழங்கப்பெறும் 8,095 கோடி ரூபாய் அடங்காது. 2022 ஆம் ஆண்டு மார்ச்சு 31 ஆம் நாளது வரையிலான நிலுவைக் கடன், 2020–21 மற்றும் 2021–22 ஆம் ஆண்டுகளில் மத்திய அரசிடமிருந்து சரக்கு மற்றும் சேவை வரி இழப்பீட்டுத் தொகைக்கு மாறாக கடனாக பெறப்பட்ட

தொகை நீங்கலாக **5,77,987** கோடி ரூபாயாக இருக்கும். இது, **2021–22** ஆம் ஆண்டு மாநில மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் **27.05** சதவீதமாக இருக்கும். மாநில மொத்த உற்பத்தி மதிப்பீட்டின் சதவீதத்தில் நிலுவையிலுள்ள மொத்தக் கடன் **2022–23** ஆம் ஆண்டில் **27.76** சதவீதமாகவும், **2023–24** ஆம் ஆண்டில் **27.79** சதவீதமாகவும் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது **15–**வது நிதிக்குழு பரிந்துரைத்த இலக்கிற்குள் உள்ளது. எனவே, நிதி மேலாண்மையின் ஒரு பகுதியாக கடன் தாங்குதன்மை இருக்க வேண்டும் என்பது மாநில அரசின் நோக்கமாகும்.

## VI. கடன் உத்திரவாதங்கள்

ஒவ்வொரு ஆண்டிலும் நிலுவையிலுள்ள அரசு உத்திரவாதங்கள் முந்தைய ஆண்டின் மொத்த வருவாய்க் கணக்கு வரவுகளில் **100** சதவீத அளவு அல்லது மாநில மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் **10** சதவீத அளவு, இவற்றில் எது குறைவானதோ அந்த அளவிற்குள் அமையப்பெற வேண்டும். **2021** ஆம் ஆண்டு மார்ச் திங்கள் **31** ஆம் தேதி அன்று உள்ளபடி நிலுவையிலுள்ள அரசு உத்திரவாதங்களின் அளவு, முந்தைய ஆண்டின் மொத்த வருவாய் வரவுகளில் **31.08** சதவீதமாகவும், மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் **2.79** சதவீதமாகவும் உள்ளது. ஒவ்வொரு ஆண்டிலும் மீளப்பெறும் சாத்தியக் கூறுகளின் அடிப்படையில் (Risk weighted) கணக்கிடப்பட்ட நிலுவையிலுள்ள அரசு உத்திரவாதங்கள் முந்தைய ஆண்டின் மொத்த வருவாய்க் கணக்கு வரவுகளில் **75** சதவீதம் அல்லது மாநில மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் **7.5** சதவீதம் இவற்றில் எது குறைவானதோ அந்த அளவிற்குள் அமையப்பெற வேண்டும். **2021** ஆம் ஆண்டு மார்ச் திங்கள் **31** ஆம் தேதி அன்று உள்ளபடி மீளப்பெறும் சாத்தியக் கூறுகளின் அடிப்படையில் கணக்கிடப்பட்ட நிலுவையிலுள்ள அரசு உத்திரவாதங்களின் (Risk

weighted guarantees) அளவு, முந்தைய ஆண்டின் மொத்த வருவாய் வரவுகளில் **11.83** சதவீதமாகவும் மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் **1.06** சதவீதமாகவும் உள்ளது.

**முடிவுரை**

தற்போது பொருளாதார மந்தநிலை நிலவினாலும், வரும் ஆண்டுகளில் நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சியை நோக்கிச் செல்லும் என எதிர்பார்க்கப்படுகிறது. தற்போதைய பொருளாதார மந்த நிலையிலும், நாட்டின் பொருளாதார வளர்ச்சியை ஒப்பிடும் போது, தமிழகம் உயர் பொருளாதார வளர்ச்சியை பெற்றுள்ளது. வரும் ஆண்டுகளில் இந்த வளர்ச்சி மேலும் வலுப்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வள ஆதாரங்களை கூட்டுதல் மற்றும் திறன்மிக்க வரிவசூல் நடவடிக்கைகள் ஆகியவற்றின் மூலமாக மாநிலத்தின் மொத்த வருவாயை வலுவான நிலையில் பராமரிக்க இயலும். வளர்ச்சிக்கான செலவினங்களின் மீது முதலீடு செய்யும் அதே வேளையில், நிதி சேர்ப்பு நடவடிக்கையை அடிப்படை கொள்கையாக கொண்டு, கடன் நிலைத்தன்மை மற்றும் வருவாய் மற்றும் செலவினங்களுக்கிடையேயான நிதி சமநிலையை உறுதி செய்வதன் மூலம், தமிழ்நாடு நிலை நிருவாகப் பொறுப்புடைமைச் சட்டத்தின் வரையரைகளின்படி வருவாய் பற்றாக்குறையை வரும் காலங்களில் குறைக்க இயலும் என எதிர்பார்க்கப்படுகிறது.

*********